Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

தினமுரசு

THINAMURASU

அற்புதன் அச்சகம்

அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811

373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு – 04 திருவள்ளுவர் ஆண்டு 2045 சித்திரை 24 புதன்கிழமை (07.05.2014) பக்கங்கள் 20 ஓசை – 218

உறவுகளை இழந்த குழந்தைகளை தத்தெடுக்க அவுஸ்ரேலியா திட்டம்

(கொழும்பு)

யுத்தத்தால் உறவுகளை இழந்த குழந்தைகளைத்தத்தெடுக்கும் உதவித் திட்டமொன்றை அவுஸ்ரேலியா அறிமுகம் செய்துள்ளது.

இத்திட்டத்தின் மூலமாக வடக்கில் உறவுகளை இழந்த குழந்தைகள் இத்திட்டத்தில் உள்வாங்கப்படுவதற்கு வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது.

இத்திட்டம் தொடர்பான பொருத்தமான முதலாவது ஆரம்ப அறிவித்தலை அவுஸ்ரேலிய அரசு வெளியிட்டிருக்கிறது ஏனைய விபரங்கள் விரைவில் வெளிவரவிருக்கிறது.

இதுதொடர்பான ஆய்வுகளை மேற்கொண்ட பின்னர் தத்தெடுப்பதற்கு தகுதியான குழந்தைகள் குறித்த விபரங்கள் வழங்கப்படும் என்று அவுஸ்ரேலிய அரச வானொலி சேவை தெரிவித்துள்ளது.

யுத்தத்தால்பாதிக்கப்பட்ட இலங்கை, வியட்நாம், கம்போடிய, மற்றும் கென்யா, பல்கேரியா, லட்வியா உள்ளிட்ட வளர்ந்து வரும் நாடுகளில் இருந்து இவ்வாறான தெரிவு செய்யப்பட்ட குழந்தைகள் தத்தெடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதவிர, தென்னாபிரிக்காவில் இருந்தும் குழந்தைகளை தத்தெடுப்பது குறித்து பரிந்துரைகள் வழங்கப்பட்டுள்ளதாக அவுஸ்ரேலிய பிரதமர் டொனி அபட் தெரிவித்துள்ளார்.

துப்பாக்கி ரவைகள் ஐயாயிரம் தாவடியில் மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.தாவடி தெற்குப் பகுதியிலுள்ள வெற்றுக் காணி ஒன்றில் இருந்து பழைய தோட்டாக்கள் மற்றும் வெடிமருந்துகள் மீட்கப்பட்டுள்ளதாக பலாலி இராணுவத் தலைமையகம் நேற்று உறுதிப்படுத்தியுள்ளது.

ஜே - 192 கிராம அலுவலர் பிரிவிற்குள் அமைந்துள்ள இந்தப் பிரதேசத்திலிருந்து யூரியா பையினுள் கட்டப்பட்டிருந்த 5 ஆயிரம் ரி.56 துப்பாக்கி ரவைகள், இதர தோட்டாக்கள் மற்றும் வெடிமருந்துகள் என்பன மீட்கப்பட்டதாக இராணுவத்தினர் தெரிவித்தனர்.

குறித்த காணியினை காணி உரிமையாளர்கள் துப்புரவு செய்த போது, ஆயுதங்கள் இருப்பதைக் கண்ணுற்று 511 ஆவது படைப் பிரிவு இராணுவத்தினருக்குத் தெரியப்படுத்தியதனைத் தொடர்ந்து இராணுவத்தினர் அவ்விடத்திற்குச் சென்று குறித்த ஆயுதங்களை மீட்டுள்ளனர்.



அணுசக்தி தொழில்நுட்பம் இந்திய-இலங்கை ஒப்பந்தம்

இருதரப்பு பேச்சுக்களில் முன்னேற்றம்

(கொழும்பு)

அணுசக்தித் தொழில் நுட்பத்தை பரஸ்பரம் பகிர்ந்து கொள்ளும் நோக்குடனும் இத்தொழில் நுட்பத்தை குடியியல் நோக்கத்துக்காக பயன்படுத்துவது குறித்தும் இலங்கையும் இந்தியாவும் ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொள்ளவுள்ளன. மிகவும் பெறுமதி வாய்ந்த இந்த ஒப்பந்தம் தொடர்பான இருதரப்பு பேச்சுக்களில் இப்போது கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து இந்த ஒப்பந்தம் மிக விரைவில் கைச்சாத்திடுவதற்கான வாய்ப்புக்கள் உருவாகியுள்ளது.

அதேவேளை இந்தியா மற்றும் இலங்கைக்கு இடையிலான சிவில் அணுசக்தி ஒத்துழைப்புக் குறித்து, இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தை இடம்பெற்றுள்ளதாக கொழும்பிலுள்ள இந்திய தூதரகம் நேற்று தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்றுமுன்தினமும், நேற்றும் இந்தப் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது:

இந்திய அணுசக்தித் துறைப் பிரதிநிதிகளைக் கொண்ட குழுவுக்கு இந்திய வெளிவிவகார அமைச்சின் இணைச்செயலாளர் (ஆயுதப் பரிகரணம்) அமர்தீப் சிங் தலைமை வகித்தார்.

இலங்கை அணுசக்தி அதி


19 ஆம் பக்கம் பார்க்க

கறுப்பு பட்டியலை அமுல் செய்ய அவுஸ்ரேலியாவிடம் கோரிக்கை

(சிட்னி)

அரசினால் வெளியிடப்பட்ட கறுப்புப்பட்டியலை அமுல் செய்யும் படியும் பயங்கரவாத நிதி கொடுக்கல் வாங்கல்களை தடுக்க ஒத்துழைப்பு வழங்குமாறும் அவுஸ்ரேலியாவிடம் இலங்கை அரசாங்கம் கோரிக்கை விடுத்துள்ளது. அவுஸ்ரேலியாவிற்கு விஜயம் செய்துள்ள இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார். அவுஸ்ரேலிய வெளிவிவகார அமைச்சர்

19 ஆம் பக்கம் பார்க்க



உள்ளூராட்சி சபைகளுக்கு புதிய அதிகாரிகள் நியமனம்

வடமாகாணத்தில் உள்ளூராட்சி சபைகளிற்கு வினைத்திறன் மற்றும் செயல்திறன் வாய்ந்த நான்கு அதிகாரிகளுக்கு யாழ். மாவட்டத்தில் பிரதேச சபை செயலாளர் நியமனம் இன்று வழங்கப்படவுள்ளது.

வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ. சந்திரசிறியினால் இந்த புதிய நியமனங்களும் இடமாற்றங்களும் இன்று வழங்கப்படவுள்ளன.

இரண்டு பேர் பட்டதாரி தரத்திலான உள்ளூராட்சி உதவியாளர்களும் இரு முகாமைத்துவ தரத்திலான உதவியாளர்களுமாக நால்வருக்கு இன்று காலை 10 மணிக்கு ஆளுநர் அலுவலகத்தில் வைத்து நியமனக் கடிதங்கள் கையளிக்கப்பட்டவுள்ளன.

ஆளுநர் அலுவலகத்தில் கடமையாற்றிய உள்ளூராட்சி உதவியாளர் திருமதி ஜெந்தா

19 ஆம் பக்கம் பார்க்க

டுவிட்டரில் ஜனாதிபதி நாளை பதிலளிப்பார்

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நாளை 8 ஆம் திகதி டுவிட்டர் சமூக வலைத்தளத்தின் ஊடாகபொது மக்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கவுள்ளார்.

நாளை வியாழக்கிழமை 11.30 மணியளவில் அம்பாந்

19 ஆம் பக்கம் பார்க்க

வல்லையில் கைக்குண்டு மீட்பு

யாழ். வல்லைப் பகுதியிலுள்ள வீட்டு வளாகமொன்றிலிருந்து கைக்குண்டொன்று நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை மீட்கப்பட்டதாக அச்சுவேலி பொலிஸார் நேற்று தெரிவித்தனர்.

இது தொடர்பில் அவ்வீட்டு உரிமையாளர் பொலிஸாருக்கு தகவல் வழங்கியதைத் தொடர்ந்து,

19 ஆம் பக்கம் பார்க்க

யாழ். பல்கலைக்கழகம் அடுத்த வாரம் மூடப்பட்டிருக்கும் மாணவர் விடுதிகளுக்கும் பூட்டு

யாழ்ப்பாண பல்கலைக்கழகம் எதிர்வரும் 16ஆம் திகதியிலிருந்து எதிர்வரும் 21ஆம் திகதிவரை மூடப்பட்டிருக்கும் என மாணவர்களுக்கு பல்கலைக்கழக நிர்வாகம் அறிவித்துள்ளது.

பல்கலைக்கழகத்தின் அனைத்துப் பீடங்களிலும் மற்றும் மாணவர்கள் விடுதிகளிலும் இது தொடர்பான அறிவித்தல் ஒட்டப்பட்டுள்ளன.

அத்துடன், விடுதிகளில் தங்கியிருக்கும் மாணவர்கள் விடுதிகளை விட்டு வெளியேற வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்படுவதாகவும் துண்டுப்பிரசுரங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச இளைஞர் மாநாடு நேற்று உற்சாக ஆரம்பம்



சர்வதேச இளைஞர் மாநாடு நேற்றைய தினம் அம்பாந்தோட்டை மாகம்றுகுணுபுற சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஆரம்பமாகியது.

இதில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் பிரதமர்,நாடாளுமன்ற உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

திருமலையில் தேடுதல்

(திருமலை)


திருகோணமலை மாவட்டம் ஈச்சிலம்பத்தை பிரதேசத்திலுள்ள கடலோர கிராமங்களில் நேற்று இராணுவம், கடற்படை மற்றும் பொலிஸார் இணைந்து கூட்டு தேடுதல் நடவடிக்கையொன்றில் ஈடுபட்டனர்.

அந்தப் பிரதேசத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை ரி- 56 ரக துப்பாக்கி மீட்பு மற்றும் சந்தேகத்திற்குரிய இருவரது நடமாட்டம் அவதானிக்கப்பட்டதையடுத்தே இந்தத் தேடுதல் மேற்கொள்ளப்பட்டதாக பாதுகாப்பு தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்ற போதிலும் சந்தேகநபர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது. ஈச்சிலம்பத்தை பிரதேசத்திலுள்ள கடலோர கிராமங்களான வாழைத்தோட்டம், புண்ணையடி, முட்டுச்சேனை

19 ஆம் பக்கம் பார்க்க

உள்ளே ☞ க.பொ.த. (சா/த) மாதிரி வினாத்தாள்

நிர்வாக கிராம அலுவலராக செ.சிவபாலன் பதவி உயர்வு



வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பிரிவில் உள்ள வட்டு தெற்கு பிரிவில் கடமையாற்றிய கிராம அலுவலர் செல்லன் சிவபாலன் கிராமஉத்தியோகத்தர் சேவையின் அதி சிறப்பு தரத்திற்கு உயர்த்தப்பட்டிருக்கிறார்.

அதிசிறப்பு தரத்துக்கு உயர்த்தப்பட்டதைத் தொடர்ந்து இவர் நிர்வாக கிராம அலுவலராக பதவி உயர்த்தப்பட்டதுடன், சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்கு கடமைக்காக இடமாற்றம் செய்யப்பட்டிருக்கிறார்.

கடந்த வாரம் இவர் தனது நிர்வாக கிராம அலுவர் கடமையைப் பொறுப்பெடுத்து அங்கு பெரும் வரவேற்புடன் கடமையாற்றி வருகிறார்.

கடந்த 1982 ஆம் ஆண்டு விசேட சேவை உத்தியோகத்தராக அரச சேவையில் இணைந்த இவர் 1987 ஆம் ஆண்டு கிராம அலுவர் சேவையில் இணைந்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் பூநகரியிலும், யாழ்.மாவட்டத்தில் நல்லூரிலும், வலி.மேற்கிலும் சிறந்த சேவையை இவர் வழங்கியிருந்தார். (க)

ஆசிரிய இடமாற்றத்தால் அவலமுறும் வடக்கு மாகாணம்

– தமிழர் ஆசிரியர் சங்கம் கவலை

(யாழ்ப்பாணம்)

ஆசிரிய இடமாற்றத்தால் வடக்கு மாகாணம் அவலப்படுவதாக இலங்கைத் தமிழராசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக விடுத்துள்ள அறிக்கையில்,

மாணவர்களின் நலன் கருதி பாடசாலை தொடங்குவதற்கு முன்னர் வருடத் தொடக்கத்தில் செய்யப்படவேண்டிய ஆசிரிய இடமாற்றங்கள் வடக்கு மாகாணத்தில் மட்டும் உரிய காலங்களில் செய்யப்படாததால் ஒவ்வொரு வருடமும் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு அவலப்படவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

தாபன விதிக்கோவையின் பிரகாரம் ஒரு வருடத்தின் ஆரம்பத்திலேயே இடமாற்றங்கள் செய்யப்படவேண்டும். மாறாக வருடத்தின் முழு நாளும் இடமாற்றம் என்ற கொள்கை வடக்கு மாகாணத்தில் மட்டும் அமுலில் உள்ளது.

இதற்காக ஜனவரி முதல் இன்று வரை ஆசிரியர்கள் அலைந்து திரிவதும், பதிலீடாக அசிரியர்களின் பட்டியல்களை வெளியிடுவதும் மேன்முறையீடுகள் செய்வதும் வழக்கமாகிவிட்டது. இதற்கிடையில் சில வலயங்களில் மேலதிக ஆசிரியர்கள் இருப்பதாகவும் அவர்களுக்கான கட்டுநிதி மே மாதத்தில் இருந்து நிறுத்தப்படும் என்றும் மாகாணக் கல்விப் பணிப்பாளர் அறிவுறுத்தியுள்ளமை யாருடைய ஆலோசனையின் பெயரில் என்ற வினாவும் இங்கு தோன்றுகின்றது.

வடக்கு மாகாணத்தில் உள்ள ஆசிரிய ஆளணி தவிர்ந்த கல்விசார் ஆளணியினரின் வெற்றிடங்கள் நிறையவே உள்ளன. அவற்றுள் உதவிக்கல்விப்பணிப் பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், அதிபர்கள், பிரதி அதிபர்கள், உப அதிபர்கள், வளநிலையங்களின் ஆளணியினர் என பலதரப்பட்ட வெற்றிடங்கள் ஏராளமாக உள்ளன.

இவ்வெற்றிடங்கள் எல்லாம் ஆசிரியர்களைக் கொண்டே நிரப்பப்பட்டுள்ளன. ஆனால் வடமாகாணத்தில் உள்ள ஆசிரியர்களின் மொத்தக் கண்கெடுப்பின்படி இவ்வகை சார்ந்தவர்களும் ஆசிரியர்களாகக் கணிக்கப்பட்டு ஆசிரிய ஆளணி மதிப்பீடு செய்யப்படுகின்றது.

மாகாணக் கல்வி அமைச்சு தகவலின்படி 2014 ஆம் ஆண்டில் உள்ள மாணவர் தொகைக்கு ஏற்ப உதவிக்கல்விப்பணிப் பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், அதிபர்கள், பிரதி அதிபர்கள், உப அதிபர்கள், வளநிலையங்களின் ஆளணியினர், ஆசிரிய கலாசாலைகளில் பயிற்சியில் உள்ள ஆசிரியர்கள் உள்ளடங்கலாக

யாழ்பாணக் கல்வி வலயத்தில் தேவையான ஆசிரிய ஆளணி 2018. தற்போது உள்ள தொகை 2234 இவர்களுள் 169 பேர் மேற்கூறப்பட்ட தேவைகளில் உள்ளவர்கள். இதைவிட வேறு வலயங்களில் இருந்து நிபந்தனை அடிப்படையில் கடமையாற்றுவோரும் மேலதிக ஆளணிக்குள் அடங்குகின்றனர்.

அவ்வாறே ஒவ்வொரு வலயத்திலும் ஆசிரியப் பணிக்கு மேலதிகமான பணிகளைச் செய்வோர் ஏராளமாக உள்ளனர். இவர்களின் வெற்றிடங்கள் நிரப்பப்படாதவிடத்து மேலதிக ஆளணியைச் சுட்டி காட்டும் ஆனால் கடமையில் உள்ளவர்கள் குறைவானவர்களாகவே இருப்பர்.

இதைவிட நகர்ப்புற வலயங்களில் 55 வயதிற்கு மேற்பட்டவர்கள் பெரும்பான்மையாக இருப்பதாகவும் புதிய ஆசிரியர்களின் நியமனங்கள் நடைபெறுவற்கு அவை தடையாக இரப்பதாகவும் அறியப்படுகின்றது.

இதற்கிடையில் கடமையில் உள்ள ஆசிரியர்களுக்கு வழங்கப்படவேண்டிய இடமாங்கள் உரிய சாலங்களில் வழங்கப்படாமல் இருப்பதும், சம்பளம் நிறுத்துவதற்கான அறிவித்தல்கள் வெளியாவதும் ஆசிரியர்கள் மனதில் பாரிய தாக்கத்தினை ஏற்படுத்துகின்றன.

பலநோக்கு கூட்டுறவுச் சங்க பொலிகண்டிக்கிளை பூட்டு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை பல நோக்கு கூட்டறவுச் சங்கத்தின் பொலிகண்டி கிளை நீண்ட நாட்களாக காரணம் எதுவுமின்றி பூட்டப்பட்டுள்ளதால் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வரலாற்று பிரசித்தி பெற்ற பொலிகண்டி கந்தவனக்கடவை கல்யாண வேலர் ஆலய சூழலில் அமைந்துள்ள பொலிகண்டி சங்கக்கிளை இலக்கம் 20 சுமார் 20 நாட்களுக்கு மேலாக பூட்டப்பட்டு காரண மேதுமின்றி அக்கடையிலுள்ள உலர் உணவுப் பொருட்கள் யாவும் திடீரென ஏற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

முன்னறிவித்தல் ஏதுவுமின்றி பூட்டப்பட்டுள்ள மக்கள் கடைக்கு மேற்படி ஆலயத்திற்கு வரும் அடியவர்கள் மற்றும் பொதுமக்கள் நியாய விலையில பொருட்களை இலகுவாகப் பெற்றுக்கொள்ள முடியாமல் தனியார் கடைகளுக்கு நாட வேண்டியுள்ளதாகவும் சுட்டிக் காட்டுகின்றனர்.

இதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டிய மக்களால் தெரிவு செய்யப்பட்ட கிளையின் பொலிகண்டி சங்க இயக்குனர் சபையினர் அசமந்தப்போக்கினைக் கடைப்பிடித்துவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(116)

"குமுறல்" கவிதை தொகுப்பு நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

திருமதி சுபாஷினி பிரணவனின் 'குமுறல்' கவிதைத்தொகுப்பு நூல் வெளியீட்டுவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் செங்குந்தா இந்துக்கல்லூரி ஆசிரியர் திருமதி வாசுகி சதாகரன் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்விப்பணிப் பாளர் வ.செல்வராசா கலந்துகொண்டார். இந்நிகழ்விற்கு வரவேற்புரையினை முத்துத்தம்பி மகா வித்தியாலய ஆசிரியர் திருமதி இந்துமதி தயாபரன் நிகழ்த்தினார். வெளியீட்டுரையை கோப்பாய் ஆசிரியர் கலாசாலை ஓய்வுநிலை விரிவுரையாளர் கலாநிதி பண்டிதர் செ.திருநாவுக்கரசு நிகழ்த்தினார். நூல் மதிப்பீட்டுரையை கு.பாலசண்முகம் வழங்கினார்.

(63)

டைனமற் பயன்படுத்தி பிடிக்கப்பட்ட மீன்கள் பறிமுதல்

(யாழ்ப்பாணம்)

டைனமற் பாவிக்கப்பட்டு பிடிக்கப்பட்ட ஒரு தொகுதி மீன்கள் யாழ்.கொட்டடிப்பகுதியில் வைத்து யாழ்.கடற்றொழில் நீரியல்வளத் திணைக்கள அதிகாரியினால் நேற்றுக்காலை கைப்பற்றப்பட்டது.

இது தொடர்பில் நாவாந்துறை மற்றும் குருநகரைச் சேர்ந்த நால்வர் பிடிக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

குருநகரைச் சேர்ந்த கடற்றொழிலாளர்கள் இருவரினால் இவ்வாறு டைனமற் பயன்படுத்தப்பட்டு பிடிக்கப்பட்ட 50 கிலோ மீன்கள் கொட்டடியில் நாவாந்துறையைச் சேர்ந்த இருவருக்கு விற்பனை செய்யப்பட்ட நிலையில் இந்த மீன்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இவ்வாறு பிடிக்கப்பட்ட மீன்களையும் விற்பனை செய்தவர்களுக்கெதிராக யாழ். நீதிமன்றத்தில் கடற்தொழில் நீரியல் வளத் திணைக்களத்தினரால் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கைப்பற்றப்பட்ட மீன்கள் நேற்று நீதிமன்றத்தில் பாரப்படுத்தப்பட்டுள்ளதனையடுத்து யாழ்.நீதிமன்றத்தினால் சந்தேக நபர்கள் எதிர்வரும் 6 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளதுடன், கைப்பற்றப்பட்ட மீன்களை அழிக்குமாறு உத்தரவிட்டதாக யாழ்.கடற்தொழில் நீரியல் வளத்திணைக்கள உதவிப்பணிப்பாளர் ந.கணேசமூர்த்தி தெரிவித்துள்ளார்.

(பா)

சிறுவிளம்பரங்கள்

வேலைவாய்ப்பு

நிரந்தரமான தொழில், நிரந்தரமான சம்பளத்துடன் 24,000.00 - 38,000.00 வரை. வருகைதரும் தினமே சேர்த்துக்கொள்ளப்படுவர். (உற்பத்தி பொதியிடல், மேற்பார்வையாளர்) சாப்பாடு, தங்குமிட வசதியுண்டு. 18 - 55 வரையான ஆண், பெண்களும் குழுக்களாகவும் இணைந்து கொள்ளலாம். 071 085 4068.

விமான நிலையம் (தனியார்) பகுதிக்கு சுத்திகரிப்பாளர், பாதுகாப்பாளர், பெக்கிங் 18 - 55 வரையான ஆண், பெண் தேவை. சம்பளம் 18,000.00, 35,000.00 வரை. தங்குமிடம், உணவு, பயிற்சி வழங்கப்படும். வேலை தேடி அங்கும் இங்கும் அலையாமல் இன்றே அழையுங்கள். 077 596 4299 (R/348)

டயானா பிளாஸ்ரிக்

நீசைக்கிள் (மீள் சுழற்சி)

அனைத்து வகையான கழிவு பிளாஸ்ரிக், பொலித்தீன், என்பன விலைக்கு வாங்கப்படும். ரூபா 30 தொடக்கம் ரூபா 70 வரை.

இல.06 கனகசபை லேன், சிவலிங்கப்புளியடி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். 021 222 8680, 077 592 5088. (C/3595)

ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 1055

திகதி 05.05.2014

வெற்றி எண்கள் ஆங்கில எழுத்து

04 15 48 64 N

ஜக்பொட் பரிசு ரூ. 2,81,12,140/= வெல்லப்படவில்லை

பரிசு அமைப்பு	வெற்றி பெற்றோர்	பரிசுத் தொகை	முழு பரிசுத் தொகை
4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால்	0	2,81,12,140/=	ரூ. -
4 இலக்கங்கள் பொருந்தினால்	1	10,00,000/=	ரூ. 10,00,000/=
3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால்	6	50,000/=	ரூ. 3,00,000/=
3 இலக்கங்கள் பொருந்தினால்	242	1,000/=	ரூ. 2,42,000/=
2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால்	388	1,000/=	ரூ. 3,88,000/=
2 இலக்கங்கள் பொருந்தினால்	11046	60/=	ரூ. 6,62,760/=
1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால்	5771	40/=	ரூ. 2,30,840/=
1 இலக்கம் பொருந்தினால்	143879	20/=	ரூ. 28,77,580/=
ஆங்கில எழுத்து	20942	20/=	ரூ. 4,18,840/=
		மொத்தம் ரூ.	61,20,020/=
வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி	8	50,000/=	400,000/=

ரூபா.50,000 வீதம் பணப்பரிசுகள் வெற்றியீட்ட 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்:

இரத்தினபுரி	606168165-9-39
அநுராதபுரம்	606170285-6-36
ஹம்பாந்தொட்டை	606162305-5-25
வவுனியா	606172967-1-41
கொழும்பு	606163165-2-02
மொனராகலை	606160663-2-02
மட்டக்களப்பு	606160200-7-27
கம்பஹா	606172444-9-49

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 65,20,020/=

எதிர்வரும் வியாழக்கிழமை சுப்பர் ஜக்பொட் ரூபா. 28,393,820/=

செம்மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2014.05.08 ஆம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை

356, கலாநிதி கொல்வின் ஆர். டி சில்வா மாவத்தை, தபாலகம் பிளேஸ், கொழும்பு 02. தொலைபேசி: 2 333540/7

(C/3672)

தமிழ்பேசும் அதிகாரிகளே மக்களை கஷ்ரப்படுத்துகின்றனர்

சட்டத்தரணி தேவராசா கவலை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் தமிழ் பேசும் அதிகாரிகளே அரசை விட தமிழ்மக்களை கஷ்ரப் படுத்தி வருவதாக சட்டத் தரணி தேவராசா தெரிவித் தார்.

கடந்த விழாக்கிழமை புதிய ஜனநாயகக் கட்சி யின் மேதினக் கூட்டம் யாழ்.வீரசிங்கம் மண்டபத் தில் நடைபெற்றபோது அவர் இவ்வாறு தெரிவித் தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

தமிழர் மொழியை இழந்து, நாட்டை இழந்து, உரிமையையும் இழந்து நிற்கும் நிலைக்குத் தள்ளப் பட்டுள்ளன. ஜனநாயக வாதிகளாக எம்மை கூறு கின்றனர்.

நாங்களே சகல இன, மத, மொழி அடக்கு முறைகளுக்கும் எதிராகக் குரல் கொடுத்துப் போராடிக் கொண்டிருக்கிறோம். முழு உழைப்பாளி வர்க்கங்களை யும் ஓரணியில் இணைப் பதன் மூலமே பிரச்சினைக ளுக்குத் தீர்வைப் பெற முடியும் என்றார். (68)

பெண் தலைமைத்துவ குடும்பங்களின் விபரங்கள் சண்டிலிப்பாயில் திரட்டு

பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்களின் விபரங்கள் சண்டிலிப்பாய் பிரதேச செய லகத்தினால் திரட்டப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப் படுகின்றது. இந்த விபரங்களை கிராம அலுவலர் பிரிவு ரீதியாக செயலக உத்தியோகத்தர்கள் கிராம அலுவ லகத்துக்கு வருகை தந்து நேரடியாக சம்பந்தப்பட்ட மக்களிடம் கேட்டு பூரணப்படுத்தி வருவதாகத் தெரி விக்கப்படுகின்றது.

மேலும் பல்வேறு பட்ட காரணங்களினால் கண வனை இழந்து, கணவனால் கைவிடப்பட்டு உள்ள பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் விபரங்களை சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் திரட்டி வருகின்றது.

இதன் மூலம் இக்குடும்பங்களின் பிள்ளைகளின் விபரம், கல்வித்தகைமை, தேவையான தொழில் வச திகள் என்பன தொடர்பாக விபரங்கள் திரட்டப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

வீடுடைத்து திருட்டு புங்குடுதீவில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு 10 ஆம் வட்டாரத்தில் உள்ள வீடு ஒன்றில் 21,800 ரூபா பெறு மதியான பொருட்கள் வீடுடைத்து திருட்டுப் போயுள்ளதாக தெரிவிக்கப்படுகின் றது.

அம்பிகாதேவி சண்முகரத்தினம் (வயது 68) என்பவரது வீட்டிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக ஊர்காவற் றுறைப் பொலிஸில் முறைப்பாடு செய் யப்பட்டுள்ளது.

குறித்த நபர் தனது வீட்டை அயலில் உள்ள ஒருவரிடம் மேற்பார்வை செய்வ தற்காக ஒப்படைத்ததாகவும் கடந்த 30 ஆம் திகதி காலை 8 மணிக்குப் பின்னர் வீடு உடைத்து வீட்டிலிருந்த தளபாடங்கள் திருட்டுப் போயுள்ளதாகவும் தெரிவிக்கப் படுகின்றது.

இது தொடர்பாக பொலிஸார் மேற் கொண்ட விசாரணையின் போது அயலில் உள்ள பாழடைந்த வீடொன்றில் 3 நாற்காலிகளும் ஒரு இறப்பர் பெட்டியும் கண்டெடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக் கப்படுகின்றது.

இது தொடர்பாக பொலிஸார் மேல திக விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர்.

இலத்திரனியல் சாதனங்களை பழுதுபார்த்தல் கற்கைநெறி

(யாழ்ப்பாணம்)

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார-சபையினால் யாழ்ப்பாண மாவட்டத்தில் வானொலி, தொலைக்காட்சி, அவை சார்ந்த சாதனங்கள் பழுதுபார்த்தல் கற்கைநெறி ஆரம்பிக்கப்படவுள்ளன.

இக்கற்கைநெறி தேசிய தொழில் தகைமை (NVQ) சான்றிதழுக்கான பயிற்சியாகும்.

இக்கற்கை நெறிகளை கற்க விரும்பு வர்களிற்கான நேர் முகத்தேர்வு நடை பெற்றுக் கொண்டிருப்பதனால் தங்கள் கல்வித் தகைமை சான்றிதழ்களுடன் எதிர்வரும் 13 ஆம் திகதிக்கு முன்னர் இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை, 1 ஆம் மாடி, வீரசிங்கம் மண்டபம், இல. 12, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம் (தொ.பே:- 021 222 7949) எனும் முக வரிக்கு சமூகமளிக்குமாறு இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை உதவிப்பணிப் பாளர் கு.நிரஞ்சன் அறிவித்துள்ளார்.

பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

மகாஜனக்கல்லூரியின் பழைய மாண வர் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் 11 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் ம.மணிசேகரம் தலைமையில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்திற்கு பழைய மாணவர்சங்கத்தின் அனைத்து அங்கத்தவர்களையும் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

கைத்தொழில் சபையில் வெற்றிடம் விண்ணப்பிக்க வாய்ப்பு

இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையில் காணப்படும் வெற்றிடங்க ளுக்கு இலங்கை பிரஜைக ளிடம் இருந்து விண்ணப்பங் கள் வரவேற்கப்படுகின்றன.

பொறியியலாளர் (மின் சாரவியல்), சபைச் செய லாளர், தவிசாளருக்கு பிரத் தியேக உதவியாளர், பொறி யியல் உதவியாளர், முகா மைத்துவ உதவியாளர், சாரதி வார்ப்பக பணியா ளர், ஆலை இயக்குநர், பொலிஷர், தச்சன், மின் முலாமிடுபவர், மின்ஒட் டுனர், மின்இணைப்பாளர், இறப்பர் மெஷின் இயக் குனர் ஆகிய பதவிகளுக்கு விண்ணப்பிக்கலாம்.

18 - 45 வயதிற்குட்பட்ட உடல், உள ஆரோக்கிய முடையவர்கள் எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் தவிசாளர், இலங்கை கைத் தொழில் அபிவிருத்திச் சபை, 615, காலி வீதி, கட்டு பெத்தை, மொரட்டுவ, என்ற விலாசத்திற்கு பதிவுத் தபாலிடமுன் கடித உறை யின் இடது மேல் மூலை யில் விண்ணப்பிக்கும் பதவி யின் பெயரைக் குறிப் பிடல் வேண்டும்.

கல்வித்தகைமையாக க.பொ.த (சா/த) பரீட்சையி லிருந்து பல்கலைக்கழக பட்டதாரிகள் வரை பதவி களுக்கேற்ப மாறுபடுகின் றன.

அரச நிறுவனங்களில் கடமையாற்றுவோர் நிறு வனத்தலைவூடாக விண் ணப்பங்களை அனுப்புமாறு வேண்டப்படுகின்றனர்.(105)



குரங்கெண்டாலும் சிரங்கெண்டாலும் சொறியச் சொறிய வரும் இன்பம்..

வடலுலத்தான் கிழுதிவி...

மீளிணக்கம் அல்லது நல்லிணக்கம். பொதுபலசேனா. ஜக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு. கற்றுக்கொண்ட பாடங்கள். இலங்கைத் தமிழரசுக் கட்சி. தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு. ஒரு தேசம் ஒரே நாடு. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ். திவிநெகும. ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி. ஜாதிக ஹெலஉறுமய. பாராளுமன்றத் தெரிவுக்குழு. மக்கள் விடுதலை முன்னணி. மகிந்த சிந்தனை. மலையக மக்கள் முன்னணி. இனங்களுக்கிடையேயான நல்லிணக்க ஆணைக்குழு. இலங்கைத்தொழிலாளர் காங்கிரஸ். தேசிய சுதந்திர முன்னணி. தமிழ்த்தேசியம். போர்க்குற்றச்சாட்டு. போர்க்குற்றவாளிகள். சர்வதேச விசாரணைப்பொறிமுறை. இன ஐக்கியம். ஐக்கிய தேசியக் கட்சி. தேசிய ஜனநாயக முன்னணி. மாகாணசபைகள்.

அப்பப்பா,.. இலங்கைக்கு என்னமாதிரியான வளமெல்லாம் கிடைச்சிருக்கு?

இவ்வளவு செல்வமெல்லாம் இருக்கேக்க இலங்கைக்கோ இலங்கையர்களுக்கோ என்னதான் குறை?

வரவரக் கட்சிகள் கூடிக்கொண்டு போகுது. கட்சிகள் கூடக் கூடத் தலைவர்களும் கூடிக்கொண்டு போகினம். கட்சிகள் புதிசு புதிசாக வரவர கொள்கை, கோப்பாடுகளும் கூடிக்கொண்டு போகுது... கொள்கை, கோப்பாடுகள் கூடிக்கொண்டு போகப்போக, வேறுபாடுகளும் கூடிக்கொண்டு போகுது. வேறுபாடுகள் கூடிக்கொண்டு போகப்போக..... வில்லங்கங்களும் கூடிக்கொண்டு போகுது...

இப்பிடி வில்லங்கங்கள் கூடக்கூடத்தான் இலங்கையில ஏராளம் பிரச்சினைகளும் உருவாகியிருக்கு.

ஏனெண்டால், இலங்கையர்களான நாங்கள் எல்லாம் மன்னராட்சிக் காலத்து ஆட்கள். ஒரே தலைமை. ஒரே கொள்கை. ஒரே பாதை என்ற பிடிவாதக்காரர். மற்றதையெல்லாம் தூக்கித் தூரவீசி எறிந்து விட்டு, ஒரு கொழுயை மட்டும் பறக்க விடுகிற ஆதிவாசிகள்.

வேற்றுமையில் ஒற்றுமை. வேறுபாடுகளில் இணக்கம். பன்மைத்துவத்தில் அழகு. ஜனநாயகத்தில் சிறப்பு எண்டதெல்லாம் எங்களுக்குத் தெரியாது. இந்தப் பழக்கமெல்லாம் எங்களிட்ட மருந்துக்கும் கிடையாது.

நாங்கள் ஒவ்வொருதரும் ஆண்டபரம்பரையின் வம்சாவழிகள். அதே கனவோட கிடந்து மல்லுக்கட்டுகிற ஆட்கள்.

இதாலதான் ஒரு கட்சிக்காரனுக்கு மற்றக்கட்சியைப் பிடிக்காது.

ஒரு அரசியல்வாதிக்கு மற்ற அரசியல்வாதியைச் சகிக்க முடியாமலிருக்கு.

தமிழருக்குச் சிங்களவரைப் பிடிக்காது. சிங்களவருக்கு முஸ்லிம்களைப் பிடிக்காது. முஸ்லிம்களுக்குச் சிங்களவரைப் பிடிக்காது. சிங்களவருக்குத் தமிழரைப் பிடிக்காது எண்டமாதிரியான நிலைமை.

இது போதாதெண்டு, சாதிக்கொரு கட்சி. சமூகத்துக்கொரு கட்சி. இனத்துக்கு நாலு கட்சி எண்டு இனரீதியாகவும் மத ரீதியாகவும் கட்சிகள் வளரத்தொடங்கீட்டுது.

உங்களுடைய வீட்டில் கீரை வளருகிறதோ இல்லையோ ஊரிலும் நாட்டிலும் கட்சிகள் நல்லா வளருது.

இப்பொழுது கீரை வளர்க்கிறதுக்குப் பதிலாக அரசியற் கட்சியை லேசாக வளர்க்கலாம் எண்டு எல்லாரும் நினைக்கினம்.

இதுக்கெல்லாம் தோதாக இலங்கைப் பெருமக்களும் நல்லா உரம்போட்டுத் தண்ணியும் தாராளமாக ஊத்துகினம்.

பிறகு கேட்கவா வேணும்? இதெல்லாம் நல்லாச் சடைச்சுச் செழிப்பாக வளருது.

இதெல்லாம் செழிச்சு வளர்ந்தால்....!

பிரச்சினைகளும் செழிப்பாகத்தான் வளரும்.

ஏனெண்டால், பிரச்சினைகளைத் தீர்க்க வேணும் எண்டு இயங்கிற கட்சிகளும் இருக்கு. பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவேணும் எண்டு உண்மையா யோசிக்கிற தலைவர்களும் இருக்கினம்.

இதேவேளை, பிரச்சினைகளை வளர்க்க வேணும் எண்டு அடம்பிடித்து, அதுக்காகவே இயங்குகிற கட்சிகளும் உண்டு. பிரச்சினைகளை வளர்த்தே தங்கட வயிற்றை வளர்க்கிற தலைவர்களும் இருக்கினம்.

என்ன நாசமோ தெரியேல்ல, இதில இந்த ரண்டாவது தரப்பைத்தான் சனங்கள் நல்லா விரும்புதுகள்.

சனங்களுக்கும் பிரச்சினை, அலைச்சல், கரைச்சல் எண்டால் நல்ல விருப்பம் போல.

குரங்கெண்டாலும் சிரங்கெண்டாலும் சொறியச் சொறிய ஒரு இன்பம் வருமெல்லோ.. அதைப்போலத்தான் இதுவும். அலைய அலைய... ஒரு இனம்புரியாத இன்பம் உண்டாகுதுபோல...

இதெல்லாம்தான் இலங்கையின் அரும்பெரும் சொத்தாக இண்டைக்கு மாறியிருக்கு.

மனிதனை மனிதனாக்குபவை உதவிகளும் வசதிகளுமல்ல.
இடையூறுகளும் துன்பங்களுமே. - மாத்யூஸ்.

தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

வெறுப்பை விட முடியவில்லை...

கடந்த பல வருடங்களாக, இந்த நாட்டிலுள்ள நம் சகோதர இனமான சிங்கள இனம் மீது, வெறுப்பும் பகையுணர்ச்சியும் வளர்த்துவிடப் பட்டு நம் மனங்களினுள் வேரோடியிருக்கிறது. நம் மனதில் ஆழ ஊறிவிட்ட அந்த வெறுப்பை விட முடியாமல் தவிப்பதன் காரணத்தால்தான், அமெரிக்காவோ பிரிட்டனோ இஸ்ரேலிடமோ கூட போய்மண்டியிடத்தயாராயுள்ள நாம், இதோ அருகாக உள்ள சிங்கள மக்களிடம் சென்று எங்கள் பிரச்சினையைப் பேசத் தயாராயில்லை.

இத்தனை விமானக் குண்டுவீச்சுக்கள் அழிவுகள் நடத்தப்பட்ட போதெல்லாம் தங்கள் படையினரை அவர்கள் தடுத்துப் பேசவில்லை என்றொரு பொத்தாம் பொதுவான குற்றச்சாட்டை எங்கள் கோபத்துக்கு நியாயமாய்ப் பிடித்துக் கொள்கிறோம்.

அதையெல்லாம் கண்டித்த-கண்டிக்கும் பெரும்பாலானவர்கள் அந்தப்பக்கத்தில் இருந்தார்கள்-இருக்கிறார்கள். அவர்களையெல்லாம் விட்டுவிட்டு, தமிழ் மக்களுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்து கொடுத்துவிடக் கூடாது என்று கூறும் சில சிங்களத் தேசியவாதிகளின் கருத்துக்களையே நாம் தூக்கிப் பிடித்துக் கொள்கிறோம்.

அதுபோல, தமிழ்த் தரப்பால் சிங்களப் பொதுமக்கள் கொல்லப்பட்ட போது, பஸ்களிலும் ரயில்களிலும் குண்டுகள் வெடித்த போது, அவர்கள் வாழ்ந்த இடத்திலிருந்தும் துரத்தியடிக்கப்பட்ட போது.... நம்மிலும் பெரும்பாலானவர்கள் அதைக் கண்டிக்காமலேயே இருந்தோம் என்பதை மறந்துவிடுகிறோம்.

தமிழ் மனங்களிலுள் அழுத்தமாக ஊன்றப்பட்டிருக்கும் இந்த இனக் குரோத உணர்வால்தான், அவர்களிடம் போய் நம் பிரச்சினைகளைப் பேசுவதில் பிரயோசனமில்லை என்று சொல்லிக் கொண்டு, "சர்வதேச அழுத்தத்தினால் என்றாவது ஒருநாள் எங்கள் வானில் ஒரு ஒளி தோன்றும்" என்று புளுகும் தலைவர்களின் ஏமாற்றைத் தெரிந்தும் அதை நம்புவது போல் நடித்துக் காத்திருக்கிறோம்.

நம் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வழி அருகிலேயே இருக்கிறது. நாமோ கோபமும் வெறுப்பும் கண்களை மறைப்பதால் சர்வதேசத்தைப் பிடித்துத் தொங்கிக் கொண்டிருக்கிறோம். இந்தக் கதையில் வரும் மலையேறி கயிற்றைப் பிடித்துத் தொங்கிக் கொண்டிருப்பதைப் போல வெறுப்பை விடாமல் பற்றிக் கொண்டிருக்கிறோம்....

மலையேறி ஒருவன் மலையின் சிகரத்தை அடைய ஒரு சில அடிகளே இருக்கும்போது தவறி கீழே விழுந்துவிடுகிறான். கீழே விழுந்துகொண்டிருந்தவனை கொஞ்ச தூரத்தின் பிறகு அவன் இடுப்பிலிருந்த கயிறு நிறுத்தியது. கீழே விழுந்து விடாமல் கயிற்றிலே தொங்கினான். அந்தரத்தில் தொங்கிக்கொண்டிருந்த அவனுக்கு அப்போது கடவுளை நோக்கி இறைஞ்சுவதைத் தவிர வேறு வழி தெரியவில்லை. 'கடவுளே, என்னைக் காப்பாற்றுங்கள்' என்று குரல் கொடுத்தான்.

ஆகாயத்திலிருந்து பதில்குரல் கேட்டது. 'உனக்கு என்ன வேண்டும்?'

'என்னைக் காப்பாற்றுங்கள் கடவுளே' என்றான் உயிருக்கு மன்றாடிக்கொண்டிருந்த அந்த மலையேறி.

'நீ உண்மையிலேயே நம்புகிறாயா நான் உன்னைக் காப்பாற்ற முடியும் என்று?'

'நிச்சயமாக நம்புகிறேன்.'

'அப்படியானால் உன் இடுப்பில் செருகியுள்ள கத்தியை எடுத்து அந்தக் கயிற்றை அறுத்து விடு.'

ஒருகணம் அங்கு மௌனம் நிலவுகிறது. அந்த மலையேறி பலம் கொண்ட மட்டும் கயிற்றைத் தன் கைகளால் இறுகப் பற்றிக் கொள்கிறான். கயிற்றிலேயே தொங்கி அங்குமிங்கும் ஊசலாடிய படி இருந்தான்.

மறுநாள் மீட்புக் குழுவினர் அங்கே வந்தபோது ஒரு மலையேறி கயிற்றில் தொங்கியபடி உடல் விறைத்து இறந்திருப்பதைப் பார்த்தனர். கைகள் கயிற்றை இறுகப் பற்றியிருந்தன.

ஆனால், அவன் உடலுக்குக் கீழே பத்தடி உயரத்தில் இருந்தது தரை.

-ஆசிரியர்.

11 கோரிக்கைகளை முன்வைத்து

மின்சாரசபை ஊழியர்கள் இன்று மாபெரும் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

இலங்கை மின்சாரசபை ஊழியர்கள் 11 கோரிக்கைகளை முன்வைத்து இன்று கொழும்பிலுள்ள இலங்கை மின்சாரசபை தலை மையகத்திற்கு முன்பாக மாபெரும் ஆர்ப்பாட்டமொன்றை நடத்தவுள்ளதாகவும் இதில் சகல ஊழியர்களும கலந்து கொள்ளவுள்ளதாகவும் · ஏற்பாட்டுக் குழு உறுப்பினர் ரஞ்சன் ஜயலால் தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் இதற்கு செவி சாய்க்காவிட்டால் நாடு முழுவதும் தொடர் வேலைநிறுத்தப் போராட்டங்கள் வெடிக்குமென்றும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கொழும்பு கொம்பனித்தெரு நிப்பொன் ஹோட்டலில் நேற்று முன்தினம் நடைபெற்ற இலங்கை மின்சார சபை இணைந்த தொழிற சங்க முன்னணியின் ஊடக வியலாளர் மாநாட்டில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

2012ஆம் ஆண்டு நூற்றுக்கு 45 வீதம் சம்பள உயர்வு கோரினோம். ஆனால், அரசாங்கம் 25 வீத உயர்வை வழங்கியது. எஞ்சிய அதிகரிப்பை ஒரு வருடத்திற்குள் வழங்குவதாக உறுதி வழங்கியும் இதுவரையில் எதுவும் வழங்கப்படவில்லை.

அதேபோன்று சம்பள முரண்பாடுகளை நீக்குவதற்கும் எதுவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. இதற்காக ஒரு குழு நியமிக்கப்பட்டது. அது திருடனின் தாயாரிடம் சாஸ்திரம் கேட்கும் குழுவாகவே அமைந்தது. அதன் பரிந்துரைகளை எமது தொழிற்சங்கங்கள் முழுமையாக நிராகரித்தன.

2015ஆம் ஆண்டில் திருத்தப்படும் சம்பள உயர்வோடு சம்பள முரண்பாட்டுக்கும் தீர்வை ஏற படுத்தி அது தொடர்பாக தொழிற் சங்கங்களும் உடன்படிக்கை செய்து கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

2015ஆம் ஆண்டிற்கு முன்பதாக எமது சம்பள முரண்பாடுகள் நீக்கப்பட வேண்டும். தற்போது தனியார் நிறுவனமொன்றூடாக 4000 பேரின் சேவை மின்சார சபைக்கு பெற்றுக் கொள்ளப்படுகிறது.

பல வருடங்களாக சேவை செய்யும் இவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட வேண்டும்.

மின்சார சபை இன்று அரசியல்வாதிகளின் கூடாரமாகி விட்டது. அனைத்திலும் அரசியல் தலையீடுகள் தலைதூக்கியுள்ளன.

பதவியுயர்வுகளிலும், இதே நிலைதான். இட மாற்றங்களிலும் அரசியல் தலையீடுகள் தலைதூக்கியுள்ளன.

மின் உற்பத்தி நிலையங்களை அதிக உற்பத்தி திறனுக்கான நிறுவனங்களுக்கு ஒப்படைக்கின்றோம் என்ற பெயரில் வெளிநாட்டு கம்பனிகளுக்கு விற்பனை செய்வதற்கான உடன் படிக்கைகள் செய்து கொள்ளப் படுகின்றன.

இதற்கு அரசாங்கம் செவி சாய்க்காவிட்டால் அனைத்து சங்கங்களும் இணைந்து கொழும்பில் மாபெரும மாநாட்டை நடத்தி நாடு தழுவிய ரீதியில் தொடர் போராட்டங்களை நடத்தும் தீர்மானத்தை எடுக்கவுள்ளோம். பொறுமைக்கும் எல்லையுண்டு. இன்று அந்த எல்லை தாண்டிவிட்டது.

இனி எமது போராட்டங்கள் கடுமையாக இருக்கும் என்றும் அவர் தெரிவித்தார். இந்த ஊடகவியலாளர் மாநாட்டில் பல தொழிற்சங்க பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

சர்வதேச இளைஞர் மாநாட்டிற்காக ஊடக மத்திய நிலையம் திறப்பு

உலக சர்வதேச இளைஞர் மாநாட்டிற்கான ஊடக மத்திய நிலையம் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்றுக்காலை 10.00 மணிக்கு ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இளைஞர் விவகார திறன் அபிவிருத்தி அமைச்சர் டலஸ் அழகப்பெரும, மக்கள் தொடர்பாடல் மற்றும் தகவல்துறை அமைச்சின் செயலாளர் கலாநிதி சரித்த ஹேரத், தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் தலைவரும் சர்வதேச இளைஞர் மாநாட்டின் உத்தியோக பூர்வ பேச்சாளருமான ललித் பியும் பெரேரா ஆகியோர் இந்த ஊடக மத்திய நிலைய திறப்பு நிகழ்வில் கலந்து கொண்டனர்.

தகவல் ஊடகத்துறை அமைச்சரினால் ஒழுங்கமைக்கப்பட்டுள்ள இந்த ஊடக மத்திய நிலையத்தில் ஊடகவியலாளர்களுக்கு பல்வேறு வசதிகள் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் மாநாடு தொடர்பான செய்தி சேகரிப்பு, ஆரம்ப வைபவம் தொடர்பான நேரடி ஒளிபரப்பு, அலுவலக ஒலி, ஒளி வசதிகள், இடம்பெறும் கூட்டம் தொடர்பான விடயம், ஊடக மாநாட்டு வசதி, இணையத்தள வசதி என்பன வற்றை கொண்டதாகும்.

விசேட ஊடக அடையாள அட்டைகளை பெற்றுள்ள ஊடகவியலாளர்கள் சர்வதேச பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெறுகின்ற பிரதான நிகழ்வுகளின் போது கலந்து கொள்ளக் கூடிய வசதி வாய்ப்புக்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

ஆயுர்வேத வைத்தியத்துறை மூலம் இலங்கை-ஜப்பான் சுற்றுலா விருத்தி

ஆயுர்வேத வைத்தியத் துறையை முன்வைத்து ஜப்பானுக்கும் இலங்கைக்குமிடையிலான சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுப்பதாக ஜப்பான் நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹிரோயுது தெரிவித்துள்ளார்.

ஆசியாவில் வேறு நாடுகளில் காணக்கிடைக்காத ஆயுர்வேத வளங்கள் இலங்கையில் காணப்படுகின்றது இதனால் ஜப்பானில் இலங்கையின் ஆயுர்வேத வைத்தியத்துறை மிகவும் பிரபல்யம் அடைந்துள்ளது.

ஜப்பானிலிருந்து இலங்கைக்கு வருகை தரும் உல்லாசப்பயணிகளின் எண்ணிக்கை பத்தாயிரத்திலிருந்து 20ஆயிரமாக அதிகரித்திருக்கின்றது என்றார்.

ஜப்பான் நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹிரோயுது தலைமையிலான ஜப்பான் நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர் குழுவொன்று பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவை அவரது அமைச்சில் சந்தித்துரையாடியது. இச்சந்திப்பின் போதே ஜப்பான் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹிரோயுது மேற்கண்டவாறு கூறினார்.

இலங்கையின் அபிவிருத்திக்கு ஜப்பான் வழங்கும் ஒத்துழைப்புகளுக்கு நன்றி தெரிவித்த அமைச்சர், இருநாடுகளுக்கிடையிலான நட்புறவு மேலும் வலுப்பெறும் எனவும் நம்பிக்கை தெரிவித்தார்.

சுற்றுலா அதிகார சபையின் தலைவர் பாஸ்வர சேனாங்கவும் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டார்.

வெசாக் வைபவத்தில் பங்கேற்க வியட்நாம் செல்கின்றார் பிரதமர்

ஐக்கிய நாடுகளின் வெசாக்தின வைபவங்களில் கலந்து கொள்வதற்காக பிரதமர் தி..மு. ஜயரத்ன இன்று வியட்நாம் செல்லவிருக்கிறார்.

ஐக்கிய நாடுகளின் வெசாக்தின வைபவங்கள் .வியட்நாமின் நின்ஹ் பின்ஹ் மாநிலத்தில் மே மாதம் 8ஆம் திகதி முதல் 12 ஆம் திகதி வரை நடைபெறும்.


பிரதமர் தி.மு.ஜயரத்ன இந்த நிகழ்வில் கலந்து கொள்வதுடன் விசேட உரை ஒன்றையும் நிகழ்த்தவுள்ளார். இந்த நிகழ்வுகள் தொடர்ந்து நான்கு நாட்களுக்கு நடைபெறும்.

வியட்நாம் ஜனாதிபதி டொரொன்ங கங்ஹ் செங்க் தலைமையில் நடைபெறும் இந்த வைபவங்களில், ஆயிரத்துக்கும் அதிகமான பௌத்த பிக்குமார் கலந்து கொள்வர் என எதிர்பார்க்கப்படுகிறது.

ராமன் ராஜா

கல்லுளி மங்கனாய் ஒரு கணித மேதை!

இந்த ஏ.பி.சி கோட்பாடு என்பது கணக்கியலாளர்களுக்கு 28 வருடமாகத் தண்ணி காட்டிக்கொண்டு இருப்பது. பகா எண்கள் பற்றிய ஆதாரமான சில கேள்விகளுக்கு அதில் விடை இருக்கிறது; இன்னும் பல கேள்விகளுக்கு விடை இருக்கிறது. மிகப் பல பேர் அதில் முட்டி மோதி மூக்கைப் பெயர்த்துக் கொண்டிருக்கிறார்கள்.



(1) ஒரு சொ.ப்.ட்வேர் எஞ்சினியர்

(2) ஒரு தச்சு வேலை செய்பவர்

(3) ஒரு கணித மேதை

(4) ஒரு பெரிய பிட்ஸா.

இந்த நாலில் ஒன்று மட்டும் மற்றவைகளில் இருந்து வித்தியாசமானது. அது எது?

விடை : கணித மேதை.

எப்படி என்கிறீர்களா? மற்ற மூன்று பேராலும், ஒரு சிறிய குடும்பத்தின் பசியைத் தீர்க்க முடியும்!

கணிதத்தை முழு நேரத் தொழிலாகக் கொண்டு யாரும் பிழைக்க முடியாது என்பதில் ஓரளவு உண்மை உள்ளது. எங்கள் பள்ளிக் கூடத்திலும் கணக்கு வாத்தியார்தான் எப்போதும் ஒரே சட்டையைப் போட்டுக்கொண்டு பொக்கெற்றில் மைக் கறையுடன் காட்சி அளிப்பார். இப்போது கூடக் கணிதவியலாளர்கள் பெரும்பாலும் கம்ப்யூட்டர் சயன்ஸ், புள்ளியியல் என்று உப திறமைகளைக் காட்டித் தான் அன்றாடச் செலவுக்கு சம்பாதிக்கிறார்கள்.

அறிவியலைப் பாடமாக எடுத்துப் படிக்காதவர்களுக்குக் கூடப் புரியும் வகையில் அறிவியலை ஓரளவு எளிமைப் படுத்தி எழுத முடியும். இந்த வகையைச் சேர்ந்த பல புத்தகங்கள், பத்திரிகைகள் இருக்கின்றன. ஆனால் இந்த மாதிரி கணிதத்தைச் சொல்லித் தருவது கடினம்.

அறிவியலை அறிந்து கொள்ள, கருப் பொருட்கள் உண்டு. பிப் பெட்டையும் பியூரெட்டையும் கண்ணால் பார்க்கலாம், கீழே போட்டு உடைக்கலாம். கணிதம் என்பது ஐம்புலன்களுக்கு அப்பால் உள்ள கற்பனை மேகம். புரிந்தால் புரியும், இல்லாவிட்டால் புளியங்காய்தான்.

சென்ற ஆகஸ்ட் 31 அன்று கணித உலகத்தை ஒரு சுனாமி தாக்கியது. ஜப்பானிய கணித அறிஞர் ஷினிச்சி மோச்சுஸுகி என்பவர், புகழ் பெற்ற ஏ.பி.சி கோட்பாட்டை நிரூபித்துவிட்டதாக அறிவித்தார்.

கன்ஜெக்சர் என்றால் சும்மா, ஒரு நூல் விட்டுப் பார்ப்பது. ஊகம். ஒரு ஊகத்தை யாராவது முறைப்படி நிரூபித்தவுடன்தான் அதற்குத் தேற்றம் (theorem) என்ற அந்தஸ்து கிடைக்கிறது; பாடப் புத்தகத்தில் இடம் பெற்று நம்மை ∴.பெயிலாக்குகிறது.

இந்த ஏ.பி.சி கோட்பாடு என்பது கணக்கியலாளர்களுக்கு 28 வருடமாகத் தண்ணி காட்டிக்கொண்டு இருப்பது. பகா எண்கள் பற்றிய ஆதாரமான சில கேள்விகளுக்கு அதில் விடை இருக்கிறது; இன்னும் பல கேள்விகளுக்கு விதை இருக்கிறது. மிகப் பல பேர் அதில் முட்டி மோதி மூக்கைப் பெயர்த்துக் கொண்டிருக்கிறார்கள். கணிதத்தில் இது மாதிரி இன்னும் பல புகழ் பெற்ற ஊகங்கள் இருக்கின்றன. இது வரை யாராலும் நிரூபிக்க முடியாதவை. சில தத்துவங்களை நிரூபித்தால் "நாட்டில் பாதியைத் தந்து என் மகளையும் கட்டி வைக்கிறேன்" என்று பரிசுகள் கூட அறிவித்திருக்கிறார்கள்.

நம்பர் தியரி என்பது கணிதமேதை ராமானுஜத்தின் கோட்டை. அதில் ஏ.பி.சி கோட்பாடுதான் ராஜா. இதைப் பற்றி ஷினிச்சி மோச்சிஸுகி நான்கு முரட்டுக் கட்டுரைகளை இணையத்தில் வெளியிட்டுவிட்டு, "ஏ.பி.சியை நிரூபித் திருக்கிறேன், சமயம் கிடைத்தால் படித்துப் பாருங்கள்" என்று டாட்டா காட்டிவிட்டுப் போய்விட்டார்.

தமிழ்ச் சங்கம் தீர்த்து வைக்காத பிரச்சினையை, தனி ஒரு மனிதனாகத் தீர்த்தவர் என்று மோச்சிஸுகியை எல்லோரும் பாராட்டினார்கள். வெகுஜனப் பத்திரிகைகள் கூட பஜனையில் கலந்துகொண்டு சரண கோஷம் போட்டன. "உலகத்தின் மிகச் சிக்கலான கணிதப் புதிர் அவிழ்ந்தது! ஜப்பானிய விஞ்ஞானியின் சாதனை!!" என்றது டெலிகிரா.ப்.ப் பத்திரிகை. "ஏ.பி.சி தத்துவத்துக்குத் தெளிவு கிடைத்துவிட்டது என்று தெரிகிறது" என்று சற்று எச்சரிக்கையாக எழுதியது நியூயோர்க் டைம்ஸ். இரண்டொரு நாள் வரை இணையத்தின் கணிதப் பக்கங் கள் முழுவதும் இதே பேச்சுத்தான்.

பிறகு அங்கங்கே சில தீனமான முனகல்கள் கேட்டன. "இந்த ஆள் என்ன சொல்கிறார்? எனக்குப் புரிய வில்லை. உனக்கு?" என்று ஒரு-வரை ஒருவர் கேட்டுக்கொள்ள ஆரம் பித்தார்கள். சீக்கிரமே ஒரு விஷயம் தெளிவாகப் புரிந்துவிட்டது : மோச்சி ஸுகியின் கட்டுரைகள் யாருக்கும் ஒரு வரி கூடப் புரியவில்லை!

உலகெங்கும் கல்லூரிப் பேராசிரியர்கள் முதல் முழுநேர நம்பர் தியரி வல்லுநர்கள் வரை யாராலும் மோச்சுஸ ுகியின் நிரூபணக் கட்டுரையைத் துளைக்க முடியவில்லை.


முதல் பாராவுக்குள்ளேயே நுழைய முடியாமல் வாசலை மறித்துக்கொண்டு அனபெலியாய்ட், ∴ப்ரோபெனியாய்ட், ஏடெல் தீடா போன்ற ஏராளமான சொற் பிரயோகங்கள் நந்தி நந்தியாக நிற்கின்றன. பாமரர்களுக்குத்தான் புதியது என்பது அல்ல, கணிதத்தின் மொழிக்கே புதிதான கருத்துக்கள் இவை. இதையெல்லாம் புரிந்து கொண்டால்தான் கட்டுரைக்குள் அடி எடுத்து வைக்க முடியும்.

மொத்தம் 500 பக்கத்துக்கு மேல் கட்டுரை எழுதித் தள்ளியிருக்கிறார் மோச்சி. ஒரு பெரிய கரப்பான் பூச்சியைப் பிடித்து மைப் போத்தலில் அமுக்கி எடுத்து வெள்ளைத் தாளின் மீது ஓட விட்டது போல் என்ன என்னவோ புதிய குறியீடுகள். முழு-சாக ஒரு வாக்கியம் அல்லது சமன்பாடு புரியவில்லை.

அறிவியல் கட்டுரை ஒவ்வொன்றிலும் கடைசிப் பக்கத்தில் அதற்கு ஆதார மான, அல்லது முன்னோடியான மற்ற பலரின் கட்டுரைகளைப் பற்றிய பட்டியல் இருக்கும். அப்படி எதை யாவது படித்துப் பின்னணியைப் புரிந்து கொள்ளலாம் என்று இறுதிப் பகுதிக்குப் போனால், சரம் சரமாக டசின் கணக்கான பின்னணிக் கட்டுரைகளின் பட்டியல் இருந்தது. உற்றுப் பார்த்தால், அத்தனையையும் எழுதியவர் ஒருவரே என்று தெரிந்தது. அதாவது, ஷினிச்சி மோச்சுஸுகி என்பவர்தான்!

ஆயிரக் கணக்கான பக்கங்கள் - புதிய புதிய கருத்துக்கள், கட்டுமானங்கள். அவ்வளவையும் ஒருவர் படித்துப் புரிந்துகொள்ள வருடக் கணக்கில் ஆகும். அதற்குப் பிறகுதான் அவ ருடைய ஏ.பி.சி கட்டுரையைப் படிக்க முடியும். அதற்கும் பிறகுதான் அவ ருடைய தத்துவ விளக்கம் சரியா தப்பா என்று சொல்ல முடியும்.

"இதைப் படித்தால், ஏதோ வெளி உலகத்து அறிவு ஜீவிகள் படைத்ததோ, அல்லது எதிர்காலத்திலிருந்து தப்பித் தவறி நிகழ்காலத்துக்கு வந்துவிட்ட கட்டுரையோ என்று தோன்றுகிறது" என்கிறார்கள் கணிதப் பேராசிரியர்கள். சுருங்கச் சொன்னால், மோச்சிஸுகி தன்னுடைய சொந்த உலகம் ஒன்றையே படைத்துக்கொண்டு, அதில் தான் மட்டுமே வசிக்கிறார்!



தமிழ்ச் சங்கம் தீர்த்து வைக்காத பிரச்சினையை, தனி ஒரு மனிதனாகத் தீர்த்தவர் என்று மோச்சிஸுகியை எல்லோரும் பாராட்டினார்கள். ஆனால், சீக்கிரமே ஒரு விஷயம் தெளிவாகப் புரிந்துவிட்டது : மோச்சிஸுகியின் கட்டுரைகள் யாருக்கும் ஒரு வரி கூடப் புரியவில்லை!

மோச்சிஸுகி ஒரு மர்மமான ஆனால் சுவாரசியமான கரெக்டர். டோக்கியோ வில் பிறந்து நியூயோர்க்கில் வளர்ந்தார். படு கெட்டிக்காரராகப் படித்து 23 வயதிலேயே பி.எச்.டி பட்டம் வாங்கினார். ஜப்பானுக்குத் திரும்பியவர், 33 வயதில் க்யோட்டோ பல்கலைக் கழகத்தில் கிழங்களுக்கு நடுவே இளம் பேராசிரியராகிவிட்டார். மணிக் கணக்காக நாற்காலியை விட்டு எழுந்திருக்காமல் ரிவெட் அடித்துக் கொண்டு உட்கார்ந்து கணிதம் படிப்பார், எழுதுவார்.

"இதற்கு முன்னாலும் மோச்சிஸுகி பல கட்டுரைகள் எழுதியிருக்கிறார். அருமையான படைப்புக்கள் - ஆனால் அதெல்லாம் புரிந்தது. இந்த முறை தான் இப்படித் திருகு வேலை செய்துவிட்டார்" என்கிறார்கள் கணிதர்கள். கடந்த பத்து வருடமாக மோச்சிஸுகி அதிகம் வெளியே வரா-மல் உள்ளுக்குள்ளேயே உட்கார்ந்து வேலை செய்துகொண்டு இருந்தார். அத்தனையையும் இப்படிக் கொண்டு வந்து பப்ளிக்கில் கொட்டிவிட்டு, கூப்பிடக் கூப்பிடத் திரும்பிப் பார்க்காமல் போயே போய்விட்டார்!

பெரிய கண்டுபிடிப்பாளர்கள் ஊர் ஊராக சுற்றுப் பயணம் செய்து தங்கள் தத்துவத்தைப் பிற அறிஞர்கள், மாண வர்களுக்கு விளக்குவார்கள். ஆனால் மோச்சு ஸுகியிடம் "உங்கள் தத்துவம் புரியவில்லை ஐயா, கொஞ்சம் எங்கள் பல்கலைக் கழகத்துக்கு வந்துவிட்டுப் போகிறார்களா?" என்று கேட்டால் "அதெல்லாம் ஒரு சொற்பொழிவில் விவரிக்க முடியாது" என்று மறுக்கிறார் மனிதர்.

"சரி, ஒரு வாரம்? ஒரு மாதம்?"

"ஊஹும்."

"எவ்வளவு நாள் தேவையோ, அவ்வளவு எடுத்துக் கொள்ளுங்களேன்"

கிழங்கு மாதிரி மௌனமாக இருக்கிறார் மோச்சுஸுகி.

உலகெங்கும் கணித அறிஞர்கள் கொதித்துப் போயிருக்கிறார்கள். "மோச்சுஸுகி செய்வது சுத்த மோசடி. ஒரு புதிய தத்துவ விளக்கம் சொல்பவருக்கு, அதைச் சக அறிஞர்களுக்கு விளக்கும் தார்மீகக் கடமை இருக்கிறது. ஒருவர் சொல்ல, அதை மற்றவர்கள் சரி பார்த்து உறுதிப் படுத்துவதே விஞ்ஞான உலகத்தின் ஐதீகமான பழக்கம்" என்கிறார்கள்.

ஆனால் ஏ.பி.சி மட்டும் நிரூபிக்கப் பட்டால் அதன் தாக்கங்கள் மிகவும் ஆழமானவை. எனவே கட்டுரை புரியவில்லை என்று ஒதுக்கிவிடவும் முடியாது. இரண்டில் ஒன்று தீர்க்கும் வரை இராத்திரி தூக்கமும் வராது!

"நிரூபணம் என்றால் என்ன? அது விஞ்ஞான விஷயமே அல்ல, அது ஒரு சமூகவியல் சமாச்சாரம்தான்" என்கிறார் கத்தரீன் ஓ நீல். "என் தத்துவம் சரி என்று என் மனதுக்குப்படுகிறது; ஆனால், தான் அறிந்ததை மற்றவர்கள் ஏற்கும்படி வாதங்களை வைப்பதுதான் நிரூபணம். இதன்படி பார்க்கப் போனால், மோச்சுஸுகி இன்னும் ஏ.பி.சி தத்துவத்தை நிரூபிக்கவே இல்லை" என்று சாடுகிறார்.

மோச்சுவிடம் இருந்து மூச்சுப் பேச்சே இல்லை.

பேராசிரியர் மோச்சிஸுகி எப்படி இருப்பார் என்று இணையத்தில் தேடி-னால், அவர் தன் வாழ்நாளிலேயே இரண்டு ∴போட்டோதான் எடுத்துக்கொண்டு இருப்பார் போலிருக்கிறது.

அதில் ஒன்று, ட்ரைவிங் லைசென்ஸ ுக்காக எடுக்கப்பட்டது. மற்றதில் கழுத்தை நாற்பது பாகையில் திருப்பி எங்கோ மேலே பார்க்கிறார். "உங்க பேர் என்ன?" என்று அவரையே கேட்டால், ஒரு துண்டு ஓடியோ ரெக்கோர்டிங் இருக்கிறது. அதில் "மொதியுகி, சினிஸ்" என்பது போல் ஏதோ முணுமுணுக்கிறார். அது கூடப் புரியவில்லை. கல்யாணம் ஆகாத தனிக் கட்டை என்று தன்னைப் பற்றிச் சொல்லிக் கொள்கிறார்.

அதில் ஆச்சரியம் என்ன?

மக்களை பணயம் வைக்கும் போராட்டங்களை ஏற்க முடியாது

ஜனாதிபதி உறுதிபடத் தெரிவிப்பு

(கொழும்பு)

மக்களைப் பணயம் வைத்து மேற்கொள்ளும் போராட்டங்களை எந்த விதத்திலும் ஏற்றுக்கொள்ள முடியாது என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்

உலக குடும்ப சுகாதார உத்தியோகத்தர் தினத்தையொட்டி நேற்று முன்தினம் பெந்தர பிஸ்கல் லேக் சைட்பீ ஹோட்டலில் நடைபெற்ற தேசிய வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்

உலக குடும்ப சுகாதார உத்தியோகத்தர் தின தேசிய நிகழ்வில் கலந்து கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றேன். சர்வதேச ரீதியில் நாட்டுக் குக் கிடைத்த கௌரவங்களில் இந்த உத்தியோகத்தர்களின் சேவையும் ஒன்று. ஆசியாவைப் பொறுத்த வரை இலங்கை சிசு மரண எண்ணிக்கையில் மிகக் குறைந்த நாடாகவும் மகப் பேற்று மரணம் குறைந்த நாடாகவும் உள்ள மையே அந்தக் கௌரவமாகும்.

நான் பல நாடுகளுக்கு விஜயம் செய்திருந்த போது அந்த நாடுகளில் எமது இந்தச் சேவை தொடர்பில் ஆய்வுசெய்ய அவர்கள் விருப்பம் தெரிவித்தமையைக் குறிப்பிட விரும்புகின்றேன்.

குடும்ப சுகாதார சேவை என்பது எதற்கும் நிகரான சேவையல்ல. அது ஒரு உன்னதமான சேவை. தாயை மட்டுமன்றி தாயின் வயிற்றில் உள்ள குழந்தையின் நலனையும் கவனிக்கும் அரிய சேவை. கருணைச் சேவையுமாகும். இந்த சேவைத் துறைக்கு இலங்கையில் 90 வருடங்களுக்கு மேற்பட்ட வரலாறு உள்ளது என்பதை பெருமிதத்துடன் கூறமுடியும்.

சுகாதாரத் துறை மட்டுமன்றி பல்வேறு துறைகளிலும் இலங்கையர் உலகளாவிய ரீதியில் திறமையானவர்களாகத் திகழ்கின்றனர். அதேபோன்று சுகாதாரத் துறையிலும் பிரகாசிப்பவர்கள் உள்ளனர்.

இவர்கள் உலகின் கவனத்தை ஈர்த்து வருகின்றனர். இதனை மனதில் இருத்தி செயற்படுவது முக்கியம். சுகாதாரத் துறையைப் பொறுத்தவரை அரசாங்கம் சகல தேவைகளையும் நிறைவேற்றி வருகிறது. வருடா வருடம் அத்துறைக்கான நிதியையும் அரசாங்கம் அதிகரித்து வருகிறது. நாம் இத்துறையை ஒரு போதும் குறைத்து மதிப்பிடுவ தில்லை.

வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களின் பிரச்சினையை நோக்கும் போது இது தொழிற்சங்கத்துக்கும் தொழிற்சங்கத்துக்குமிடையிலான பிரச்சினை. இதில் தலையிட்டு சுமுகமாக இதற்குத் தீர்வு காண்பதற்கு சுகாதார அமைச்சர் தயாராகவே உள்ளார். இதனை அந்த சங்கங்கள் கவனத்திற் கொள்ள வேண்டும்.

எவ்வாறாயினும் பேச்சுவார்த்தை மூலமே இப்பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும். அதனை விடுத்து வேலை நிறுத்தப் போராட்டம் என்ற பெயரில் மனித உயிர்களைப் பணயம் வைத்துச் செயற்படுவதை எந்த விதத்திலும் ஏற்றுக் கொள்ள முடியாது.

அப்பாவி மக்கள், வயது முதிர்ந்தோர், குழந்தைகள் என பெருமளவிலானோர் இதனால் பாதிக்கப்படுவதை வேலை நிறுத தத்தில் ஈடுபடுவோர் கவனத்திற் கொள்வது முக்கியம். இந்த சேவையின் உன்னதத்தையும் கௌரவத்தையும் பாதுகாப்பது முக்கியம்.

நாம் பல்வேறு சந்தர்ப்பங்களிலும் பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வு காண தொழிற் சங்கவாதிகள். அரசியல்வாதிகள் எனப் பல தரப்பினரையும் அழைத்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளோம்.அபிவிருத்தி, பொருளாதார நடவடிக்கைகளிலும் நாம் இவ்வாறே செயற்படுகிறோம் என்றார்.

அவுஸ்ரேலியா பறந்தார் ரில்வின்



ஜே.வி.பி. கட்சியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா அவுஸ்ரேலியாவிற்கு விஜயம் செய்துள்ளார்.

கட்சியின் அவுஸ்ரேலிய பிரிவினால் ஒழுங்கு செய்யப் பட்டுள்ள நிகழ்வுகளில் பங்கேற் கும் நோக்கில் அவர் அவுஸ் ரேலியாவிற்கு விஜயம் செய் துள்ளார்.

இரண்டு வார்ங்கள் அவுஸ் ரேலியாவில் ரில்வின் சில்வா தங்கியிருப்பார் எனத் தெரி விக்கப்படுகிறது.

கட்சியின் கொள்கைகள் தொடரபில் தெளிவுபடுத்தும் கூட் டங்களில் ரில்வின் சில்வா பங் கேற்க உள்ளார். கட்சியின் அவுஸ்ரேலிய கிளை ஒழுங் மைப்புப் பணிகளும மேற்கொள் ளப்பட உள்ளதாகத் தெரிவிக் கப்படுகிறது.

றகுணு பல்கலைக்கழக வளாகத்தில் அடுத்த தேசத்திற்கு மகுடம் கண்காட்சி



(கொழும்பு)

தேசத்திற்கு மகுடம் தேசிய அபிவிருத்தி கண்காட்சியை அடுத்த வருடம் றகுணு பல்கலைக்கழக வளாகத்தில் நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷி தலைமையில் நேற்று முன் தினம் மாலை அலரி மாளிகையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

2014 தேசத்திற்கு மகுடம் குறித்த அறிக்கையொன்றை தேசத்திற்கு மகுடம் திட்டத் தலைவர் அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய ஜனாதிபதியிடம் கையளித்தார்.

2014 தேசத்துக்கு மகுடம் அபிவிருத்திக் கண்காட்சியில் காட்சி கூடங்களை அமைத்த சிறந்த நிறுவனங்களுக்கு விருது வழங்கப்பட்டது.

2014 தேசத்துக்கு மகுடம் அபிவிருத்திக் கண்காட்சியில் சிறந்த காட்சிக்கூடத்துக்கான முதலாவது பரிசை தெங்கு அபிவிருத்தி அமைச்சு பெற்றுக் கொண்டது.

அவ்வாறே கடற்படையின் காட்சிக் கூடம் இரண்டாமிடத்தையும் இராணுவத்தினரின் காட்சிக் கூடம் மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டன. இவர்களுக்கான விருதுகள் ஜனாதிபதியின் கரங்களால் வழங்கப்பட்டன.

அமைச்சர்கள், ஆளுநர்கள் ,முதலமைச்சர்கள், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ மற்றும் மாவட்ட செயலாளர்கள், அமைச்சின செயலாளர்கள் உட்பட உயர் அதிகாரிகள் பலரும் இந்நிகழ்வில் கலந்துக் கொண்டனர்.

குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டால் பதவி விலகுவதற்கு தயார்

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அறிவிப்பு



(கொழும்பு)

குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப் பட்டால் பதவி விலகத் தயார் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

பதவிக்கு உத்தியோக பூர்வ மாக வழங்கப்படும் சம்பளம், ஏனைய கொடுப்பனவுகள் மற்றும் வரப்பிரசாதங்கள் தவிர்ந்த எதனையும் பெற்றுக்கொண்டதில்லை.

அவ்வாறு சட்டத்திற்கு முரணான வகையில் பெற்றுக் கொண்டிருந்தால் அதனை நிரூபிக்க முடியும். இலஞ்சம் பெற்றுக் கொண்டதாகவோ அல்லது வேறும் சலுகைகளைப் பெற்றுக் கொண்டதாகவே நிரூபிக்கப்பட்டால் உடன் பதவி விலக தயார்.

மோட்டார் போக்குவரத்து குற்றச் செயல்களின் போது இலகுவாக பணம் செலுத்தக் கூடிய முறைமை உருவாக்கப் பட்டுள்ளது.

இந்த ஆண்டு இறுதியில் அல்லது அடுத்த மாத ஆரம் பத்தில் தண்டப் பணத்தை செல் லிடப் பேசி மூலம் செலுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்

பிரபல தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்ற போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

சட்டவிரோத குடியேற்றவாசிகளை வில்பத்திலிருந்து அகற்ற வேண்டும்

அமைச்சர் பசில் தெரிவிப்பு

(கொழும்பு)

வில்பத்து சரணாலயத்திற்கு அருகில் எவராவது பலவந்தமாக குடியேறியிருந்தால், அவர்களை அங்கிருந்து அப்புறப்படுத்த அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ச தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்,

வடக்கில் மேற்கொள்ளப்படும சகல மீள்குடியேற்றங்களும் விசேட செயலணிக் குழுவின் கீழ் விஞ்ஞான அடிப்படையில் ஆராய்ந்து மேற்கொள்ளப் படுகிறது.

வில்பத்து வனப்பகுதியில் எவரும் குடியேறவில்லை என வனஜீவராசிகள் அமைச்சர் தெரிவித்துள்ளார்.



சர்ச்சைகளை ஏற்படுத்தியுள்ள வில்பத்து சரணாலயத்திற்கு அருகில் இருக்கும் குடியேற்றம், வடக்கு மாகாண விசேட செயலணிக் குழுவினால் மேற்கொள்ளப்பட்ட மீள்குடியேற்றம் அல்ல எனவும் அமைச்சர் கூறியுள்ளார்.

நாடாளுமன்றை பணயமாக்க கூட்டமைப்பினர் சதி

அமைச்சர் விமல் வீரவன்ச குற்றச்சாட்டு

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசும் இணைந்து எதிர்காலத்தில் நாடாளுமன்றத்தை பணயமாக எடுப்பதற்கான சாத்தியம் இருப்பதாக தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர், அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

கொழும்பு சுகததாச மைதானத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற அந்த முன்னணியின் இரண்டாவது பேரவைக் கூட்டத்தின் போதே அமைச்சர் இந்தக் கருத்தை தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கசினோ போன்ற சூதாட்டம் மற்றும் துர் செயல்கள் உள்ளடங்கும் வகையில் எந்தவொரு முதலீடுகளுக்கும் வரிச் சலுகை வழங்கப்படக் கூடாது என்பது உள்ளிட்ட 12 பிரேரணைகள் தேசிய சுதந்திர முன்னணியினால் நிறைவேற்றப்பட்டுள்ளன.



இதேவேளை, அரசியலமைப்புக்கு புறம்பாக பிரிவினைவாதக் கருத்துக்களை பரப்பி வரும் பல்வேறு இயக்கங்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு தராதரம் பாராது சட்டத்தை வலுப்படுத்த வேண்டும் என்றும் அந்த பிரேரணையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

மாணவர்களின் ஆங்கில அறிவு உயர் கல்விக்கு அடித்தளம்

ஈ.சிற்றி ஆங்கிலக் கல்லூரியின் தலைவர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

ஒரு மாணவனுக்கு நாம் கொடுக்கக்கூடிய செல்வம் கல்விச் செல்வம் ஒன்றே. கணிதமும் ஆங்கிலமும் மனித முன்னேற்றத்துக்கும் விஞ்ஞான வளர்ச்சிக்கும் பெரிதும் உதவக்கூடியவை என யாழ்ஈ.சிற்றி ஆங்கிலக் கல்லூரி தலைவர் லயன். ஜெ.றஜீவன் தெரிவித்தார்.

வேலணையில் அமைந்துள்ள கலைமகள் சர்வதேச ஆங்கில கல்லூரியின் புதிய கட்டடத் திறப்பு விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது,

முன்னொரு காலத்தில் தீவக மக்கள் விஞ்ஞானிகளாகவும் மருத்துவத்துறையில் சிறந்தவர்களாகவும் பேராசிரியர்களாகவும் அறிஞர்களாகவும் சிறிந்து விளங்கினர். ஆனால் தற்போது இந்தநிலைமாறி கல்வியில் தீவக மக்கள் வீழ்ச்சி கண்டுள்ளனர் என்றார்.

எனவே, இக்கல்லூரி எதிர்காலத்தில் பல அறிஞர்களையும் சிந்தனையாளர்களையும் உருவாக்கி தீவகத்தின் கல்வி வளர்ச்சிக்கு உதவ வேண்டும். அதுமட்டுமன்றி மாணவர்களின் முன்னேற்றத்துக்காக உழைக்கம் ஆசிரியர்களும் போற்றப்பட வேண்டும் என்றார்.

இந்நிகழ்வுக்கு வேலணைப் பிரதேச சபைத்தலைவர் சின்னையா சிவராசா, கிராம சேவை உத்தியோகத்தர் பரமேஸ்வரன், லயன்.கலாநிதி க.ஜெயச்சந்திர மூர்த்தி, ஓய்வு பெற்ற ஆசிரியர் எஸ்.திசைநாயகம் பிள்ளை ஆகியோர் கலந்து கொண்டனர்.


தகைமைகாண் பரீட்சைக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

மொரட்டுவ பல்கலைக்கழகத்தில் கட்டடக்கலை பட்டம், வடிவமைப்பு பட்டம், காணி சீரமைத்தல் மோஸ்தா வடிவமைப்பு, உற்பத்தி அபிவிருத்திப்பட்டம் ஆகிய கற்கை நெறிகளை பயிலுவதற்கான தகைமைகாண் பரீட்சைகளுக்காக விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

விண்ணப்பதாரிகள் கட்டடக்கலை பட்டம், வடிவமைப்பு பட்டம் கற்கை நெறிக்கு 2013 இல் க.பொ.த (உ/த) சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

பரீட்சைக் கட்டணம் 300 ரூபாவாகும் விண்ணப்பங்கள் எதிர்வரும 26 ஆம் திகதிக்கு முன்னர் சிரேஷ்ட உதவிப்பதிவாளர், பரீட்சைகள், மொரட்டுவ பல்கலைக்கழகம், மொரட்டுவ என்ற விலாசத்திற்கு பதிவுத்தபாலில் அனுப்ப வேண்டும் கடித உறையின் இடது மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பரீட்சையின் பெயரை எழுத வேண்டும். விண்ணப்பப்படிவங்களை http;//www;mrt.2ac.lk என்ற இணையத்தின் மூலம் பெற்றுக்கொள்ளலாம். (105)



கரணவாய் மேற்கு உடுப்பிட்டி இமையாணன் கிராமத்தில் அமைந்துள்ள துவளி கண்ணகை அம்மன் ஆலய வீதிக்கான பெயர்ப் பலகை அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. இதில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் பிரதிநிதி ஒருவர் பெயர்ப்பலகையை திரைநீக்கம் செய்வதையும் காணலாம். (18)

சிறுதானிய பயிர்ச்செய்கையில் ஆர்வம் காட்டும் விவசாயிகள்

(அச்சுவேலி)

அச்சுவேலிப் பகுதியில் சிறுதானியப் பயிர்ச் செய்கையினை மேற்கொள்வதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகளில் விவசாயிகள் ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது பெய்துவரும் மழையை சாதகமாகப் பயன்படுத்தியே இந்த நடவடிக்கையில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தமது தோட்ட நிலங்களைப் பதப்படுத்தி பயறு, கௌப்பி, குரக்கன், எள்ளு போன்ற சிறுதானியப் பயிர் வகைகளை பயிரிடுவதற்காகவே இவர்கள் இந்த நடவடிக்கையினை மேற்கொண்டுள்ளதாகவும் தற்போது தோட்ட நிலங்களைப் பண்படுத்தி விளை நிலங்களாக மாற்றி வருகின்றமையைக் காணக்கூடியதாக உள்ளது. (85)

ஜனரஞ்சகத் தன்மையை முதன்மைப் படுத்தி பக்கம் சாராமல் துணிச்சலுடன் தரமான அம்சங்களை அள்ளிவரும் வாரமலர்.



வாரமலர்
தினமுரசு

நாளைய தினமுரசு வாரமலரில்... 08.05.2014

- சர்வதேச புலிகளும் அமெரிக்க எச்சரிக்கையும்...
- திருமலையில் ஒலித்த அனந்தியின் ஆவேசம்
- கிழக்கு உக்ரேனைக் கைப்பற்றும் ரஷ்ய ஆதரவுப் படைகள்!
- பொதுபல சேனாவுக்கு அதிகாரம் அனுசரணையா?
- குடும்பத்தை பலியெடுத்த காமவெறி



உங்கள் முகவர்களிடம் கேட்டு வாங்கிப் படியுங்கள்!

புதியவன்

சூடு - சுவை - சுவாரசியம் - அதுதான் தினமுரசு

நடுவரை மிரட்டிய இத்தாலிப் பிரதமர்

இரண்டாவது உலக கோப்பை கால் பந்து தொடர் 1934இல் இத்தாலியில் நடை பெற்றது. முதன்முறையாக தகுதிச் சுற்று ஆட்டங்கள் நடாத்தப்பட்டன. மொத்தம் 32 அணிகள் பங்கேற்றன. விலகல் முறையில் நடைபெற்ற தகுதிச் சுற்று ஆட்டங்களின் முடிவில் 16 அணிகள் தொடரில் களமிறங்கின. மொத்தம் 17 போட்டிகள் நடைபெற்றன. 1930இல் உருகுவேயில் நடைபெற்ற முதல் உலக கோப்பை தொடரை ஐரோப்பிய அணி கள் புறக்கணித்தன. இதற்கு பதிலடியாக இத்தொடரை உருகுவே புறக்கணித்தது.

இத்தாலியின் அப்போதைய பிர-தமர் முசோலினி தனது பாசிச கொள் கையை பரப்பும் களமாக, உலக கோப்பை தொடரைப் பயன்படுத்த முயன்றார். இத்தாலி அணி மோதவிருந்த போட்டிகளுக்கு முதல் நாள், நடுவர்களை சந்தித்து, தீர்ப்புகளை இத்தாலி அணிக்கு சாதகமாக வழங்க வேண்டும் என கட்டளையிட்டார். இத்தொடரில் இத்தாலி-ஸ்பெயின் அணிகள் மோதிய காலிறுதி ஆட்டம், இரண்டு நாள் நடைபெற்றது. முதல் நாள் ஆட்டத்தில் இரு அணிகளும் தலா 2 கோல்களுடன் சமநிலையில் இருந்தன. இதனையடுத்து இரண்டாவது நாள் ஆட்டத்தில், இத்தாலி யின் கிசப்பா மயா ஒரு கோலடித்து, அணிக்கு வெற்றி தேடித்தந்தார்.

அரையிறுதியில் இத்தாலி, ஆஸ்திரியாவையும், செக்கோஸ்லோவேக்கியா, ஜேர்மனியையும் வீழ்த்தி, இறுதிப் போட்டிக்கு முன்னேறின. தலைநகர் ரோமில் நடைபெற்ற இறுதிப் போட்டியில், தனக்கென பிரத்தியேகமாக ஒதுக்கப்பட்ட பாக்சில் முசோலினி அமர்ந்து போட்டியை இரசித்தார். பரபரப்பாக நடந்த இப்போட்டியில் கடைசி 20 நிமிடங்கள் வரை, இரு அணிகளும் கோல் எதுவும் அடிக்கவில்லை.

யாரும்எதிர்பார்க்காதநிலையில், செக்கோஸ்லோவேக்கியாவின் பக், ஒரு கோல் அடிக்க, 1-0 என முன்னிலை பெற்றது. இதனால் முசோலினி சோகத்தின் உச்சத்திற்கே சென்றார். அடுத்த 5 நிமிடங் களில் இத்தாலியின் ஓர்சி கோலடிக்க, ஆட்டம் சமநிலையை எட்டியது. பின்னர் ஒருவழியாக சகஜ நிலைக்கு திரும்பினார் முசோலினி. அதற்குப் பின் கூடுதல் நேரத்தில் சியாவியோ ஒரு கோல் அடிக்க, இத்தாலி அணி 2-1 என்ற கணக்கில் வெற்றி பெற்று, உலக கோப்பையை கைப்பற்றியது. இத்தாலியில் நடைபெற்ற 2ஆவது உலக கோப்பை தொடரில் மொத்தம் 70 கோல்கள் அடிக்கப்பட்டன. அதிக பட்சமாக செக்கோஸ்லோவேக்கியாவின் ஓல்ட்ரிச் நெஜட்லி 5 கோல்கள் அடித்தார். இவருக்கு கோல்டன் ஷு வழங்கப்பட்டது.



கால்பந்து திருவிழா இன்னும் 35 நாட்கள்



இது குக்கின் இலக்கு

இலங்கை, இந்திய அணிகளுக்கெதி ரான டெஸ்ட் தொடர்களை வென்று மீண்டும் தரப்படுத்தலில் முதலிடத்தைப் பிடிப்போம் என இங்கிலாந்து அணிக் கப்டன் குக் தெரிவித்துள்ளார். இலங்கை, இந்திய அணிகள் பலம் வாய்ந்தவை என்பதில் ஐயமில்லை. இருப்பினும் இரு அணிகளையும் எங்களால் வீழ்த்த முடியும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்றது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தொடரில் கலிஸுக்கு வாய்ப்பு

இலங்கை அணிக்கெதிரான எதிர்வரும் யூலை மாதம் நடைபெறவுள்ள சர்வதேச ஒருநாள் போட்டியில் ஜக் கலிஸ் விளையாடுவார் என தென்னாபிரிக்க அணியின் தேர்வாளர் அன்றூ கூஸ்டன் தெரிவித்துள்ளார்.

2015 ஆம் ஆண்டு உலகக் கிண்ண கிரிக்கெட் தொடருக்கான தென்னாபிரிக்க அணியில் இடம்பிடிப்பதற்கு இது வாய்ப்பை ஏற்படுத்தும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த ஆண்டு டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்ற ஜக் கலிஸ் உலகக் கிண்ணத் தொடரில் விளையாடுவதே தமது இலக்கு என கூறியிருந்தார்.

அத்துடன் சிம்பாப்வே அணிக்கெதிரான தொடரிலும் அவர் விளையாடுவார் என அன்றூ கூஸ்டன் குறிப்பிட்டுள்ளார்.

ராஜஸ்தான் கிரிக்கெட் சபைத் தேர்தலில் மோடி வெற்றி

ராஜஸ்தான் கிரிக்கெட் சங்கத் தலைவராக லலித்மோடி தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

ஐ.பி.எல். முன்னாள் தலைவர் லலித்மோடி, முறைகேடு தொடர்பாக ஐ.பி.எல். அமைப்பின் தலைவர் பதவியில் இருந்து இந்திய கிரிக்கெட் சபையால் நீக்கப்பட்டார்.

மேலும் இந்திய கிரிக்கெட் சபை (பி.சி.சி.ஐ.), லலித்மோடிக்கு ஆயுள்கால தடை விதித்தது. கிரிக்கெட் தொடர்பான பணிகளில் அவர் செயற்பட முடியாத நிலை ஏற்பட்டது.

இதற்கிடையே கடந்த டிசம்பர் மாதம் நடைபெற்ற ராஜஸ்தான் கிரிக்கெட் சங்க தேர்தலில் லலித்மோடி போட்டியிட்டார். தலை-வர் பதவிக்கு அவர் மனுத்தாக்கல் செய்திருந்தார்.

ராஜஸ்தான் கிரிக்கெட் சங்க தேர்தலில் லலித்மோடி போட்டியிட தடை விதிக்க வேண்டும் என்று உச்ச நீதிமன்றத்தில் இந்திய கிரிக்கெட் சபை முறையிட்டது. ஆனால் உச்ச நீதிமன்றம் இதை ஏற்கவில்லை. உச்ச நீதிமன்றத்தின் மேற்பார்வையில் ராஜஸ்தான் கிரிக்கெட் சங்க தேர்தல் நடைபெற்றது.

தேர்தல் முடிவு சீல் வைக்கப்பட்ட கவரில் உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது.



இந்த முடிவை அறிவிப்பதில் உச்ச நீதிமன்றம் பல முறை தாமதம் செய் தது. கடந்த 30 ஆம் திகதி வழக்கு விசாரணையின்போது தேர்தல் முடிவை நேற்று அறிவிக்கு மாறு நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட ஆணையருக்கு உத் தரவிட்டு இருந்தது.

அதன்படி உச்ச நீதிமன்றத்தின் பார்வையாளர் ராஜஸ்தான் கிரிக்கெட் சங்க தேர்தல் முடிவை ஜெய்ப்பூரில் நேற்று வெளியிட்டார். லலித்மோடி தலைவராக தேர்வு செய்யப்பட்டு உள்ளார்.

இந்திய கிரிக்கெட் சபை ஆயுள் கால தடை விதித்து இருக்கும் நிலை யில் அவர் ராஜஸ்தான் சங்கத்துக்கு தலைவராக தேர்வாகி உள்ளார். எனவே அம்மாநில சங்கத்தை தகுதி நீக்கம் செய்யும் பணியில் பி.சி.சி.ஐ. ஈடுபடும் என்று தெரிகிறது. லலித் மோடி 2005ஆம் ஆண்டு முதல் 2009ஆம் ஆண்டு வரை ராஜஸ்தான் கிரிக்கெட் சங்கத் தலைவராக இருந்த துள்ளார்.

ஐ.பி.எல். புள்ளிப் பட்டியல்

அணிகள்	போட்டி	வெற்றி	தோல்வி	புள்ளி	ஓட்ட விகிதம்
சென்னை	7	6	1	12	+1.057
பஞ்சாப்	6	5	1	10	+1.039
ராஜஸ்தான்	7	5	2	10	+0.483
பெங்களூர்	6	3	3	06	-0.138
கொல்கத்தா	7	2	5	04	-0.210
ஹைதராபாத்	6	2	4	04	-0.571
டில்லி	7	2	5	04	-0.958
மும்பை	6	1	5	02	-0.726

அதிக ஓட்டங்கள் மைக்வெல்ஸ் 345 (6 போட்டிகள்)

அதிக வீக்கெட் தம்பே 12 (7 போட்டிகள்)



இன்றைய ஆட்டம்

டில்லி எதிரி கொல்கத்தா

இடம்: புதுடில்லி. நேரம்: மாலை 4 மணி

பஞ்சாப் எதிர் சென்னை .

இடம் : கட்டாக். நேரம் இரவு 8 மணி.

ஐ.பி.எல். துளிகள்

நாங்கள் மிகவும் சிறப்பாக ஆடி வருவது மகிழ்ச்சி அளிக்கின்றது. டில்லி அணிக்கு எதிரான ஆட்டத்தின் கடைசி 2 அல்லது 3 ஓவர்களில் அதிகமான ஓட்டங் களைக் கொடுத்து விட்டோம். எங்களது பந்து வீச்சில் முன்னேற்றம் தேவை. கடைசி ஓவர்களில் வீசக் கூடிய சிறந்த வேகப்பந்து வீரர்கள் அணிக்கு தேவைப் படுகிறது. மழை பெய்தது எங்களுக்கு உதவியாக இருந்தது. இது டில்லி பந்துவீச்சாளர்களுக்குச் சவாலாக அமைந்தது. நான் பார்த்த வகையில் டில்லி ஆடுகளம் நல்ல ஆடுகளமாகவே இருந்தது. அந்த அணி வீரர் சுக்லா சிறப்பாகப் பந்துவீசினார்.

டோனி (சென்னை அணிக் கப்டன்)

சென்னை அணிக்கு எதிரான போட்டியில் வெற்றிக் காகப் போராடினோம். ஆனால் எங்களால் வெற்றி யைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை. இதற்காக யாரையும் குற்றம் சுமத்த இயலாது. சென்னை அணி மிகவும் சிறப்பாக ஆடியது. "பிளேஓப்" சுற்றுக்கான வாய்ப்பு இன்னும் எங்களுக்கு இருப்பதாகவே நம்புகிறேன்.

கெவின் பீற்றர்சன் (டில்லி அணிக் கப்டன்)

ஆடுகளம் துடுப்பாட்டத்திற்கு ஏற்ற வகையில் இருந்தது. நானும், மக்கலமும் ஒருவருக்கொருவர் ஊக்குவித்துக் கொண்டோம். இது ஒரு நல்ல சேசிங் ஆகும். நாங்கள் சிறப்பான அணியாகத் திகழ்கிறோம். தொடர்ந்தும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி அணியின் வெற்றிக்குப் பங்களிப்பதே எனது இலக்கு.

ஸ்மித் (சென்னை)

பெங்களூர் அணிக்கு எதிரான ஆட்டத்தின் பெரும் பகுதி ஹைதராபாத் ஆதிக்கம் செலுத்தி வந்தபோதும் தோல்வி அடைந்தது ஏமாற்றத்தை அளித்துள்ளது. டி வில்லியர்ஸின் துடுப்பாட்டம் தனிச்சிறப்புடையது. ருவென்ரி-20 ஆட்டத்தில் இதுபோன்ற ஆட்டத்தை இதற்கு முன் நான் கண்டதில்லை. தொடர்ந்து வரும் போட்டிகளில் வெற்றிக்கான வழியைத் தேட முயற்சிப்போம்.

லக்ஸ்மன் (ஹைதராபாத் அணி ஆலோசகர்)

ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியில் இடம் பிடித் துள்ள சம்சனிடம் நல்ல திறமை இருக்கிறது. அவர் வருங்காலத்தில் நட்சத்திர துடுப்பாட்ட வீரராக உருவெடுப்பார் என்று நம்புகிறேன். எப்பொழுதும் பந்து வீச்சாளர்களுக்கு தான் பாகிஸ்தானில் இரசிகர்கள் அதிகம். இதனால் பலவிதமான பந்து வீச்சாளர்கள் உள்ளனர். துடுப்பாட்ட திறமை கொண்ட இளம் வீரர் களை பாகிஸ்தான் உருவாக்க வேண்டியது அவசிய மானதாகும். வக்கார் யூனிஸ்சை பாகிஸ்தான் அணி யின் தலைமை பயிற்சியாளராக நியமிக்க எடுத்த முடிவு நல்லதாகும்.

ரமீஸ்ராஜா (முன்னாள் பாகிஸ்தான் வீரர்)

பிளே ஒப் சுற்றுக்கான போட்டிக்குத் தகுதி பெறக் கூடிய வாய்ப்பு எங்களுக்கு இன்னும் இருக்கின்றது. அடுத்து வரும் அனைத்துப் போட்டிகளையும் வென் றால் நிச்சயம் அந்த வாய்ப்பைப் பெற்றுக்கொள்ள முடியும். துரதிஷ்டவசமாக நாங்கள் சில தோல்வி களைச் சந்தித்திருக்கின்றோம். இதிலிருந்து விரைவில் மீண்டும் வெற்றிப் பாதைக்குத் திரும்புவோம். சகல வீரர்களையும் தங்கள் பணியை உணர்ந்து ஆடு கின்றார்கள்.

கம்பீர் (கொல்கத்தா அணிக் கப்டன்)

உடுவில் பிரதேச செயலக விளையாட்டு விழா; இணுவில் கலையொளி சம்பியன்





(உடுவில்)

வலி. தெற்கு உடுவில் பிரதேச செயலக விளையாட்டு விழாவின் வெற்றிக் கிண்ணத்தை இணுவில் கலையொளி அணி கைப்பற்றிக் கொண்டது. உடுவில் பிரதேச செயலகத்திற்குட்பட்ட பதிவு செய்யப் பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான விளையாட்டு விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இதில் கால்பந்தாட்டத் தொடரின் இறுதி ஆட்டம் மற்றும் தடகளப் போட்டிகள் நடைபெற்றன.

கால்பந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டியில் ஏழாலை மயிலங் காடு ஞானமுருகன் அணியினை எதிர்த்து தாவடி காளியம்பாள் அணி மோதியது. ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய ஏழாலை மயிலங்காடு ஞானமுருகன் அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது. தொடர்ந்து தடகளப் போட்டிகள் நடைபெற்றன.

ஒட்டுமொத்த புள்ளிகள் அடிப்படையில் இணுவில் கலையொளி விளையாட்டுக்கழகம் 57 புள்ளிகளைப் பெற்று முதலிடத்தைப் பிடித்துக் கொண்டது. 24 புள்ளிகளைப் பெற்ற மல்லாகம் கோட்டைக்காடு ஸ்ரீமுருகன் விளையாட்டுக் கழக அணி இரண்டாமிடத்தினையும் 21 புள்ளிகளைப் பெற்ற இணுவில் இந்து விளையாட்டுக்கழக அணி மூன்றாமிடத்தினையும் பெற்றுக் கொண்டன.

பிரதேச செயலாளர் மு.நந்தகோபாலன் தலைமையில் நடைபெற்ற இப்போட்டி நிகழ்வில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் கலந்து கொண்டு வெற்றியீட்டிய அணிகளுக்கு கிண்ணங்களை வழங்கி கௌரவித்தார்.





கூடைப்பந்தில் இராமநாதன் கல்லூரி சம்பியன்





(உடுவில்)

வலிகாம பாடசாலை அணிகளுக்கிடையிலான வலய மட்ட கூடைப் பந்தாட்டப் போட்டியில் சுன்னாகம் இராமநாதன் மகளிர் கல்லூரி அணி சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக்கொண்டது.

இப்போட்டி கடந்த வாரம் உடுவில் மகளிர் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இப்போட்டித் தொடரில் வலிகாமம் கல்வி வலயத்தைச் சேர்ந்த பல அணிகள் மோதியது. இருப்பினும் இப்போட்டித் தொடரின் இறுதி ஆட்டத்தில் உடுவில் மகளிர் கல்லூரி அணியும் சுன்னாகம் இராமநாதன் கல்லூரி அணியும் மோதின. ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய இராமநாதன் கல்லூரி அணி 37-16 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று வலய மட்ட சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

இதேவேளை, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற பெண்களுக்கான ஹொக்கிப் போட்டியில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது. இப்போட்டித் தொடரின் இறுதிப் போட்டியில் உடுவில் மகளிர் கல்லூரி அணியும் வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணியும் மோதின. விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தை வென்றது. மூன்றாமிடத்திற்கான போட்டியில் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி அணியும் குளமங்கால் றோமன் கத்தோலிக்கப் பாடசாலை அணியும் மோதின. இதில் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி அணி 3-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று மூன்றாமிடத்தைப் பிடித்துக் கொண்டது. (93)

வட்டுக்கோட்டையில் நாளை வலய மட்ட தடகளம்

(வட்டுக்கோட்டை)

வலிகாமம் வலய பாடசாலைகளுக்கிடையிலான வலய மட்ட மெய்வல்லுநர் போட்டி நாளை முதல் எதிர்வரும் 11ஆம் திகதி வரை வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதில் தடகளப் போட்டிகள் நடைபெறவுள்ளதாகவும் பங்குகொள்ளவுள்ள வீர,வீராங்கனைகளை உரிய நேரத்திற்கு வருகை தந்து நேர விரயத்தைத் தவிர்த்துக் கொள்ளுமாறு போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (93)

ஆண்டு நிறைவு மென்பந்து கிரிக்கெட்

(கைதடி)

கைதடி மேற்கு சனசமூக நிலையத்தின் 66ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு குமரன் விளையாட்டுக்கழகம் நடாத்தும் தென்மராட்சி பிரதேச அணிகளுக்கிடையிலான ஒன்பது பேர் கொண்ட மென்பந்து கிரிக்கெட் போட்டியை விரைவில் நடாத்தவுள்ளது.

12 ஓவர்கள் கொண்ட இம்மென்பந்து கிரிக்கெட் தொடரில் பங்குகொள்ளவுள்ள அணிகளை நாளை மாலைக்குள் பதிவுகளை மேற்கொள்ளுமாறு போட்டி அமைப்பாளர்கள் கேட்டுள்ளனர்.

பங்குகொள்ளவுள்ள அணிகள் 0772911259 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு தமது பதிவுகளை மேற்கொள்ள முடியும் எனவும் போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (48)

இறுதியில் கார்மேல் போய்ஸ்

(மட்டுவில்)

மட்டுவில் வளர்மதி விளையாட்டுக்கழகத்தினால் நடாத்தப்பட்டு வரும் மென்பந்து கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டிக்கு குருநகர் கார்மேல் போய்ஸ் அணி முன்னேறியுள்ளது.

வடமாகாண மென்பந்து கிரிக்கெட் அணிகளுக்கிடையில் நடைபெற்று வரும் இப்போட்டி அணிக்கு ஆறு பேரைக் கொண்டதாக நடைபெற்று வருகின்றது.

இப்போட்டித் தொடரில் அரையிறுதி ஆட்டமொன்று கடந்த 27ஆம் திகதி மட்டுவில் வளர்மதி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது. இதில் குருநகர் கார்மேல்போய்ஸ் அணியும் சச்சின் அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய குருநகர் கார்மேல் போய்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட ஐந்து ஓவர்கள் நிறைவில் இரண்டு விக்கெட்டுக்களை இழந்து 74 ஓட்டங்களைப் பெற்றது. இதில் பவீன் நான்கு சிக்ஸர்கள் அடங்கலாக 27, தேசிகன் ஐந்து சிக்ஸர்கள் அடங்கலாக 35. ஓட்டங்களைப் பெற்றனர்.

பதிலுக்கு 75 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய சச்சின் அணி 2.4 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து ஒன்பது ஓட்டங்களைப் பெற்று படுதோல்வியடைந்தது. பந்து வீச்சில் றோக்ஷன், மது ஆகியோர் தலா இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். இவ் வெற்றியின் மூலம் குருநகர் கார்மேல் போய்ஸ் அணி இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளது. (48)



வலிகாமப் பாடசாலை அணிகளுக்கிடையிலான ஆண்கள் ஹொக்கிப் போட்டியில் சம்பியன் பட்டத்தை வென்ற தெல்லிப்பளை யூனியன் கல்லூரி அணியைக் காணலாம். இப்போட்டியில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணியை யூனியன் கல்லூரி அணி 3-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றமை குறிப்பிடத்தக்கது. (93)

மட்ரிட் முன்னேற்றம்

(லண்டன்)

சம்பியன்ஸ் லீக் கால்பந்து தொடரின் இறுதிப் போட்டிக்கு அத்லெட்டிகோ மட்ரிட் அணி முன்னேறியது.

ஐரோப்பிய சம்பியன்ஸ் லீக் கால் பந்து தொடர் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளது. இதன் இறுதிப் போட்டிக்கு ரியல் மட்ரிட் அணி முன்னேறியது. மற்றொரு அரையிறுதியில் அத்லெட்டிகோ மட்ரிட், செல்சி அணிகள் மோதின. இதன் முதல் லீக் போட்டி சமநிலையானது. இரண்டாவது போட்டி லண்டனில் நேற்று முன்தினம் நடைபெற்றது.


செல்சி அணிக்கு டோரஸ், 36ஆவது நிமிடம் ஒரு கோல் அடித்தார். 44ஆவது நிமிடத்தில் அட்ரியன் ஒரு கோல் அடிக்க முதல் பாதி 1-1 என, சமனானது.

பின், 60ஆவது நிமிடம் கிடைத்த பெனால்டி வாய்ப்பில் கோஸ்டா ஒரு கோல் அடித்தார். அடுத்து துரான் (72ஆவது நிமிடம்) மற்றொரு கோல் அடிக்க, 3-1 என்ற கோல்கணக்கில் அத்லெட்டிகோ மட்ரிட் அணி வெற்றி பெற்று, இறுதிப் போட்டிக்கு முன்னேறியது. எதிர்வரும் 24ஆம் திகதி லிஸ்பனில் நடைபெறவுள்ள இறுதிப் போட்டியில் ரியல் மட்ரிட், அத்லெட்டிகோ மட்ரிட் அணிகள் மோதவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



தமிழ் அரசியல் தரப்பினர் கேட்டுக்கொள்ள வேண்டிய கேள்வி...

அரசாங்கத்தால் பயங்கரவாதத் துடன் தொடர்பானவர்கள் என தடை செய்யப்பட்டிருக்கும் 16 அமைப்புக்களில், உலகத் தமிழர் பேரவை, பிரித்தானிய தமிழர்



பேரவை, கனடிய தமிழ் காங்கிரஸ், நாடுகடந்த தமிழீழ அரசு போன்ற ஒரு சில அமைப்புக்களைத் தவிர ஏனைய அமைப்புக்கள் குறித்து (இலங்கைக்குள்ளிருந்து வெளி-வரும்) தமிழ் ஊடகச் சூழலில் கூட எவரும் அலட்டிக்கொண்டதாக சான்றில்லை.

மேற்குறிப்பிட்ட அமைப்புக்கள் எவையும், இலங்கையின் வடக்கு கிழக்கு பகுதியில் பூர்வீகமாக வாழ்ந்துவரும் தமிழ் மக்களுக்கு, ஒரு நியாயமான தீர்வு கிடைக்க வேண்டும் என்பதில் அக்கறையுடை வர்களாக, தங்களை நிரூபித்திருக்க வும் இல்லை. மாறாக அழிவுற்ற தமிழீழ விடுதலைப் புலிகள் இயக் கத்தின் தொடர்ச்சியாக அல்லது அதன் நிழல் அமைப்பாகவே தங்களை காண்பித்துக் கொண்டனர். காண்பித்துக் கொள்கின்றனர். பிரபாகரனின் அரசியல் இலக்கே தங்களுடைய அரசியல் இலக்கென்றும் சூளுரைக்கின்றனர்.

ஐக்கிய இலங்கைக்குள் அதி காரப் பகிர்வு குறித்து இவர்கள் ஒரு போதும் வாய்திறந்ததேயில்லை. ஆரம்பத்தில் விடுதலைப் புலிகளின் அழிவு குறித்து பல பொய்யான தகவல் களை புலம்பெயர் தமிழ் மக்கள் மத்தியில் பரப்பிக் கொண்டிருந்த மேற்படி அமைப்பின் உறுப்பினர்கள் ஆண்டுகள் நகர, நகர மெதுவாக தங்கள் பொய்யு ரைத்தலிலிருந்து, தாங் களாவே விலகிக் கொண்ட னர். ஆனாலும் புலிக் கொடி யை தொடர்ந்தும் இறுகப் பற்றிக் கொண்டனர்.

இந்த பின்னணியை அடிப்படையாகக் கொண்டே, அரசாங்கம் ஐக்கிய நாடு கள் சபையின் பாதுகாப்புப் பேரவையினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பயங்கரவாத அமைப்புக்களை தடுப்பதற் கான உலகளாவிய ஒத்து ழைப்பிற்கான ஏற்பாடான, பிரேரணை 1376ஆம் பிரிவின் கீழ் மேற்படி 16 அமைப்புக்களை தடைசெய்திருக்கிறது.

இவ்வாறான விடயங் களை முன்னுணர்ந்த சில ஆய்வாளர்களும், ஊடகவிய லாளர்களும் புலிவாதத்தை கைவிடுமாறும், அதனை கைக்கொள்வதன் மூலம் தமிழ் மக்களுக்கு எந்தவொரு நன்மையையும் செய்ய முடியாதென்றும், கடந்த நான்கு ஆண்டுகளாக வாதிட்டு வந்திருக்கின்றனர். ஆனால் அவ்வாறு யதார்த்தத்தை உணர்ந்து செயற்படுமாறு வலியுறுத்திய வர்கள் அனைவரும் துரோகி களென்றும் அரசாங்கத்தின் ஆட்களென்றும் எள்ளிநகை யாடப்பட்டனர். ஆனால் அவ்வாறானவர்கள் முன்னுணர்ந்ததே இன்று நடைபெற்றிருக்கின்றது.

ஜெனிவா விவகாரத்திற்கு பதிலடியாகவே அரசாங்கம் இத்தகையதொரு முடிவை எடுத்ததாக சிலர் வாதிடுவ தில் ஓரளவு உண்மையிருப் பினும் கூட, அது முழு உண்மையாக இருக்க வாய்ப்பில்லை. அரசாங்கம் மீண்டும் புலிகளுக்கு புத்துயிரளிக்கும் முயற்சியில் மேற்படி புலம்பெயர் அமைப் புக்கள் ஈடுபட்டுவருவதாக குற்றம்சாட்டியிருக்கிறது.

இத்தகை சூழலில்தான் மேற் படி அமைப்புக்களை இலங் கைக்குள் தடை செய்யும் முடிவை அறிவித்திருக்கின்றது.

ஜெனிவாவில் பிரேரணை-யை எதிர்கொண்டிருக்கும் சூழலிலேயே தர்மபுரத்தில் ஒருவர் துப்பாக்கிப் பிர-யோகம் மேற்கொண்டதாக செய்திகள் வெளியாகியிருந் தன. அதனைத் தொடர்ந்து வடக்கு கிழக்கில் மட்டுமல்ல கொழும்பிலும் கூட சிலரை அடையாளம் காட்டுமாறு, மக்களின் ஒத்துழைப்புக்கள் கோரப்பட்டிருந்தன. அரசாங் கத்தை விமர்சிப்போர் இவை அனைத்தும் அரசாங்கத்தின் திட்டமிட்ட சோடிப்புக்கள் என்று கூறி, ஒரே வரியில் அனைத்தையும் நிராகரிக்கின்றனர்.

விடுதலீலப் புலிகளின் அழிவின் பின்னரான, கடந்த நான்கு ஆண்டு கால தமிழர் அரசியலை உற்று நோக்கி னால், ஒரு விடயம் வெள்ளி டைமலையாகும். பெரும்பான் மையான தமிழ் மக்களின் ஆதரவை பெற்றி ருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் சரி, கூட்ட மைப்பின் எதிரணியாக செயற்பட்டுவரும் கஜேந் திரகுமார் அணியினரும் சரி, புலம்பெயர் அமைப்புக் களுடன் நெருங்கிய தொடர்பு களை பேணி வருகின்றனர்.

குறிப்பாக கஜேந்திர குமார் அணியினர் புலம் பெயர் அமைப்புக்களுடன் கூடுதல் நெருக்கத்தை கொண்டிருக்கின்றனர். ஒப்பீட்டளவில் கூட்டமைப்பை விடவும் கவர்ச்சிகரமான அரசியல் முழக்கத்தை கொண்டிருப்பதும், புலிகளை எட்டிப்பிடித்துவிடும் தூரத்தில் உள்ளவர்களாக தங்களை காண்பித்துவருவதுமே, மேற்படி கூடுதல் நெருக்கத் திற்கு காரணமாகும்.

தற்போது நடைமுறைக்கு வந்திருக்கும் தடையின் மூலம் கூட்டமைப்பின் மீதும், கஜேந்திரகுமார் அணியினர் மீதும், அரசாங்கம் சில கட்டுப்பாடுகளை விதிக்க முடியும்.

கூட்டமைப்பை பொறுத்த வரையில், அதனை வழி நடத்திச் செல்லும் இரா. சம்பந்தன் புலிகளின் ஆதர வாளராக இல்லாது விட்டா லும் கூட, கூட்டமைப்பில் உள்ள ஒரு சிலர் தங்களை புலிமுக அரசியலுக்குரியவர் களாகவே காண்பித்து வருகின்றனர். அவ்வாறான வர்கள் மீது இத்தடை நிச்சயம் பாயும். மேலும் கூட்டமைப்பின் தலைவர்கள் வெளிநாடுகளுக்குச் செல்லும் போது, குறித்த அமைப்புக்க ளுடன் தொடர்புகளை பேணுகின்றனர்.

இறுதியான ஜெனிவா நிகழ்வின் போதும், சுமந்திரன் கனடிய தமிழ் காங்கிரசை சேர்ந்த ஹரி சங்கரி மற்றும் உலகத் தமிழர் பேரவையைச் சேர்ந்த சுரேன் சுரேந்திரன் ஆகியோருடன் இணைந்தே, இலங்கையின் மீதான அமெ ரிக்க பிரேரணைக்கு ஆதரவு திரட்டும் பரப்புரைகளில் ஈடுபட்டிருந்தார். அதேவேளை தேர்தல்களின் போது, சில புலம்பெயர் அமைப்புக்கள் கூட்டமைப்பிற்கும், கஜேந்திர குமார் பொன்னம்பலம் தரப்பினருக்கும் நிதி சேகரிப்பில் ஈடுபட்டிருந்தனர்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலின் போதும், கனடிய தமிழ் காங்கிரஸ் பெருந் தொகையான நிதியை கூட்ட மைப்பிற்கு வழங்கியிருந்தது. இதே போன்று வடக்கு மாகாணசபை தேர்தலின் போதும் கூட்டமைப்பின் தலைவர்கள் புலம்பெயர் நாடுகளில் நேரடியாகவே நிதி சேகரிப்பில் ஈடுபட்டிருந்தனர்.

ஆனால் தற்போதைய தடை, இவ்வாறான நடவடிக் கைகளுக்கு முற்றுப் புள்ளி வைத்திருக்கிறது எனலாம். இத் தடையை மீறி கூட்ட மைப்போ அல்லது கஜேந்திர குமார் அணியினரோ, புலம் பெயர் அமைப்புக்களுடன் தொடர்புகளை பேணுவோர் படுவார்களாயின், அவர்கள் மீது அரசாங்கம் சட்ட நடவடிக்கை எடுக்க முடியும்.

மொத்தத்தில் புலம்பெயர் அமைப்புக்கள் மீதான தடையானது, வெளிநாடுக-ளிலும், இலங்கைக்குள்ளும் சில தாக்கங்களை ஏற்படுத்த வல்லது என்பதை மறுப்பதற்கில்லை. ஆனால் தமிழ் அரசியல் தரப்பினர் தங்களுக்குள் கேட்டுக்கொள்ள வேண்டிய கேள்வி, இதிலிருந்து நாங்கள் எதை கற்றுக்கொள் ளப் போகின்றோம். தொடர்ந் தும் புலிமுக அரசியலை காவிக் கொண்டிருப்பதையா அல்லது அதிலிருந்து விடு பட்டு முற்றிலும் புதியதொரு உபாயத்தை கைக்கொள் வதையா?

- யதீந்திரா கட்டுரையிலிருந்து.

அறிவியலின் எல்லை

- வ.மி.கோபு -

அறிவியலா? விஞ்ஞானமா? "சயன்ஸ்" என்ற ஆங்கில சொல்லுக்குத் தமிழில் எது சரியான சொல்? "சயன்ஸ்" என்பதே சமீப கால ஆங்கிலச் சொல். வில்லியம் வெவல்லின் அறிமுகத்தால் பரவலடைந்த சொல் - அதற்கு முன் "இயற்கை தத்துவம்", (Natural Philosophy) என்றே அதே ஆங்கிலேயர் அழைத்தனர்.

"விஞ்ஞானத்தின் எல்லை" (The Limits of Science) என்ற நூலில், பீட்டர் மெடவார், சயன்ஸ் எனும் சொல்லின் பல்வேறு எழுத்துவடிவங் களை (spelling) பட்டியலிடுகிறார். தமிழில் இந்த இன்னல் இல்லாததால் விட்டுவிடுவோம்.

அறிவியல் என்றால் அறிவா? ஞானமா? வெறும் ஞானம் மட்டும் அல்ல, முயற்சி திருவினையாக்கி, சீரமைத்த ஞானமே விஞ்ஞானம் என்கிறார், மெடவார். அவர் மேலும் சொல்வது: விஞ்ஞானம் "இண்டக்டிவ்" inductive மட்டுமல்ல "டிடக்டிவ்" deductive ஆகவும் உள்ளது. சில நேரம் தற்செயலாகவும், சந்தர்ப்பங்க ளினாலும், விஞ்ஞானம் வளர்கிறது. கற்பனையும் ஆழ்ந்தும் அகன்றும் தேடலும் தேவை.

இடைசெருகல் : இண்டக்டிவ், டிடக்டிவ் போன்ற சொற்கள் தமிழி லும் தமிழர் சிந்தனையிலும் இல்லை. தமிழுலகின் விஞ்ஞானிகள் சிவி ராமன், சந்திரசேகர் போன்ற மேதை களாயினும், சுஜாதா போன்ற ஆர் வலர்களாயினும், தமிழில் அறிவியல் சிந்தனையை வளர்க்க முற்படவில்லை. ஆங்கில கடலெங்கே? தமிழ் குட்டை எங்கே? இலக்கிய திறமையுள் ளோருக்கு விஞ்ஞான ஆர்வமோ பற்றோ இல்லை, விஞ்ஞானப் பற்றுள்ளோருக்கு இலக்கிய ஆர்வமும் திறமையும் இல்லை.

தமிழில் எழுதுபவர்க ளுக்கு அறிவியக்கத்தை செய்ய ஆர்வமோ திறமையோ இல்லை. விஞ்ஞானம் என்பது வெள்ளையர் செய்யும் வித்தை, அதை நாம் ஆங்கிலத்தில் அறிந்து கொண்டு தமிழில் தனித் தனியாய் மொழிபெயர்ப் போம் என்ற சிந்தனை ஒரு சிலரிடம் இருந்தாலும், விஞ்ஞான சிந்தை என்ன, செயல்பாடு என்ன என்பதைப் புரிந்துகொள்ளாமல், அதை தமிழில் எழுதி மட்டும் அழகு பார்க்கும் நிலையே நிதர்சனம்.

மரமே மரமே கனி போடு என்று அமெரிக்காவையும் ஐரோப்பாவையும் அண்ணாந்து பார்க்கும் நிலையிலேயே தமிழுலகின் விஞ்ஞானம் இன்றும் திகழ்கிறது. போதாக்குறைக்கு, வேதமும் வள்ளுவனும் மற்ற புலவனும் புண்ணாக்கும் இழுத்துவந்து அவர் சொல்வதல்லவா அறிவியல் என்று தன்முதுகைத் தட்டிக்கொள்ளும் அனுகூல சத்துருக்களின் முயல் கர்ஜனை வேறு. இந்த வம்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ்?


திணையின் கைதியாய் திகைக்கிறது தமிழ்.

மீண்டும் மெடவாரின் நூலுக்கு வருவோம். 1. புரிய இயலாமை 2. தீர்க்கும் திறன். இவ்விரண்டும் இன்றைய அறிவியலின் முக்கிய அங்கங்கள் என்மனார் மெடவார்.

1. புரிய இயலாமை பல விஞ்ஞான கருத்துக்களை சட்டென்று புரிந்துகொள்ளலாம், ஆனால் முறை களை புரிதல் அரிது. பூமியின் எடை என்றால் அதன் பொருள் புரிகிறது. ஆனால் அதை அளக்கும் முறையை புரிதல் அரிது.

2. தீர்க்கும் திறன் "இந்த காரியம் இப்படிச் செய்யலாம் என்னும் கலையே அரசியல்" என்றார் பிஸ்மார்க். "இந்தப் பிரச்சினையை இப்படி தீர்க்கலாம் என்பது அறிவியல் கலை" என்கிறார் மெடவார். உதாரணமாக கண் தானம், கிட்னி தானம் போன்ற மருத்துவத்தை முன்வைக்கிறார். அதன் சிக்கல்கள் என்ன, அவற்றை முடிச்சவிழ்க்க என்ன முறைகள் என்று ஆய்ந்து, அன்றாட மருத்துவ முறைகளை உருவாக்கியது அறிவியல்.

அறிவியலை எழுத அடிப்படை முறை, அழகு நடை, ஆர்வம், கலைச்சொல் புழக்கம் இவை தமிழில் வேண்டும். இக்கட்டுரை ஒரு சுமாரான அறிவியல் கட்டுரை தான். ஆனால் மெடவார் சொல்லும் கருத்துக்கள் மிக முக்கியமானவை. மக்களுக்கு அறிவியலை கொண்டு செல்வதிலும், அதிலுள்ள தடைகளையும், ஒருவிதம் புரிந்துகொள்ள மெடவாரின் நூல் எனக்கு உதவியது. நாமே அறிவியலைப் புரிந்துகொள்ளவும், ஒரு விஞ்ஞானி விஞ்ஞானத்தை பற்றி என்ன நினைக்கிறார் என்பதாலும் இதை எழுத நேர்ந்தது.



சினிமா சினிமா



● ரஜினிகாந்த் அடுத்து கே.எஸ்.ரவிக்குமார் எழுதி, இயக்கும் படத்தில் நடிக்கிறார். இரட்டை வேடங்கள். தந்தை பாத்திரத்துக்கு ஜோடியாக சோனாக்ஷி சின்ஹா நடிக்கிறார். மகன் ரஜினியின் வேடத்துக்கு ஜோடியாக அனுஷ்கா நடிக்கிறார். படத்துக்கு "லிங்கா" என்று பெயரிடப்பட்டுள்ளது.

◗ சிம்புவுடனான பிரச்சினைக்குப் பிறகு, வாலு படப்பிடிப்பில் ஹன்சிகா கலந்து கொள்ள மறுப்பதால், அவர் மீது புகார் அளிக்கப்பட்டுள்ளது. அதைப்பற்றிக் கவலைப்படாத ஹன்சிகா தன் ட்விட்டரில், தான் ஜோடி சேர்ந்த நடிகர்களிலே, தெலுங்கு நடிகர் ரவிதேஜா ஒரு "ஜென்டில்மேன்" என்று கூறியுள்ளார்.

◗ ஆர்யா மற்றும் தன் தம்பி கிருஷ்ணாவை இணைத்து, யாட்சன் என்றொரு படத்தை இயக்குகிறார் விஷ்ணுவர்தன். எழுத்தாளர்கள் சுபாவின், யாட்சன் என்ற நாவலை, மையப்படுத்தி உருவாகும் இப்படத்தில், நான் கடவுள் படத்தில் நடித்தது போன்று, ஒரு மாறுபட்ட கெட்டப்பில் நடிக்கிறார் ஆர்யா.

◗ ஜில்லா படத்திற்குப் பின், தமிழ் சினிமாவிலும், கூடுதல் கவனம் செலுத்தும் முடிவில் இருக்கிறார் மோகன்லால். தன் உடல் எடை விஷயத்தில் கவனம் செலுத்தாமல் இருந்து வந்த அவர், இப்போது தமிழ் நடிகர்கள் உடம்பை சீராக பராமரித்து வைத்திருப்பதைப் பார்த்து, தானும், குறைத்து வருகிறார். இது குறித்து, உடம்பை கட்டுக்கோப்பாக வைத்திருக்கும் கமலிடம் ஆலோசனை பெற்றுள்ளார் மோகன்லால்.

◗ மெல்லிசை என்ற படத்தை, தானே தயாரித்து, நடிக்கிறார் விஜய் சேதுபதி. இந்தப் படத்தின், கதை விவாதம் நடைபெற்றபோது, தன் சார்பில், பல வசனங்களை ஆர்வத்துடன் இணைத்தார் விஜய் சேதுபதி. அதைப் பார்த்த பட இயக்குநர், வசனம் எழுதும் பொறுப்பை, இப்போது விஜய் சேதுபதியிடமே கொடுத்து விட்டார்.















◗ நடிகர் கார்த்திக்கின் மகன் கவுதமுடன் நடித்துள்ள லட்சுமிமேனன், ப்ரியா ஆனந்த், ராகுல் ப்ரீத் சிங் ஆகிய மூன்று நடிகைகளுமே, அவருக்கு நெருக்கமான தோழிகளாகி விட்டனராம்.

◗ கத்தி, அஞ்சான் ஆகிய படங்களில் விஜய், சூர்யாவுடன் ஜோடி சேர்ந்து அதிர்ஷ்ட நடிகையாகியுள்ள சமந்தா, அடுத்து விக்ரம் படத்திலும் நாயகி ஆகிறார். விஜய் மில்டன் இயக்கும் படம் அது.

◗ தப்பாட்டம், ஒயிலாட்டம், கரகாட்டம் என நாட்டுப்புறக் கலைகளை நம்பி பிழைக்கும் கலைஞர்களின் வாழ்க்கையை மையப்படுத்தி உருவாகும் படம் "அதிரடி". கதை, திரைக்கதை, வசனம், இசை, தயாரிப்பு, நடிப்பு என பல்வேறு பொறுப்புகளை ஏற்றிருக்கும் மன்சூர் அலிகான் படத்துக்கான 11 பாடல்களையும் எழுதியிருக்கிறார்.

◗ பட வாய்ப்புகள் குறைந்து விட்டதால், வீடே கதியென்று கிடக்கும் ப்ரியாமணி, உருண்டு திரண்டு கொழுத்துவிட்டார். உருவத்தைப் பார்க்கும் தயாரிப்பாளர்கள், அம்மா பாத்திரத்தில் நடிப்பதற்கே கேட்டுவருகின்றனராம். வெறுத்துப்போன ப்ரியாமணி, தன் அண்ணனுக்கு ஆண் குழந்தை பிறந்திருப்பதால், எந்நேரமும் அதை கொஞ்சிபடி வீட்டிலேயே பொழுதை கழித்து வருகிறார்.

◗ மிக வயது மூத்த நடிகருடன் ஜோடியாக நடிக்க முடியாது என்று மறுத்திருக்கிறார் ஸ்ரேயா. தமிழில் "பருவராகம்", "பொய் முகங்கள்" உள்ளிட்ட படங்களில் நடித்திருப்பவர் ரவிச்சந்திரன். கன்னடத்தில் முன்னணி முகங்களில் ஒருவர். பிரபல தயாரிப்பாளரும் கூட. ஏற்கெனவே ஜுகிசாவ்லா, குஷ்பூ, ஷில்பா ஷெட்டி ஆகிய முன்னணி ஹீரோயின்களுடன் ஜோடியாக நடித்திருக்கிறார். கன்னடத்தில் தொடர்ந்து கதாநாயகனாக நடித்து வருகிறார். இவருடன் கதாநாயகியாக நடிக்க கேட்கப்பட்ட வாய்ப்பையே மறுத்திருக்கிறார் ஸ்ரேயா.


◗ "வைகாசி பொறந்தாச்சு", "வைதேகி வந்தாச்சு", "கிழக்கே வரும் பாட்டு", "அக்கரை சீமையிலே" படங்களின் இயக்குநர் ராதாபாரதி நீண்ட இடை வெளிக்குப் பின் எழுதி, இயக்கும் படம் "நண்பர்கள் நற்பணி மன்றம்". புதுமுகம் ஜெய்நாத், அக்ஷயா ஆகியோர் நடிக்கின்றனர்.

◗ "பொன்மனம்", "கார்மேகம்", விஜய் நடிப்பில் "சுறா" உள்ளிட்ட படங்களை இயக்கியதோடு கவுண்டமணி - செந்தில், வடிவேலு போன்றவர்க ளுக்கு பல படங்களில் காமெடி காட்சிகள் எழுதி கவனம் ஈர்த்தவர் எஸ்.பி.ராஜ்குமார். நீண்ட இடைவெளிக்குப் பின் அவர் இயக்கும் படம் "பாக்கணும் போல இருக்கு".

கூட்டுத் தலைமைகளை கணக்கெடுக்காமல் ஓதுக்கப்படுவதாக கூட்டமைப்புக்குள் போர்க்கொடி!

- எஸ். சுரேஷ் -

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்குள் முன்னெப் போதும் இல்லாதவாறு பாரிய உட்கட்சி மோதல் கள் இடம்பெறத் தொடங்கியுள்ளது. ஐந்து கூட்டுக் கட்சிகளுக்குள் கட்சிகளுக்கிடையிலான பூசலாக வும், அது தவிர ஐந்து கட்சிகளுக்குள்ளும் தனித்தனியாக உட்கட்சிப் பூசலாகவும் முன்னெப்போதும் இல்லாதவாறு மோதல்கள் இடம்பெற்று வருவதை அவதானிக்க முடிகிறது.



தமிழரசுக் கட்சிக்குள் முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கும் கட்சியின் முக்கியஸ்தர்களுக் கிடையேயும் நேரடியாகவும், மறைமுகப் பனிப் போராகவும் மோதல்கள் இடம்பெற்றுவரும் அதேவேளை அக்கட்சியானது கூட்டமைப்பிலுள்ள ஏனைய நான்கு கட்சிகளையும் ஒதுக்கி வைத்து விட்டுச் செயற்பட முனைந்து வருவதால் கூட்டுக் கட்சிகளின் தலைவர்கள் கடும் அதிருப்தியில் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஐந்து கூட்டுக் கட்சிகளுக்கும் சம அந்தஸ்து, சம பலாபலன் என உடன்பட்டிருப்பினும் அது பின்பற்றப்படுவதில்லை எனக் குற்றம் சாட்டப்பட்டுள்ளதுடன் கூட்டமைப்பை பதிவு செய்வதிலும் போலிக் காரணங்களைக் கூறி இழுத்தடிப்பு நிலை காணப்படுவதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

கூட்டுக் கட்சியிலுள்ள வி. ஆனந்தசங்கரி தலைமையிலான தமிழர் விடுதலைக் கூட்டணியையும், த. சித்தார்த்தன் தலைமையி லான புளொட் அமைப்பையும் தற்போது பெயரளவில் மட்டுமே பயன்படுத்திவரும் தமிழ்க் கூட்டமைப்பு முதலில் தமிழர் விடுத லைக் கூட்டணியை கூட்டமைப்பிலிருந்து முற்றாக நீக்கிவிடுவது குறித்து ஆலோசனை நடத்தி வருகிறது.

அதே போன்று வடமாகாண சபை உறுப்பினரான அனந்தி, தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தர்களான முதலமைச்சர் விக்னேஸ்வரன் மற்றும் சுமந்திரன் ஆகியோரு டன் மட்டுமல்லாது சுரேஷ் பிரேமச்சந்திரன் போன்ற ஆரம்ப கால கூட்டமைப்புத் தலைவர்களுடனும் மரியாதையின்றி நடந்து கொள்வதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. திருகோணமலையில் நடைபெற்ற தமிழரசுக்கட்சிக் கூட்டத்தில் வாக்குவாதப்பட்ட நிலையில் அனந்தி வெளிநடப்புச் செய்திருந்தார்.

இதேவேளை வெளிநாட்டுப் பயணங்களின் போது தான் திட்டமிட்டுப் புறக்கணிக்கப்படுவதாக சித்தார்த்தன் குற்றம் சாட்டியுள்ளதாகத் தெரியவருகின்றது. கூட்டுக் கட்சியில்லாத சிலர் உள்வாங்கப்பட்டு அழைத்துச் செல்லப்படுவதாகவும் கேட்டால், தொழில்நுட்ப உதவியாளர் எனத் தெரிவிக்கப்படுவதாகவும் சித்தார்த்தன் கவலை வெளியிட்டிருந்தார்.

இனப் பிரச்சினையைத் தீர்க்கவல்லாது, கூட்டமைப்புக்குள் மீண்டும் கிளம்பியிருக்கும் இந்த உள்பிரச்சினைகளைத் தீர்க்கவே இரண்டு குழுக்களும் அமைக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

பல் தேய்க்க பலன்!

நமக்குத் தெரிந்த ஆலங்குச்சி மற்றும் வேலங்குச்சி மட்டுமல்லாமல்... பல்வேறு மூலிகைக் குச்சிகளைக் கொண்டும் பல் துலக்கலாம். எந்தெந்தக் குச்சிகளைக் கொண்டு பல்துலக்கினால் என்னென்ன நன்மைகள் விளையும்? என்றெல்லாம் எழுதிவைத்திருக்கிறார்கள்.

எருக்கு, நாயுருவி, கருங்காலி, புங்கு, சம்பகம், ஆலங்குச்சி, மருது, புரசு, இத்தி, மல்லி, நரிமா, நாவல், மா, அசோகம், அத்தி, வேம்பு, அரசு,கருவேல், ஸரள தேவதாரு, குங்கிலியமரம், மாதுளை, அடைப்பை, அரளி, வாகை, அழிஞ்சில், வேங்கை, இலுப்பை, மூவிலை, இலந்தை, ஆடாதொடை இவற்றைக் கொண்டு பல் துலக்கி ஈறுகளையும், பற்களையும் பாதுகாக்கலாம்.

எருக்கு - பல்வலி அகற்றும்.
நாயுருவி - பற்களை நன்கு வளரச் செய்யும்.
கருங்காலி - பல் வியாதிகளை அகற்றும்.
புங்கு, சம்பகம் - வாய் நாற்றம் அகற்றும்.
ஆலங்குச்சி - வாய்ப்புண்களை அகற்றி பற்களைக் கெட்டிப்படுத்தும்.
மருது - பற்களைச் சுத்தம் செய்யும்.
புரசு - வாயைச் சுத்தம் செய்யும்.
வேம்பு - ருசியளிக்கும்.
அரசு - பல் கூச்சம் நீக்கும்.
கருவேல் - பற்களை பளிச்சென்று ஆக்கும்.
ஸரள தேவதாரு - பற்களைக் கெட்டிப்படுத்தும்.



குடிநீர் பிரச்சினைக்கு தீர்வு

பூநகரியில் அதிகாரிகளுடன் ஆராய்வு



(பூநகரி)

பூநகரி பிரதேசத்தின் நிலத்தடி நீரை பாதுகாக்கும் வகையிலும் பிரதேசங்கள் உவராகி வருகின்றமையினை தடுத்து, குடிநீர்ப் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வினைக் காணும் நோக்கிலும் குளத்தினை புனரமைப்பது தொடர்பிலான பணிகள் பல கட்டங்களாக இடம்பெற்று வருகின்ற நிலையில் நேற்றுமுன்தினம் ஈ.பி.டி.பி.யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் தலைமையில் மேலுமொரு கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது.

பூநகரி குளத்தினை விரைவாக புனரமைக்கும் வகையில் குறிப்பிட்ட பிரதேசங்களை நில அளவை செய்வது தொடர்பில் இன்றைய கூட்டத்தில் விசேடமாக ஆராயப்பட்டது.

வருடந்தோறும் பூநகரி பிரதேசத்தில் மக்கள் குடிநீரை பெறுவதில் பெரும் சிரமங்களை சந்தித்து வருகின்றனர். அத்தோடு பூநகரியின் பல பிரதேசங்களும் உவராகி வருகின்றமை இதன் மூலம் தடுக்கப்படுவதாலும் இந்தக் குளம் புனரமைப்பு முக்கியத்துமிக்கதாக காணப்படுகிறது. எனவே தான் இந்தக் குளத்தை விரைவாக புனரமைக்கும் வகையிலான அனைத்து நடவடிக்கைகளையும் விரைந்து மேற்கொள்ளும் வகையில் நாடாளுமன்ற உறுப்பினர் அடிக்கடி உரிய அதிகாரிகளையும் விவசாய அமைப்புகளையும் சந்தித்து கலந்துரையாடி நடவடிக்கைகளை எடுத்து வருகின்றார்.

இக் கலந்துரையாடலிலும் குறித்த பிரதேசங்களை நில அளவை செய்து அடுத்த கட்டப்பணிகளை ஒரு சில மாதங்களுக்கு ஆரம்பிப்பது பற்றி கலந்துரையாடப்பட்டது.

சமூக பார்வைகளும் பதிவுகளும்

இலக்கியநூல் வெளியீடு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமூகவியற்றுறை விரிவுரையாளர் இ.இராஜேஸ்கண்ணனின்இலக்கியத்தில் சமூகப் பார்வைகளும் பதிவுகளும் நூல் வெளியீடு வதிரி பூவற்கரை பிள்ளையார் ஆலய இரவீந்திர சர்மா மண்டபத்தில் வதிரி தமிழ் மன்றத் தலைவர் தி.வரதராசன் தலைமையில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

இந்நிகழ்விற்கு முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தரும் சமூகவியற்றுறைத் தலைவருமாகிய பேராசிரியர் என்.சண்முகலிங்கன் கலந்து கொண்டார். அறிமுக உரையினை யாழ்ப்பாணப்பல்கலைக்கழக சட்டத்துறைத்தலைவர் கலாநிதி த.கலாமணி வழங்கினார் நூல் மதிப்பீட்டுரையினை யாழ்ப்பாணப்பல்கலைக்கழக தமிழ்த்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் ஈ.குமரன் வழங்கினார். (63)

வலிகாமம் வலயமட்ட தமிழ்த்தின போட்டிமுடிவுகள்

(யாழ்ப்பாணம்)

தமிழ் மொழித்தினத்தை முன்னிட்டு வலிகாமம் கல்வி வலயப்பாடசாலை மாணவர்களிடையே நடாத்தப்பட்ட வலயமட்ட எழுத்தாக்கப் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

போட்டி முடிவுகள் வருமாறு,

பிரிவு I - ஆக்கத்திறன் போட்டி,

1 ஆம் இடம் ப.பிரவீனன் (யாழ்ப்பாணக் கல்லூரி), 2 ஆம் இடம் ச.வைஷ்ணவி (மானிப்பாய் மகளிர் கல்லூரி), 3 ஆம் இடம் ச.ஆரூரன் (ஈவினை அ.த.க.பாடசாலை),

பிரிவு II - கட்டுரைப் போட்டி,

1 ஆம் இடம் கி.அக்ஷனா (மூளாய் சைவப் பிரகாச வித்தியாலயம்), 2 ஆம் இடம் இ.பவுலினி (உடுவில் மகளிர் கல்லூரி), 3 ஆம் இடம் கா.நந்தாயினி (மானிப்பாய் மகளிர் கல்லூரி),

பிரிவு - III கட்டுரைப் போட்டி,

1 ஆம் இடம் யோ.ரூபினி (மானிப்பாய் சென்.ஆன்ஸ் வித்தியாசாலை), 2 ஆம் இடம் க.கேணுகா (அராலி சரஸ்வதி மகாவித்தியாலயம்), 3 ஆம் இடம் தி.சரண்யா (வட்டு மத்திய கல்லூரி),

பிரிவு IV இலக்கிய கட்டுரை நயத்தல் போட்டி

1 ஆம் இடம் இ.இனோஷா (அளவெட்டி அருணோதயா கல்லூரி), 2 ஆம் இடம் த.கேசிதா (உடுவில் மகளிர் கல்லூரி), 3 ஆம் இடம் வெ.தீர்த்தனா (மூளாய் வைசப்பிரகாச வித்தியாலயம்).

(தொடரும்)

தேர்த்திருவிழா

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு கிழக்கு ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலய வருடாந்த தேர்த்திருவிழா எதிர்வரும் 13 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் தீர்த்தத்திருவிழா 14 ஆம் திகதி. இடம்பெறவுள்ளதுடன் இவ்வாலய மகோற்சவம் கடந்த புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது குறிப்பிடத்தக்கது.

முரசின் இன்றைய பலன்

[07.05.2014 புதன்கிழமை]



ஜய வருஷம் சித்திரை மாதம் 07 ஆம் திகதி.
அட்டமி / மரணயோகம்.
ஆயிலிய நட்சத்திரம். மு.இ. 11.27 வரை. பின் மகம்.
இராகு காலம 11.55 - 01.25 வரை. சுபநேரம 04.25 - 05.55 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

மேடம் — தாமதித்த சுபகாரியங்கள் வெற்றிப்பாதைக்கு வந்து ஆச்சரியப்பட வைக்கும், அலைச்சலை முன்னிட்டு தேக நலம் பாதிக்கப்பட்டு நோயினால் வருத்தமடைதல்.

ரிஷபம் — சகுனத்தில் நம்பிக்கை வைத்துச்செயற்பட்டதின் மூலம் பிரதி கூலம் ஏற்படாமை, நல்லதொரு சந்தர்ப்பம் தேடி வரும் பொழுது பயன்படுத்திக் கொள்வது எதிர்காலம் சிறக்க வைக்கம்.

மிதுனம் — இரண்டடி ஏற மூன்றடி சறுக்கும் நிலைக்கு உள்ளாகுவீர்கள், காரியத்தை தாமதப்படுத்துவதினால் முரண்பாடு ஏற்படும் நிலை உருவாகும்.

கடகம் — காரிய சித்திபெற தானதர்மங்களில் மன நாட்டம் செல்லும், கடன் தொல்லையால் பூர்விகச் சொத்தினை விற்க முற்படும் நிலை ஏற்படல்.

சிம்மம் — பிடிவாதத்தையும் வீண் விவாதங்களையும் தவிர்த்துக் கொள்ளுங்கள், சுபகாரிய நிகழ்விற்காக அடகு வைக்கும் நிர்ப்பந்தம் ஏற்படும்.

கன்னி — கணவர் – மனைவி உறவுகள் மேம்படைந்து முரண்பாடு விலகி விடும், நீதிமன்ற முடிவு சாதகமான பதிலைக்கொண்டு வருதலால் மகிழ்வு ஏற்படும்.

துலாம் — கோபம், அவசரம், உணர்ச்சி வசப்படுவதாலும் அபாயங்கள் ஏற்படலாம், விவாகம் சம்பந்தமான நற் செய்திகள் வந்தடையும்.

விருச்சிகம் — கேட்ட இடத்தில் தாமதம் இருப்பினும் பணம் வந்து சேரும், ஊழியர்கள் மேலதிகாரிகளுடன் சுமுகமான உறவைப்பேணுதல் அவசியம்.

தனுசு — உடல் உபாதை தொழில், இடமாற்றம் எதிர்பாராது ஏற்படும், சுவீப் அதிர்ஷ்டமுண்டு, குடும்ப அங்கத்தவர் ஒருவர் தீடீர் நோய் நிலைக்கு உள்ளாவார்.

மகரம் — பொறுமை, நம்பிக்கை, சகிப்புத்தன்மையினால் இடர்பாடுகள் அகன்று விடல், மனை, பூமி, வாகன யோகங்கிடைக்கும்.

கும்பம் — தொழிலில் வெறுப்பும் பதகளிப்பும் ஏற்பட்டு சோர்வு தக்க வைக்கும், தள்ளிப்போன சுபகாரியம் எதிர்பாராது ஏற்படும்.

மீனம் — இறைநம்பிக்கையினால் தடைதாமதத்தின் பின்னர் வெற்றி வந்தடையும், வெளியூர் பயணம் அஷ்டமத்துச் சனியின் பயப்பீதியினால் கைவிட்டுவிடல்.

வாழ்வுக்கு வழிகாட்டும் சகுனஜோதிடம்

பறவைகளின் ஒலிகள் ரீதியான முகூர்த்த பலாபலன்கள்

முதல் முகூர்த்தம் முற்பகல் 6 - 7.30 வரை இலாபம், 2 ஆவது 7.35 - 9.00 வரை பொருள் நட்டம், 3 ஆவது 9.05 - 10.30 வரை பொருள் வரவு, 4 ஆவது 10.30 - 12.00 வரை தனலாபம், 5 அவது 12.05 - 01.30 வரை பொருள் விருத்தி, 6 ஆவது 1.35 - 3.00 மணிவரை மன்க்கிலேசம், 7 ஆவது மாலை 03.05 - 04.30 கெட்ட தகவல் கேட்டல், 8 ஆவது பி.பகல் 4.35 - 6.00 வரை கவலை உண்டாதல்.

காக்கையானது இறந்து கிடக்க ஏனையவை அலறினால் தீய சகுனமாகக் கொள்ள வேண்டும். ஆந்தை சகுனத்தையும் இருவகையில் நோக்குதல் வேண்டும். கூவுதல், அலறுதல். இவற்றின் எண்ணிக்கையைப் பொறுத்தும் பலன் காணவேண்டும்.

இரண்டு முறை அலறினால் எடுத்த காரியம் இனிது முடியும். 3 முறை விரும்பியது கிட்டும், 5 முறை பயணங்கள் பயனுள்ளதாக அமையும். 9 அல்லது 10 முறை அலறினால் காரியங்களில் வெற்றி கிட்டும். ஒருமுறை அலறின் தீய செய்திகள் கேட்டல் 2 முறை எண்ணியது கிட்டுதல். 3 முறை கன்னியரால் சுகமுண்டு. 4 முறை சச்சரவுண்டாகும். 5 முறை பயணங்களில் வெற்றியும், விருந்தினர் வருகையும் 6 முறை சுபகாரியமேற்படல், 7 முறை கெடுதல் சம்பவிக்கும், 8 முறை அவலச்செய்திகள் வந்தடைதல், 9 முறை நன்மைகள் உண்டாகும், 10 முறை நற்காரியங்கள் நடைபெறும்.


பயணவேலைகளில் கிளி எதிர்ப்பட்டால் வெற்றிகிட்டும் நல்லவார்த்தைகளை வளர்ப்புக் கிளி பேசினால் காரிய சித்தி உண்டாகும். கூண்டுக் கிளியைக் கண்டால் செயல்களில் தடைகள் வந்தடையும். கிளியைப் பூனைபிடித்துச் செல்லின் பயணத்தால் கெடுபலன்களும் பொருள் இழப்பும் ஏற்படும். காலை வேளையில் சேவல் கூவுகையில் மேற்கொள்ளும் பயணங்கள் காரிய சித்தியை ஏற்படுத்தும். கோழியும் சேவலும் சேர்ந்திருப்பதையும் புணர்ச்சியில் ஈடுபட்டிருப்பினும் இன்பசுகங்கள் கிட்டும். சண்டையிட்டால் சச்சரவுகள் ஏற்படல், மயில் அகவினாலும் தோகை விரித்து ஆடுவதைக் கண்டாலும் நன்மைகள் ஏற்படும். குயில் கூவினாலும் ஜோடிக்குயில்களைக் கண்டாலும் பயணத்தின் நோக்கம் நிறைவேறும்.

அவலக்குரலில் கூவிக்கொண்டிருப்பின் துன்பச்செயல் தக்கவைக்கும். வான்கோழியைக் காண்பதும் தோகைவிரித்தாடினாலும் ஏமாற்றம் உண்டாகும். புறாவினைக் கண்டால் பயணத்தின் நோக்கம் நிறைவேறல். வெளவால்கள் எதிர்ப்பட்டால் பயணம் படுதோல்வியில் முடிவடையும். கருங்குருவி வலமிருந்து இடமாகவின் இலாபமுண்டு. இடமிருந்து வலப்புறமெனின் தொடுத்தகாரியம் முற்றப்பெறாது இழுபடும். சகுந்தலைப்பட்சியை கிழக்கில் கண்டால் கெடுதி. மேற்கு - செல்வச் செழிப்பு, வடக்கு மனக்கவலை, தெற்கு தனலாபம், தென்கிழக்கு, காரியக்கேடு, தென்மேற்கு காரிய ஜெயம், வடமேற்கு, தேகநலம் மேம்பாடு வடகிழக்கு, துன்ப அலைதொடரும். (தொடரும்)

ஜோதிர் வித்யா ரத்னா
வி.ஏ.சிவராசா

கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணத்தில் அரிசியின் கட்டுப்பாட்டு விலை மீறப்பட்டுள்ளது

பிரதேச மக்கள் விசனம் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

தற்போது பல பிரதேசங்களிலும் அரிசியின் விலை கட்டுப்பாட்டு விலையை விட அதிகமாகவே விற்பனை செய்யப்பட்டு வருவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்

அரசாங்கத்தினால் அரிசி மீதான நிர்ணயவிலை அறிவிக்கப்பட்ட போதிலும் கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசங்களில் உள்ள வியாபாரிகள் அரிசியின் விலையை அதிகமாகவே விற்பனை செய்து வருவதாகவும் அவர்கள் கவலை தெரிவித்தனர்.

ஏனைய மாவட்டங்களில் அரிசியின் விலை அதிகமாக விற்கப்படுவதாக குற்றம் சாட்டப்பட்டு நுகர்வோர் பாதுகாப்பு சபை அதிகாரிகளால் நூற்றுக்கணக்கான வியாபாரிகள் கைது செய்யப்பட்டனர். இதனை அறிந்து அரிசியை கொள்வனவு செய்வதற்காக சென்ற மக்கள் அரிசியை கொள்வனவு செய்வதுடன் விலை மீது ஏமாற்றத்துடனேயே திரும்பிவரும் சூழ் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அதுமட்டுமன்றி கொள்வனவு செய்யச் சென்ற மக்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கும் முகமாக இவ்வாறு அரிசியின் விலை அதிகமாக விற்கப்படுவதற்கு தாம் பொறுப்பில்லை எனவும், இதற்கு கொள்முதல் வியாபாரிகளும், அரிசி ஆலைகளுமே பொறுப்பு எனவும் தெரிவிக்கின்றனர்.

எனவே இவ்வாறான நிலையை மாற்ற நுகர்வோர் கட்டுப்பாட்டுச் சபை அதிகாரிகள் கிளிநொச்சி முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசங்களிலும் தமது பார்வையை செலுத்த வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஆங்கில விவாதப் போட்டியின் இறுதிப் போட்டி நாளை

(யாழ்ப்பாணம்)

வடமாகாண ஆளுநர் செயலகத்தினால் நடாத்தப்பட்டுவந்த ஆங்கில விவாதப் போட்டியின் இறுதிப் போட்டி யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியில் நாளை வியாழக்கிழமை பி.ப.2.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு பிரதமவிருந்தினராக வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறியும் சிறப்பு விருந்தினர்களாக ஜனாதிபதியின் ஆலோசகர் சுனில் பெனாண்டோ, இந்திய மொழிக்கற்கை நெறி பேராசிரியர் பி.மணிற்ற ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

எனவே இந்த நிகழ்வுக்கு வடமாகாணத்தின் சகல வலயக்கல்விப் பணிப்பாளர்களையும், அமைச்சு திணைக்களத்தலைவர்களையும் ஆங்கில உதவி ஆசிரியர்களையும் ஆங்கில உதவிக் கல்விப் பணிப்பாளர்களையும் மற்றும் மாணவர்களையும் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசளிப்பு நடைபெறும்.

மஞ்சல்கடவை போடப்படாமையால் நெருக்கடியில் போக்குவரத்து

(வடமராட்சி)

பொலிகண்டி கிழக்கு ஆலடிச சந்தியில் மஞ்சள் கடவை போடுமாறு சம்பந்தப்பட்டவர்களிடம் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான பருத்தித்துறை - தொண்டைமானாறு கடற்கரை வீதியை இணைக்கும் பொலிகண்டி ஆலடிச்சந்தியை அண்மித்த பகுதியில் அரச திணைக்களங்களான சமூர்த்தி, கிராமசேவகர் அலுவலகம் மற்றும் பஸ்நிலையமும் கடற் தொழிலாளர் கூட்டுறவுச்சங்கம் மீன்சந்தை வாசிகசாலை, பாலர் பாடசாலை, கடைகள் என மக்கள் நடமாட்டம் அதிகரித்த இடமாகக் காணப்படுகின்றது.

இவ்வறிக்கையில் பொதுமக்கள் இலகுவில் தமது சேவைகளை பெறுவதற்காக வருகை தரும் போது குறிப்பாக காலை வேளைகளில் போக்குவரத்து நெருக்கடிகளுடன் சிறுசிறு விபத்துக்களும் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகரித்துக் காணப்படுவதாக சுட்டிக்காட்டப்படுகின்றது.

எனவே போக்குவரத்து நெருக்கடியை தவிர்க்கும் வகையில் வீதிகளில் பாதசாரி கடவை போடப்படவேண்டும். என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.


மேலும் பருத்தித்துறை - தொண்டைமானாறு கடற்கரை வீதியில் மக்கள் நடமாட்டமுள்ள சில முக்கிய இடங்களில் சம்பந்தப் பட்டவர்களின் அனுமதியுடன் அந்தந்த கிராமமட்ட அமைப்புக்களினால் வீதிகளில் வேகக்கட்டுப்பாட்டுத்தடைகள் மற்றும் பாதசாரிக் கடவைகள் போடப்பட்டுள்ளதென்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

(116)



உடுவில் பிரதேச செயலர் பிரிவில் கலை கலாசார அமைச்சினால் நிர்மாணிக்கப்பட்ட கலாசார மண்டபம் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. இதில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலை அலுவல்கள் அமைச்சர் டி.பி.ஏக்கநாயக்க வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி ஆகியோர் இணைந்து திறந்து வைப்பதைக் காணலாம்

ஆயுர் வேதம்



தொடர்ச்சியான தலைவலி நீங்க...!

மனிதர்களுடைய தலைப்பகுதியில் தர்பகம் என்ற ஒரு கபம் இருந்து செயற்படுகிறது. இந்த கபம் தலைப்பகுதியில் உள்ள ஐம்புலன்களான கண், காது, மூக்கு, நாக்கு மற்றும் தோல் பகுதிகளுக்குத் தேவையான அளவு ஊட்டத்தைத் தந்து அதன் மூலம் புலன்களின் செயற்பாடுகளில் தொய்வில்லாமல் பார்த்துக் கொள்கிறது.

இந்த தர்பகம் என்ற கபத்தின் ஊட்டம் கெடாமல் இருக்க உணவில் இனிப்பு, புளிப்பு, உப்புச் சுவைகளின் சீரான சேர்க்கை அவசியம். சிலருக்கு இந்த தர்பகம் எனும் கபம் தன் ஊட்டத்தை இழக்கலாம். அதற்கு முக்கிய காரணமாக அதிகமாகக் கணனியைப் பயன்படுத்துவதால் தர்பகக் கபத்தினுடைய செலவு அதிகரித்து அதனுடைய தேய்மானம் ஏற்படும் பகுதியில் நரம்புகளில் வாயுவினுடைய ஆதிக்கம் அதிகமாகிறது. அந்தத் தேய்மானத்தை ஈடு செய்யும் வகையில் உணவின் வரவும் தகுந்த ஓய்வும் கிடைக்காமல் போகும் நிலையில் நரம்பு மண்டலத்தில் வாயுவினுடைய வறட்சியினால் தலைவலி ஏற்படுகிறது.

இதற்கு,உணவில் இனிப்பான பதார்த்தங்களை அதிகம் சேர்த்துக் கொள்ளவேண்டும். புளிப்பும், உப்பும் மிதமாகச் சேர்க்கலாம். கணனியை அதிகநேரம் பார்த்து வேலை செய்பவர்கள், கண்கள் சோர்வடைந்தவுடன் மேலும் அதற்கு வேலைப் பளுவைத் திணிக்காமல் சிறிது நேரம் ஓய்வு தரும்படி பார்த்துக் கொள்ளவேண்டும்.

தகுந்த ஓய்வு கண்களுக்கு கிடைத்துவிட்டால் கண்களைக் குளிர்ந்த நீரில் ஒரு முறை நனைத்து இதமாகத் துடைத்துவிட்டு அதன் பிறகு மறுபடியும் வேலைகளைத் தொடரலாம். வெயிலில் செல்ல நேரும்போது கண்களுக்குக் குளிர்ச்சியைத் தரும் கண்ணாடியை அணிந்து கொள்க.

குளிர்ச்சி மற்றும் ஊட்டத்தைத் தரும் பழரசங்கள், பாசந்தி, பால்கோவா, கரும்புச்சாறு, நெய், பால், இனிப்பு லஸ்ஸி போன்றவற்றை மாணவர்கள் அதிகம் சாப்பிடவேண்டும். காரணம், இவற்றின் மூலம் மூளைப்பகுதிக்குத் தேவையான அளவு ஊட்டச்சத்தைப் பெறலாம்.

தேங்காய் எண்ணெய்யை வாரம் இருமுறையோ மூன்று முறையோ தலையில் அரை, முக்கால் மணிநேரம் ஊற வைத்து குளிர்ந்த நீரில் காலை வேளைகளில் குளித்துவந்தால் தலையைச் சார்ந்த தர்பகக் கபத்திற்கு அனுகூலமாக இருக்கும்.

தலையில் கனம், நீர்க்கோர்வை, ஜலதோஷம், மூக்கடைப்பு, தும்மல் போன்ற உபாதைகள் ஏதும் இல்லாதிருந்தால் f;\Pugyh101 எனும் நெய்மருந்தை லேசாக உருக்கி மூக்கினுள் ஒவ்வொரு துவாரத்திலும் விட்டு மெதுவாக உறிஞ்சி வருவதன் மூலம் நரம்பு மண்டலத்தில் பரவியுள்ள வாயுவின் வறட்சி நீங்கி தலைவலி உபாதை குணமாகி விடும்.

ஆனால் மேற்குறிப்பிட்ட உபாதைகள் இருக்கும் பட்சத்தில் ராஸ்னாதி சூரணம் எனும் ஆயுர்வேத மருந்தை இஞ்சிச் சாறில் குழைத்து, சிறிது சூடாக்கி நெற்றியில் பற்றுப் போட்டு சுமார் அரை மணி, ஒரு மணி நேரம் வைத்திருந்து அதன் பிறகு கழுவி விடுவதன் மூலமாக நீர்க்கோர்வை உபாதையுடன் கூடிய தலைவலியும் நீங்கிவிடும்.

கண்களில் உள்ள நீர் வற்றாதிருக்க கண்களின் உள்ளே விடும் தர்ப்பணம், ஆஸ்சோதனம், அஞ்ஜனம், புடபாகம் எனப்படும் ஆயுர்வேத சிகிச்சைமுறைகள் ஆயுர்வேத ஆஸ்பத்திரியில் தங்கிச் செய்துகொள்ள வேண்டிய சிறப்பான சிகிச்சைமுறைகளாகும். தசமூலரஸாயனம் எனும் ஆயுர்வேத லேஹ்யமருந்தை 1 - 2 தேக்கரண்டி (5 கிராம் முதல் 10 கிராம் வரை) இரவில் படுக்கும்முன் நக்கிச் சாப்பிட்டு வர தலைவலி நீங்குவதற்கு உபயோகமான ஒரு மருந்தாக அமையும்.

பழ மருத்துவம்

* மாதுளம் பழச்சாற்றுடன் இஞ்சிச் சாறு கலந்து சாப்பிட்டு வர இருமல் குணமாகும்.
* செவ்வாழைப் பழத்தை தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் உடலில் நோய் எதிர்ப்பு ஆற்றல் உருவாகும்.
* திராட்சைப் பழச்சாற்றை மூன்று வேளைகள் அருந்த குடல் புண் குணமாகும்.
* விளாம்பழத்தின் சதையுடன் திப்பிலியையும் மிளகையும் தூள் செய்து சேர்த்துப் பயன்படுத்த பித்த மயக்கம் தொண்டை நோய்கள் குணமாகும்.

(பழங்களின் மருத்துவம் என்ற நூலிலிருந்து)

எண்ணெய் உற்பத்திக் கிராமமாக பிரான்பற்றுக் கிராமம் திகழும்

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவிப்பு



எள்ளுசார்ந்த உற்பத்திகள் கலப்படம் இல்லாத வகையில் பாவனையாளர்களுக்கு பாதகம் ஏற்படாத முறையில் சுத்தமான தாகவும் சுகாதாரமானதாகவும் தரமானதாகவும் செய்யப்பட வேண்டுமென்பதுடன் பிரான் பற்று கிராமத்தை சிறந்த எண் ணெய் உற்பத்திக் கிராமமாக மாற்றியமைப்பதே எமது நோக் கமென அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

பண்டத்தரிப்பு பிரான்பற்று முருகன் ஆலயத்தின் ஆனந்த சுரபி மண்டபத்தில் எள் சார்ந்த தொழிற்துறையாளர்களுடன் கடந்த மூன்றாம் திகதி இடம் பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரி வித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக் கையில்,

நல்லெண்ணெய் மட்டுமல் லாது எள்சார்ந்த அனைத்து உற்பத்திகளுக்கும் பெயர்போன பிரான்பற்று கிராமம் கடந்த யுத்த காலத்தின் போது ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை கார ணமாக பெருமளவானனோர் இத்தொழிற்துறையை கைவிட் டுள்ள நிலையில் ஒருபகுதி யினரே தற்போது முன்னெடுத்து வரும் நிலையில் இத்தொழில் வலுவிழந்து போயுள்ளது.

இந் நிலையில், எனது அமைச்சின் கீழான கைத்தொ ழில் அபிவிருத்திச் சபையூடாக குறித்த தொழிற்துறையை வலுப் படுத்தி அதனூடாக துறைசார்ந் தவர்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் பல் வேறு உதவித்திட்டங்களை வழங் கவுள்ளோம்.

அந்தவகையில், எள்ளை மூலப்பொருளாகக் கொண்ட தொழிற்துறைசார்ந்தோருக்கு தென்பகுதியிலிருந்து மூலப்பொரு ளைப் பெற்றுத் தருவதற்கு நாம் நடவடிக்கை எடுத்துள்ள அதே வேளை, அதனை பாதுகாத்து வளர்த்தெடுக்க வேண்டிய பொறுப்பு உங்களுடையதாக இருக்கின்றது.

அதுமட்டுமன்றி தொழிற் துறை மேம்பாட்டுக்காக வங்கி களின் ஊடாக வட்டியில்லாத சுழற்சி முறை கடன்திட்டங்க ளையும், தொழிற் துறை உப கரணங்களையும் எதிர்காலத்தில் வழங்குவதற்கு நாம் நடவடிக் கைகளை முன்னெடுத்துள்ளோம்

இதனைக் கருத்தில் கொண்டு உணவுசார்ந்த உற்பத்தியாளர் கள் மட்டுமன்றி இத்தொழிற் துறைசார்ந்த அனைவரும் கலப்படம் இல்லாத வகையில் உற்பத்திகளை சுத்தமா னதாக வும் சுகாதாரமானதாகவும் செய் யப்படும் அதேவேளை, பாவனை யாளர்களுக்கு எவ்விதமான பாதகமும் ஏற்படாத வகையிலும் செயற்பட வேண்டும் என்றார்.

இதன்போது வலி.தென் மேற்கு பிரதேச செயலர் முரளிதரன், கைத்தொழில் அபி விருத்தி சபையின் பணிப்பாளர் சிவகெங்காதரன், வலி.தென் மேற்கு பிரதேச சபை செயலா ளர் திருமதி கேதீஸ்வரி, அமைச் சரின் யாழ்.மாவட்ட ஒருங்கி ணைப்பாளர் கே.வி குகேந் திரன், ஈ.பி.டி.பியின் மானிப்பாய் பிரதேச இணைப்பாளர் ஜீவா, ஈ.பி.டி.பியின் வலிகாமம் இணைப் பாளர் சிவகுரு பாலகிருஸ்ணன் (ஜீவன்) ஆகியோர் உடனிருந்தனர்.

வராது சிவப்பு அறிவித்தல் வந்துவிழும் குறுந்தகவல்

(கொழும்பு)

மின்சார கட்டணத்தை மாதாந தம் செலுத்தாத நுகர்வோரின் மின்சார இணைப்பை துண் டிப்பது தொடர்பில் முன்கூட்டியே விடுக்கப்படும் சிவப்பு அறிவித் தலை இனிமேல் விடுக்காமல் இருப்பதற்கு மின்சார சபை யினால் தீர்மானிக்கப்பட்டுள்ள தாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அதற்கு பதிலாக நுகர்வோ ரின் கையடக்க தொலைபே சிக்கு எஸ்.எம்.எஸ் (குறுந்த கவல்) ஊடாக இறுதி அறிவித் தலை விடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் மின்சாரசபை தெரிவித்துள்ளது.

எப்படியாயினும் இது தொடரபில் தொலைபேசி நிறுவ னங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு கொண்டிருப்ப தாகவும் பேச்சுவார்தையின் நிறைவில் எஸ்.எம்.எஸ் முறைமையை மின்சார நுகர் வோருக்கு அறிமுகம்செய்து வைப்பதற்கு சபை ஆலோசித் துள்ளதாக தெரிவிக்கப்படு கின்றது.



இந்த முறைமையின் ஊடாக பெருந்தொகையான நிதியை மீதப்படுத்திகொள்ளலாம் என்றும் சபை அறிவித்துள்ளது.

இலங்கை மிஷன் திருச்சபை முன்பள்ளிக்கு அன்பளிப்பு

கொழும்பு முதுவ்வாலிபர் சங்கத்தினால் கிளிநொச்சி முரசு மோட்டையில் அமைந்துள்ள அமெரிக்கன் இலங்கை மிசன் திருச்சபை முன்பள்ளிக்கு ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான தளபாடங்கள் கடந்த ஞாயிற் றுக்கிழமை வழங்கப்பட்டன.

குறித்த முதுவாலிபர் சங் கத்தின் கொழும்பு கிளையி னால் இந்த முன்பள்ளிக்கான கட்டிட் புனர்நிர்மானப்பணிகள், மலசலகூட வசதிகள், வருடாந் விழாக்கள், சிறார்களுக்கான சத்துணவுகளை வழங்குதல் போன்ற செயற்றிட்டங்களுக் காக நிதியுதவிகள் வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது,

இந்நிகழ்வில் கொழும்பு முது வாலிபர் சங்கத்தின் உறுப்பி னர்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

மண்சரிவு உயிரிழப்புக்கு ஜனாதிபதி இரங்கல்



(கொழும்பு)

ஆப்கானிஸ்தானில் இடம் பெற்ற மண் சரிவு தொடர்பில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச, அந்நாட்டு ஜனாதிபதி ஹமீட் கர் சாய்க்கு இரங்கல் செய்தி அனுப்பி வைத்துள்ளார்.

அண்மையில் ஆப்கானிஸ் தானில் இடம்பெற்ற பாரிய மண் சரிவில் ஆயிரக்கணக்கான உயிர்கள் காவுகொள்ளப்பட் டிருந்தன.

தனிப்பட்ட ரீதியில் தமதும், நாட்டு மக்களினதும், அரசாங்கத தினதும் இரங்கலை இந்தச் சந்தர்ப்பத்தில் வெளியிட்டுக் கொள்வதாக ஜனாதிபதி தெரி வித்துள்ளார்.

இயற்கை அனர்த்தம் கார ணமாக காயமடைந்தவர்களுக்கு விரைவில் சுகமாக பிரார்த்திப் பதாக ஜனாதிபதி குறிப்பிட் டுள்ளார்.

அனர்த்தம் காரணமாக பாதிக் கப்பட்டவர்கள் தைரியத்துடன் மீண்டெழக் கூடிய சக்தியை இறைவன் வழங்க வேண்டு மெனத் தெரிவித்துள்ளார்.

இஸ்லாமிய தீவிரவாதிகளின் மையமாக மாறுகிறது இலங்கை

கூறுகிறார் அமைச்சர் சம்பிக்க



உலக இஸ்லாமிய தீவிர வாதிகளின் மையமாக இலங்கை மாறி வருவதாக அரசின் பங் காளிக் கட்சியான ஜாதிக ஹெல உறுமயவின் பொதுச் செயலா ளரும் அமைச்சருமான சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் அவர் மேலும் தெரிவிக்கையில்,

மலேஷியா இந்தோனேசியா பாகிஸ்தான் மற்றும் காஷ்மீரில் இயங்கி வரும் இஸ்லாமிய தீவிரவாத அமைப்புக்களான அல்கொய்தா லக்சரி தொய்பா தலிபான் காஷ்மீர் உட்பட இஸ் லாமிய தீவிரவாதிகள் இலங் கையை மையமாக பயன்படுத்தி வருகின்றனர்.

அத்தோடு தமிழகத்தில் இயங்கும் இஸ்லாமிய தீவிர வாத அமைப்புக்களுக்கும் இலங் கையிலுள்ள முஸ்லிம் அடிப்ப டைவாத சக்திகளுக்கும் இடையே தொடர்புகள் உள்ளன.

இதன்வெளிப்பாடு தான் அண்மையில் சாஹீர் ஹீசைன் என்ற இலங்கையைச் சேர்ந்த பாகிஸ்தான் தீவிரவாதிகளுடன் தொடர்புடையவர் சென்னையில் கைது செய்யப்பட்ட சம்பவமாகும்

சென்னையில் இடம்பெற்ற குண்டு வெடிப்பிற்கும் இத் தொடர்புகள் சாதகமாக பயன்ப டுத்தப்பட்டிருக்கலாம். இன்று பாகிஸ்தானிலிருந்தும் ஆப்கானிஸ் தானிலிருந்தும் அகதிகளென தம்மை அடையாளப்படுத்திக் கொண்டு முஸ்லிம்களும் கிறிஸ் தவர்களும் இலங்கைக்குள் நுழைந்துள்ளனர். அது மட்டுமல் லாது இன்று மாலைதீவு பிரஜை களும் இங்கு வந்துள்ளனர்.

இதன் பின்னணி என்ன இவ்வாறு அகதிகளாக வருப வர் யாரென்பது தொடர்பில் எமது நாட்டில் உளவுப் பிரிவி னரால் தகவல்கள் சேகரிக்க வேண்டும் என வெர் மேலும் தெரிவித்தார்.

ஆவண பரிசீலனை இரத்து


மன்னாரில் நடைபெற விருந்த பட்டதாரிகளின் மேன் முறையீட்டு ஆவண பரிசீலனை இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

அரச சேவையில் பட்டதாரி களை உள்வாங்கும் பொருட்டு, 2012 ஆம் ஆண்டு மார்ச் 30 ஆம் திகதிக்கு முன்னர் பட்டம் பெற்றவர்களின் ஆவண பரி சீலனை நேற்று இடம்பெறுமென முன்னர் அறிவிக்கப்பட் டிருந்தது.

ஆயினும், உள்நாட்டலு வல்கள் அமைச்சின் செயலா ளரின் அறிவுறுத்தல்களுக்கு அமைய, குறித்த ஆவண பரி சலனை இரத்துச் செய்யப்பட்டுள் ளதாக மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் குறிப்பிட்டார்.

ஆவண பரிசீலனை நடை பெறும் தினம் பின்னர் அறிவிக் கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.





யாழ்.சின்னப்பள்ளி வாசல் முஸ்லிம் மையவாடியில் சிரமதானம் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. நாவாந்துறை 23 ஆவது கஜபா இராணுவ அணியினருடன் யாழ்.பள்ளிவாசல் உலமாக்கள் நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்துகொண்டு சிரமதானப் பணியில் ஈடுபடுவதைக் காணலாம். (105)

க.பொ.த. (சாதாரணதர) மாதிரி வினாத்தாள்

G.C.E. (O/L) Examination model Paper

கணிதம்

பகுதி I

1) சீனி 1 Kg இன் விலை ரூ.110 ஆகும். 1500g சீனியின் விலை யாது?

2) 2.5 லீற்றரை மில்லி லீற்றரில் தருக.

3) $\frac{x}{2} = 5$, x இன் பெறுமானம் காண்க.

4) சுருக்குக (-8) + 3

5) சுருக்குக 0.25 x 100

6) 10 இலும் குறைந்த முதன்மை எண்களின் தொடையை எழுதுக.

7) $x > 1$ எனும் சமனிலியை எண்கோட்டில் குறிக்க.

8) எளிய வடிவில் தருக. 10 : 15


9) x, 75^0 82^0 என்பது முக்கோணியொன்றின் கோணங்களாகும். x இன் பெறுமானம் காண்க.

10) செவ்வகத்தின் பரப்பளவு 35 cm^2 ஆகும். அதன் நீளம் 7 cm எனின் அகலம் யாது?

11) காரணிப்படுத்துக. $x^2 - 100$

12) $\log_3 81$ பெறுமானம் காண்க.

13) நாணயமொன்று இருமுறை மேலே எறியப்படுகிறது. மாதிரிவெளியை மரவரிப்படத்தில் காட்டுக.

14) 

உருவில் (a+b) இன் பெறுமானம் காண்க.

15) சுருக்குக $\frac{1}{x-1} - \frac{1}{x-1}$

16) Sin x = Cos 60^0 எனின், x இன் பெறுமானம் காண்க.

17) A : B = 2 : 3, B : C = 4 : 5 எனின்,
A : B : C காண்க.

18) சுருக்குக. $\frac{2}{3} + \frac{5}{6}$ இன் $\frac{2}{5}$


19) சிலிண்டர் வடிவ நீர்த் தாங்கியின் அடியின் பரப்பளவு 3.85m^2 ஆகும். அதன் உயரம் 1.5 m ஆகும். அதன் கொள்ளளவைக் காண்க.

20) பயணமொன்றின் $\frac{3}{4}$ பங்கு தூரம் 36 km ஆகும். அப்பயணத்தின் முழுத் தூரம் எவ்வளவு?

21) t ஐ எழுவாயாக்குக. $v = u + at$


22) $T_n = 2n+1$ இனால் கூட்டல் விருத்தியொன்றின் உறுப்பு காட்டப்பட்டுள்ளது. பொது விகிதத்தினைக் காண்க.

23) ரூபா 300 இற்கு வாங்கப்பட்ட பொருள் 360 ரூபாவிற்கு விற்கப்பட்டது எனின், இலாப சதவீதத்தினைக் காண்க.

24) 

உருவில் காட்டப்பட்டிருப்பது ஆரைச்சிறையாகும். வில் AB நீளத்தைக் காண்க. O மையமாகும். ($\pi = \frac{22}{7}$)

25) ABCD வட்ட நாற்பக்கலாகும். x இன் பெறுமானம் காண்க.



26) அடைப்பு நீக்கி சுருக்குக. 2(a+1) - 3 (a-1)

27) நேர்கோடு ஒன்றின் படித்திறன் -2 ஆகும். அந்நேர்கோடு (0,1) இல் y அச்சை வெட்டுகிறது. இந்நேர்கோட்டின் சமன்பாட்டினை எழுதுக.

28) சுருக்குக. $(27)^{\frac{-1}{3}}$

29) A, B என்பன இரு நிலைத்த புள்ளிகளாகும். புள்ளி C அசைவது $A\hat{C}B = 90^0$ ஆகுமாறு C இன் ஒழுக்கை விபரிக்குக.

30) தசம எண்ணாக மாற்றுக. $1001_{\text{இரண்டு}}$

பகுதி B

01) சிமெந்துக் கலவை ஒன்றில் சிமெந்து, மணல், சுண்ணாம்பிற்கிடையிலான விகிதம் 1 : 4 : 3 ஆகும்.

a) i) கலவையிலுள்ள சிமெந்தின் பின்னத்தைக் காண்க.

ii) 20 மணல் தாச்சிகள் கலவைக்கு இடும்போது எத்தனை சிமெந்து தாச்சிகள் இடவேண்டும்.

b) 48 தாச்சி சிமெந்துக் கலவையிலுள்ள சிமெந்து, மணல், சுண்ணாம்பு தாச்சிகளின் அளவை தனித்தனியாகக் காண்க.

c) நிகழ்காலத்தில் சுண்ணாம்பின் பாவனை குறைக்க வேண்டியுள்ளது. இதற்குக் காரணங்கள் 2 தருக.

02)

பிரதேச சபையினால் தனது கட்டுப்பாட்டின் கீழுள்ள வீடுகளின் ஆண்டு வரி அறவிடுவது அவ்வீட்டின் ஆண்டுப் பெறுமதியில் 15% ஆகும். ஆண்டு வரியை காலாண்டிலும் செலுத்தலாம்.

i) காலாண்டு என்பது எத்தனை மாதங்களாகும்?

ii) ரூ. 40000 ஆண்டுப் பெறுமதி உடைய வீட்டிற்காகச் செலுத்த வேண்டிய காலாண்டு வரியைக் காண்க.


iii) ஒருவர் காலாண்டு வரியாக ரூ. 675 செலுத்துகிறார் எனின், அவ்வீட்டின் ஆண்டுப் பெறுமதி எவ்வளவு?

iv) $\sqrt{20} + \sqrt{5}$ கூட்டுக.

03) டிசம்பர் மாதத்தில் நடைபெற்ற புத்தகக் கண்காட்சியில் விற்பனை செய்யப்பட்ட புத்தகங்களின் எண்ணிக்கை கீழே தரப்பட்டுள்ளன. (ஒருவரால் ஒரு வகையான புத்தகம் மட்டுமே கொள்வனவு செய்யப்பட்டது)

- புனைகதைகள்	= 158
- கவிதைகள்	= 138
- இரு வகைகளிலும் ஒரு வகையாவது கொள்வனவு செய்தவர்களின் எண்ணிக்கை	= 108
- $n(\Sigma)$	= 332

a) மேற்படி தரவுகளின் அடிப்படையில் வென் உருவை பூரணப்படுத்துக.



b)
i) புனைகதைகள் மட்டும் கொள்வனவு செய்தோரின் எண்ணிக்கை யாது?

ii) புனைகதைகள், கவிதைப் புத்தகங்கள் கொள்வனவு செய்தவர்களின் எண்ணிக்கை யாது?

iii) புனைகதைகள் அல்லது கவிதைப் புத்தகங்கள் கொள்வனவு செய்தவர்களின் எண்ணிக்கை யாது?

04) குறித்த ஒரு பிரதேசத்திற்கு கிடைத்த மழைவீழ்ச்சி mm இல் அட்டவணையில் தரப்பட்டுள்ளது. (இங்கு 15 - 25 என்பது 15 mm அல்லது அதிலும் அதிகம் 25 mm இலும் குறைவு)

மழைவீழ்ச்சி	15 -25	25 - 35	35 - 45	45 - 55	55 - 65
நாட்களின் எ.கை (மீடிறன்)	2	3	5	6	4

a) இக்கால எல்லையினுள் பதிவாகியிருக்கும் உயர் மழைவீழ்ச்சி எவ்வளவு?

b) மீடிறன் பரம்பலின் ஆகாரம் எவ்வளவு?

c) எழுமாறாக தெரிவு செய்யப்பட்ட நாளொன்றில் பதிவாகிய மழைவீழ்ச்சி 35 mm இலும் அதிகமாயிருப்பதற்கான நிகழ்தகவினைக் காண்க.

d) வலையுரு வரையத்தினை வரையாது மீடிறன் பல்கோணியை வரைக.

05) வட்ட வடிவ மைதானத்தினைச் சுற்றி மணித்தியாலயத்திற்கு 33 கிலோ மீற்றர் எனும் மாறா வேகத்தில் ஈருருளியைச் செலுத்தும் ஒருவர் 6 சுற்றுக்களைச் சுற்றுவதற்கு 3.6 நிமிடங்கள் எடுக்கிறார். $\left(\pi = \frac{22}{7}\right)$

a) ஒரு நிமிடத்தில் பயணம் செய்யும் தூரம் எவ்வளவு?

b) ஒரு சுற்றை முழுமையாக முடிக்க எடுக்கும் நேரம் எவ்வளவு?

c) மைதானத்தின் பரிதியைக் காண்க.

d) மைதானத்தின் விட்டத்தைக் காண்க.

e) மைதானத்தின் பரப்பளவைக் காண்க.

பகுதி II

பகுதி A

01)

மின் உபகரணமொன்றை இறக்குமதி செய்யும்போது அதன் பெறுமதியின் 40% ஐ சுங்கவரியாகச் செலுத்த வேண்டும்.

a) ரூ. 250 000 பெறுமதியுடைய இயந்திரத்திற்காகச் செலுத்த வேண்டிய சுங்க வரியைக் காண்க.

b) சுங்கத் தீர்வைக்கு மேலதிகமாக போக்குவரத்துச் செலவு - வேறு செலவுகளாக ரூ. 12000 செலவு செய்யப்பட்டது.
i) இயந்திரத்திற்காக செலவு செய்த முழுத்தொகை எவ்வளவு?

ii) இயந்திரத்தை விற்பதால் 15% இலாபம் எதிர்பார்க்கப்படுகிறது எனின், அதன் விற்பனை விலையைக் காண்க.

c) இவ் இயந்திரத்தை நுகர்வோர் கொள்வனவு செய்யும்போது 10% வற் வரி அறவிடப்படுகிறது. செலுத்த வேண்டிய வற் வரி எவ்வளவு?

02) மாறி x இன் ஒத்த பெறுமானங்கள் சிலவற்றை ஒத்த சார்பு $y = 2x^2 + 5$ இன் பெறுமானங்கள் இடம்பெறும். அட்டவணை கீழே காணப்படுகின்றது.

x	-3	-2	-1	0	1	2	3
y	-13	- 3		5	3	-3	- 13

a) i) $x = -1$ ஆக இருக்கும்போது y யின் பெறுமானத்தைக் காண்க.

ii) வரைபுத் தாளில் பொருத்தமான அளவிடையை எடுத்து சார்பின் வரைபை வரைக.

b) உமது வரைபைக் கொண்டு

i) சார்பு நேராகும் x இன் பெறுமான ஆயிடையை எழுதுக.

ii) உச்சியின் ஆள்கூறுகளை எழுதுக.

iii) $y = -2(x+1)^2 + 5$ சார்பின் உச்சியின் ஆள்கூறுகளை உய்த்தறிக.

03) $A = \begin{pmatrix} 2 & 3 \\ 4 & 5 \end{pmatrix}$ $B = \begin{pmatrix} 4 & 2 \\ 3 & 5 \end{pmatrix}$ $C = \begin{pmatrix} x+y & 5 \\ 7 & y+x \end{pmatrix}$

i) $2A + 3B$ தாயத்தை எழுதுக.

ii) $A + B = C$ எனின், x, y உள்ளடங்கிய ஒரு சோடி சமன்பாடுகளை எழுதுக.

iii) மேற்படி சமன்பாட்டைத் தீர்ப்பதால் x, y இன் பெறுமானங்களைக் காண்க.

04) குறிப்பிட்ட சில மனிதர்களின் திணிவு கீழே காட்டப்பட்டுள்ளது.

திணிவு (kg)	40-46	47-53	54-60	61 - 67	68 -74	75-81	82-88
மனி. எண்ணிக்கை (மீடிறன்)	06	17	18	14	6	12	07

a) ஆகார வகுப்பாயிடையை எழுதுக.

டி) ஒரு மனிதரின் இடை திணிவைக் கணிக்க.

உ) இவர்களுள் ஒருவர் எழுமாறாக தெரிவு செய்தால் அவர் 60 kg இலும் அதிகமாவதற்கான நிகழ்தகவினை தருக.

05) a) தீர்க்க. $\frac{3x - 4}{x} - 1 = 0$

b) பொருத்தமான முறையை உபயோகித்து $x^2 - 4x + 2 = 0$ சமன்பாட்டின் தீர்வுகளை முதலாம் தசமத்திற்கு திருத்தமாக தருக.

06) a) மலை அடிவாரத்திலிருந்து 240 m தூரத்தில் மலை உச்சி 27^0 ஏற்றக் கோணத்தில் தென்படுகிறது.

i) மலையின் உயரத்தைக் காண்க. (கிட்டிய மீற்றரில்)


ii) இன்னும் 60m மலை அடியை அண்மித்த உடன் மலை உச்சி தென்படும் ஏற்றக் கோணத்தைக் காரண்க.

b) A எனும் புள்ளியிலிருந்து B, C புள்ளிகளின் தூரமும் திசைகோளும் கீழே காட்டப்பட்டுள்ளன. அத்தரவுகளினூடாக BC இன் தூரத்தைக் காண்க.

	தூரம்	திசைக்கோள்
புள்ளி B	5 m	050^0
புள்ளி C	12 m	140^0

பகுதி B

07) a) அலங்காரம் ஒன்றிற்காக செவ்வக வடிவ காட்போட் துண்டுகள் வெட்டப்படுவது குறிப்பிட்டதொரு கோலத்திலாகும். வெட்டப்படும் முதல் மூன்று செவ்வகங்களும் கீழே காட்டப்பட்டுள்ளன. அதில் அளவுகள் சென்றிமீற்றரில் குறிப்பிடப்பட்டுள்ளன.



i) முதல் மூன்று செவ்வகங்களினதும் பரப்பளவுகளைக் காண்க.

ii) 10 ஆவது செவ்வகத்தின் பரப்பளவைக் காண்க.

iii) 10 செவ்வகங்களை வெட்டுவதற்காக 40 cm நீளமும் 15 cm அகலமும் உடைய காட்போட் போதுமென நிமல் கூறினான். அது உண்மையா பொய்யா என காரணத்துடன் குறிப்பிடுக.

b) 2, 6, 18, 54 !! !! .....:. பெருக்கல் விருத்தியின் முதல் 10 உறுப்புக்களினதும் கூட்டுத்தொகையைக் காண்க.

08) cm / mm நேர்விளிம்பையும் கவராயத்தினையும் மாத்திரம் பயன்படுத்தி அமைப்பு கோடுகளை தெளிவாக காட்டி

i) AB = 7.5 cm, AD = 6 cm, $B\hat{A}D = 60^0$ உடைய முக்கோணி ABD ஐ அமைக்க.

ii) B, D புள்ளிகளுக்கு சமதூரத்தில் அமையும் புள்ளியின் ஒழுக்கை அமைக்க.

iii) AB மீது மையம் அமையுமாறும் B, D யினூடாக செல்லும் வட்டத்தை அமைக்க. அதன் ஆரையை அளந்து எழுதுக.

09) தரம் 11 இல் கணித பாடத்திற்கான தலைவர் மற்றும் உப தலைவரைத் தெரிவுசெய்வதற்காக தகைமை உடைய இரு மாணவர்களும் மாணவிகள் மூவரும் தெரிவு செய்யப்பட்டனர். இதில் இருவர் இந்தப் பதவிக்காக நியமிக்கப்படுவர்.

a) மேற்படி நிகழ்விற்குப் பெர்ருத்தமான எல்லா நிகழ்வுகளையும் உள்ளடக்கிய மாதிரி வெளியை தெக்காட்டின் தளத்தில் காட்டுக.

b) நீங்கள் மேலே வரைந்த வரைபைப் பய்ன்படுத்தி இரு பதவிகளுக்கும்

i) பெண் பிள்ளைகள் தெரிவாதல்
ii) ஆண் பிள்ளைகள் தெரிவாதல்
iii) ஒரு பிள்ளையாவது பெண் பிள்ளையாக இருப்பதற்கான நிகழ்தகவினைக் காண்க.

உள்ளூராட்சி சபைகளின் அனுமதியின்றி மின்சார, ரெலிகொம் கம்பங்களை நடமுடியாது

சபைத் தலைவர்களுக்கு அறிவுறுத்து

(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சி சபைகளின் அனுமதியின்றி இலங்கை மின்சாரசபையோ, ஸ்ரீலங்கா ரெலிக்கொம் நிறுவனமோ உள்ளூராட்சி நிர்வாகப் பரப்பில் போஸ்ட் (கம்பங்கள்) நடமுடியாது.

மாகாணசபைகள் உள்ளூராட்சி அமைச்சு அமைச்சரவை தொடர்பான முடிவுகளின் தீர்மானங்கள் மூலம் இந்த அறிவிப்பினை நாடு தழுவிய உள்ளூராட்சி சபைத் தலைவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் பிரதேச சபை, நகரசபை, மாநகரசபை அனுமதியின்றி மேற்படி நிறுவனங்கள் தாம் விரும்பிய இடங்களில் கம்பங்களை நட்டன.

இதனால் தற்போது பாரிய அளவில் வீதி விஸ்தரிப்புக்களும் வீதிப் புனரமைப்புகளும் இடம்பெற்று வருகின்றன.

எனவே, உள்ளூராட்சி நிர்வாகப் பரப்பினுள் இலங்கை மின்சாரசபை, ஸ்ரீலங்கா ரெலிக்கொம் நிறுவனம், தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை என்பன வீதிகளைப் பயன்படுத்தும் முன்னர் முறையான ஒழுங்கு விதிகளைப் பின்பற்ற வேண்டிய கடப்பாட்டுக்குள் தள்ளப் பட்டுள்ளனர்.

மேற்படி அமைச்சரவை பத்திர முடிவுகள் சகல உள்ளூராட்சி சபைகளுக்கும் மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சரின் செயலாளரினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இச் சட்ட விதிகளை மீறும் சகல நிறுவனங்கள் மீதும் நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (92)

அனுமதியின்றி மணல் ஏற்றிய சாரதிக்கு எதிராக வழக்கு

நெல்லியடி பகுதியில் அனுமதிபத்திரமின்றி மணல் ஏற்றிச் சென்ற சாரதிக்கு எதிராக நெல்லியடி பொலிஸார் பருத்தித்துறை நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை அனுமதிப்பத்திரமின்றி மணலை உழவு இயந்திரத்தில் ஏற்றிக்கொண்டு கரவெட்டி சரஸ்வதி வீதியூடாகச் சென்ற சாரதியை பொலிஸார் மறித்தும் அதனை பொருட்படுத்தாது சாரதி சென்றுள்ளார்.

பொலிஸார் விக்னேஸ்வரா வீதியினூடாக குறுக்குப் பகுதியில் வந்த உழவு இயந்திரத்தை மறித்த போது சாரதி உழவு இயந்திரத்தை விட்டு தப்பி ஓடியுள்ளார்.

மணலுடன் உழவு இயந்திரத்தை பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு சென்றுள்ள நிலையில் அன்றைய தினமே சாரதி நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் வந்து ஆஜர் ஆகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அனுமதிப் பத்திரமின்றி மணலை ஏற்றிச் சென்ற குற்றத்துக்காக நாளை மறுதினம் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (18)

பதவியுயர்வு

(திருநெல்வேலி)

நல்லூர் பிரதேச சபைச் செயலாளர் மேரியோசப் சாந்த சீலன் வடமாகாண உள்ளூராட்சித் திணைக்களத்தின் நிர்வாக உத்தியோகத்தராகப் பதவி உயர்வு பெற்றுள்ளார்.

நல்லூர் பிரதேச சபைக்குப் புதிய செயலாளர் ஒருவர் இன்னும் நியமிக்கப்படாமையினால் புதிய பொறுப்புடன் சில [illegible]களுக்கு செயலாளரின் கடமைகளையும் அவர் மேற்கொள்வார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரதேச சபைச் செயலாளராக அவர் செயலாற்றியபோது சிறந்த நிர்வாகத் திறன் கொண்ட ஒருவராக அவர் செயறபட்டார் எனப் பலராலும் பாராட்டப்பட்டுள்ளார்.

தேர்தல் மூலம் புதிய உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டு பிரதேச சபையின் செயற்பாடுகளை அவர் சிறந்த முறையில் நிர்வகித்து வந்தார் எனப் பலரும் பாராட்டியுள்ளனர். (137)

யாழ்ப்பாணக் கல்லூரி கொலை சந்தேகநபர்களுக்கு விளக்கமறியல்

பொன் அணிகளின் போரின் போது அடித்துக் கொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புபட்ட ஐந்து பேரையும் எதிர்வரும் 20 ஆம் திகதி வரையும் விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதவான் நீதிமன்ற நீதவான் திருமதி ஜோய் மகிழ் மகாதேவ நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை உத்தரவிட்டார்.

மேற்படி வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே நீதவான் மேற்படி உத்தரவினைப் பிறப்பித்தார்.

சென். பற்றிக்ஸ் கல்லூரி அணிக்கும் யாழ்ப்பாணக் கல்லூரி அணிக்கும் இடையில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் கடந்த மார்ச் 15 ஆம் திகதி இடம் பெற்ற பொன் அணிகள் போரின்போது, பழைய மாணவர்களுக்கிடையில் ஏற்பட்ட கைகலப்பில் சென்.பற்றிக்ஸ் கல்லூரியின் பழைய மாணவரான யாழ்ப்பாணம் செட்டியார் தெருவைச் சேர்ந்த ஜெயரட்ணம் தர்ஷன் அமலன் (வயது -23) என்ற இளைஞன் அடித்துக் கொலை செய்யப்பட்டார்.

இந்தக் கொலையுடன் தொடர்புபட்ட நால்வர் வட்டுக் கோட்டைப் பொலிஸாரினால் மார்ச் 15 ஆம் திகதி கைது செய்யப்பட்டு, மல்லாகம் நீதவான் நீதிமன்றத்தினால் விளக்க மறியலில் வைக்கப் பட்டனர்.

இந்நிலையில் குறித்த கொலைச் சம்பவத்துடன் தொடர்புபட்ட மேலும் நால்வர் முன்னர் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப் பட்டவர்களுடன் இவர்களையும் இணைத்து கடந்த மார்ச் மாதம் 25 ஆம் திகதி நீதிமன்றில் ஆஜர்படுத்திய போது, நீதவான் அவர்களை அடையாள அணிவகுப்பிற்கு உட்படுத்துமாறு உத்தரவிட்டார்.

அதற்கமைய அவர்கள் அடையாள அணிவகுப்பிற்குட் படுத்தப்பட்ட போது, அமலனின் நண்பர்களினால் அமலனைக் கொலை செய்தவர்கள் என ஐவர் அடையாளங்காட்டப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (25)

வெளிநாட்டு மாப்புள்ள பாடல் வெளியீட்டு விழா

இசையமைப்பாளர் "ஜெ"யின் இசையில் "நான்" திரைப்படப் புகழ் பாடலாசிரியர் கவிஞர் முத்துவில் அஸ்மின் எழுதியுள்ள "வெளிநாட்டு மாப்புள்ள" பாடல் இறுவட்டு வெளியீட்டு விழா நாளை மறுதினம் பி.ப 3.00 மணிக்கு பத்தரமுல்லையில் அமைந்துள்ள தமிழ் எவ்.எம் வானொலி கலையகத்தில் நடைபெறவுள்ளது.

இன்றைய காலகட்டத்தின் முக்கியமான கதையாடலை கருவாகக் கொண்டு உருவெடுத்துள்ள "வெளிநாட்டு மாபபுள்ள" பாடல், வெளிநாட்டு மணமகனை திருமணம் செய்வதனால் பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினையை நகைச் சுவையோடு கிராமிய மணத்தோடு பேசுகின்றது.

இலங்கையின் பிரபல கானா பாடகர் நவகம்புர கணேஸ் பாடியுள்ள இப்பாடலுக்கான ஒலிக்கலவையை "சென்னையில் ஒருநாள" திரைப்படத்தில் பணிபுரிந்த ஷியு மேற்கொண்டுள்ளார்.

தமிழ் எவ்.எம மற்றும் லண்டன "வெற்றி'' வானொலி ஆகியவற்றின் ஊடக அனுசரணையில் நடைபெறும் இந்த பாடல் வெளியீட்டு நிகழ்வு இன்றைய நவீன தொழில்நுட்ப வளர்ச்சியினால் இலங்கையிலும் லண்டனிலும் ஒரே நேரத்தில் நிகழவுள்ளன.

தமிழ் எவ்.எம வானொலியின் பணிப்பாளர் பரணிதரன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக இலங்கையின் பிர பல இசையமைப்பாளர் மோகன ராஜ் வருகை தருகின்றார்.

கௌரவ அதிதிகளாக பிர பல பாடகர் மகிந்தகுமார், ஒலி பரப்பாளர் "மனிதநேயன்" இர் ஷாத் ஏ.காதர், இசையமைப் பாளர்களான கருப்பையா பிள்ளை பிரபாகரன், பிருந்தன் ராகவன், டிரோன் பெர்ணனடோ, செந்தூரன் ஆகியோர் வருகை தரவுள்ளனர்.



வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :- .....

முகவரி :- .....

பிறந்த ஆண்டு :- .....

கூப்பன் ஐந்தும், புகைப்படமும்

.....


பெற்றோர் கையொப்பம்

போட்டியில் முதலிடம்

(அச்சுவேலி)

யாழ். வலயமட்ட தமிழ்த்தின போட்டியில் வாசிப்பு மற்றும் பாவோதல் போட்டியில் ஒரு பாடசாலையைச் சேர்ந்த இரு மாணவர்கள் முதலிடத்தைப் பெற்றுள்ளனர்.

அச்சுவேலி இடைக்காடு மகா வித்தியாலயத்தில் கல்வி பயிலும் த.பிரவீனா வாசிப்பு பிரிவு 1 இலும், கு.நிதர்சனா பாவோதல் பிரிவு 5 இலும் முதலிடத்தைப் பெற்றுள்ளனர். (85)



பூநகரிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கரியாலை நாகபடுவான் கிராஞ்சி போன்ற கிராமங்களுக்கு உவர் நீர்த்தடுப்பணை தொடர்பான கலந்துரையாடல் அண்மையில் நடைபெற்றது. இதில் மாவட்ட செயலாளர் பிரதேச செயலர் மற்றும் நீர்பாசன திணைக்கள மற்றும் UNDP, IOM, அரசாங்க உத்தியோகத்தர்கள், அரசசார் பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். (36)

உக்ரைனில் போர் அபாயம் சமரசத்தில் ஐரோப்பிய நாடுகள்



உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுத்துள்ள நிலையில் அதற்கு பதிலடி கொடுக்கத் தயார் என அந்நாட்டின் இடைகால அதிபர் அலெக்ஸாண்டர் துர்ச்சி னோவ் எச்சரித்துள்ள நிலையில், இரு தரப்பினருக்கும் இடையில் சமர சம் ஏற்படுத்தும் முயற்சியில் ஐரோப்பிய நாடுகள் இறங்கியுள் ளன.

உக்ரைன் தொலைக்காட்சி யில் துர்ச்சினோவ் நேற்று முன் தினம் திங்கட்கிழமை ஆற்றிய உரையில், நமது நாட்டுக்கு எதி ராக போர் தொடுக்கப்பட்டுள் ளது. ஆக்கிரமிப்புகளை முறி யடிப்பதற்கு நாம் தயாராக இருக்க வேண்டும்.

நாளை மறுதினம் 9 ஆம் திகதி கொண்டாடப்படும் இரண் டாம் உலகப்போர் வெற்றி நினைவு தினத்தை ரஷ்யாவின் ரகசிய கைக்கூலிகள குலைக்கக்கூடும் எனவே, தலைநகர் கீவைச் சுற்றி லும் தடை ஏற்படுத்தியுள்ளோம் என்று கூறினார்.

உக்ரைனின் முப்படைகளுக் கும் போர்கால அவசர நிலையை அறிவித்துள்ள துர்ச்சினோவ், கட்டாய இராணுவ சேவையை யும் மீண்டும் அறிமுகப்படுத்தி யுள்ளார்.

உக்ரைனின் இந்த உறுதியான நடவடிகைகள் காரணமாக முன னாள் சோவியத் யூனியனைச் சேர்ந்த அந்த நாட்டில் வெளிப் படையான உள்நாட்டுப் போர் மூளும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், பதற்றத்தைத் தணிககும் வகையில் உக் ரைன் அரசுக்கும், அந்நாட்டின் கிழக்குப் பகுதியில் உளள கிளர்ச் சியாளர்களுக்கும் இடையில் சமரசத்தை ஏற்படுத்த ஐரோப் பிய பாதுகாப்பு மற்றும் ஒத்துழைப்பு அமைப்புக்கு பல் வேறு தரப்பினரும் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

இதனையடுத்து, அமைதிப் பேச்சு வார்த்தை மேற்கொள் வதற்காக அந்த அமைப்பின் தலை வர் திடியர் பர்கால்டர் ரஷ்ய தலைநகர் மாஸ்கோவுக்கு செல்லவுள்ளார்.

இதற்கிடையே, உக்ரைனுக்கு எதிரான கிளர்ச்சியின் மையமாக விளங்கும் அந்நாட்டின் ஸ்லாவ் யான்ஸ்க் நகரைச் சுற்றி லும் உக்ரைன் துருப்புக்கள் குவிக் கப்பட்டு வருகின்றன.

அந்நகரிலிருந்து அந்தப் பிராந்தியத்தின் தலைநகரான டோனெட்ஸ்க்குக்குச் செல்லும் வழி முழுமையாக அடைக்கப் பட்டுள்ளது.

அங்கு ஞாயிற்றுக்கிழமை இரவு முழுவதும் துப்பாக்கி களின் வெடிச் சத்தம் தொடர்நது கேட்டதாக செய்தியாளர் ஒரு வர் தெரிவித்தார்.

ரஷ்ய - உக்ரைன் ஆதர வாளர்களிடையே நிகழ்ந்த மோதலில் பலர் உயிரிழந்த ஒடெஸ்ஸா நகரிலிருந்து, வன் முறை பரவி வருவதாகத் தக வல்கள் தெரிவிக்கின்றன.

ஜப்பானில் நிலநடுக்கம்

(டோக்கியோ)

ஜப்பான் தலைநகர், டோக்கியோவில், நேற்றுமுன்தினம் அதி காலை ஏற்பட்ட நிலநடுக்கத்தினால், கட்டடங்கள் குலுங்கின. ஜப்பானை சுற்றிலும் எரிமலைகள் உள்ளதால், இந்த நாட்டில், அடிக்கடி நிலநடுக்கம் காணப்படுகிறது. டோக்கியோவின், தென்மேற்குப் பகுதியில் உள்ள, ஜு ஓஷிமா தீவை மையமாகக் கொண்டு, 6 ரிக்டர் அளவுக்கு, நிலநடுக்கம் ஏற்பட்டது. இதில், 17 பேர் காயமடைந்தனர். இதனால் ரயில் போக்குவரத்து சிறிது நேரம் பாதிக்கப்பட்டது.

அகதிகள் படகுகள் மூழ்கி கிரீஸ் நாட்டில் 22 பேர் பலி

ஐரோப்பிய நாடுகளில் குடி யேறுவதற்காக 2 படகுகளில் பலர் அகதிகளாக புறப்பட்டு வந்தனர். இவர்கள் துருக்கி அருகேயுள்ள சமோஸ் தீவில் இருந்து வந்து கொண்டிருந்தனர்.

கிரீஸ் நாட்டின் ஏஜியன் கடலில் வந்த போதே அந்த 2 படகுகளும் கடலில் மூழ்கின. எனவே அதில் பயணம் செய்த வர்கள் தண்ணீரில் மூழ்கி தத்தளித்துக் கொண்டிருந்த னர்.

அதைப் பார்த்த கிரீஸ் கடற் படை அதிகாரிகள் ரோந்து கப்பலுடன் அங்கு சென்று மீட்புப் பணியில் ஈடுபட்டனர். அவர்களில் 36 பேரை உயிரு டன் மீட்டனர்.

அவர்களில் 32 பேர் ஆண்



கள், 3 பெண்கள் மற்றும் ஒரு குழந்தையும் அடங்குவர். மீட்கப் பட்டவர்களில் 23 பேர் சோமா லியாவையும், 9 பேர் சிரியா வையும், 3 பேர் எரித் தியாவை யும் சேர்ந்தவர்கள்.

ஆனால் 22 பேர் கடலில் மூழ்கி பரிதாபமாக இறந்தனர். அவர்களில் 18 பேர் பெரி யவர்கள், 4 பேர் குழந்தைகள். இவர்களது பிணங்கள் கடலில் மிதக்கின்றன. அவற்றை மீட்கும் பணியில் கிரீஸ் கடற்படையினர் ஈடுபட்டுள்ளனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை பல்கலைக்கழக அனுமதி 2013/ 2014 உளச்சார்புப் பரீட்சை (Aptitude Test) மொழிபெயர்ப்பு கற்கை நெறி

மேற்படி நான்கு வருட பட்டப்படிப்புக் கற்கை நெறிகளுக்கு அனுமதி பெற விரும்பும் தகுதியான விண்ணப்பதாரிகளிடமிருந்து 23.05.2014 ஆம் திகதி வரை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.
அனுமதிக்கான பொது நிபந்தனைகள்

அனுமதிக்கான தகைமைகள்

மொழிபெயர்ப்புக் கற்கை நெறியைத் தெரிவுசெய்வதற்கு விரும்பும் விண்ணப்பதாரிகள் 2013 ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த (உ/த) பரீட்சையில் சித்தியடைந்திருப்பதுடன், பல்கலைக் கழக மானிய ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட 2013/2014 கைநூல் 3.2.1 3.2.2. 8.1.9 இற்கு அமைய தகுதி பெற்றிருத்தல் வேண்டும்.

தகுதிகாண் பரீட்சை

மேற்குறித்த கற்கைநெறி அனுமதிக்கான விண்ணப்பதாரிகள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தால் நடாத்தப்படும் உளச்சார்பு பரீட்சைக்கு (Aptitude Test) தோற்றுதல் வேண்டும்.

விண்ணப்பங்களை சமர்ப்பித்தல்

விண்ணப்பதாரிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தை A4 தாளில் தயா ரித்தோ அல்லது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அனுமதிகள் கிளையில் பெற்றோ அல்லது www.jfa.ac.lk என்ற யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இணையத்தளத்திலிருந்து தரவிறக்கம் செய்தோ தகுதிகாண் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேற்படி தகுதிகாண் பரீட்சைக்கான விண்ணப்பத்துடன் ரூபா 150 ஐ ஏதாவதொரு மக்கள் வங்கிக் கிளையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளைக்கணக்கு இல 162100160000880 இல் செலுத்திப் பெற்ற பற்றுச்சீட்டுடன் பாடசாலை அதிபர் அல்லது சமாதான நீதவானால் உறுதிப் படுத்தப்பட்ட க.பொ.த (உ/த) பெறுபேற்றுப் பத்திரத்தினது போட்டோப் பிரதியும் அனுப்பப்படல் வேண டும். பரீட்சைப் பெறுபேற்றில் அல்லது பெயரில் மாற்றங்கள் ஏதும் இருப்பின் அதற்குரிய சத்தியக் கடதாசி சமர்ப்பிக்கப்பட்டு உறுதி செய்யப்பட வேண்டும். விண்ணப்பதாரிகள் சுய விலாசம் இடப்பட்ட முத்திரை ஒட்டப்பட்ட 23x10 ச.மீ அளவுள்ள கடித உறையை இணைத்து அனுப்புதல் வேண்டும்.
பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் யாவும் 23.05.2014 ஆம் திகதிக்கு முன்னதாக உதவிப் பதிவாளர் அனுமதிகள் கிளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் கற்கை நெறியைக் குறிப்பிட்டு பதிவுத் தபால் மூலம் அல்லது நேரில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

அனுமதிக்குரிய ஆகக் குறைந்த தகைமையை கொண்டிராததும், பணம் செலுத்திய பற்றுச்சீட்டு சமர்ப்பிக்கப்படாததும், பெறுபேற்று பத்திரங்களின் உறுதி செய்யப்பட்ட போட்டோ பிரதிகள் இணைக்கப்படாததும், விண்ணப்ப முடிவுத் திகதிக்குள் கிடைக்கப்பெறாததுமான விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.

பிரவேச அனுமதித் தகைமையைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டை அனுப்பி வைக்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு தொடர்புகொள்ள வேண்டிய

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை
கலைப்பீடம்
பல்கலைக்கழகஅனுமதி–2013/2014
மொழி பெயர்ப்பு கற்கை நெறி
தகுதி காண் பரீட்சைக்கான விண்ணப்பப்படிவம் (Aptitude Test)

1. விண்ணப்பதாரியின் முழுப் பெயர்:-
(தமிழிலும் ஆங்கிலத்திலும்)

முதல் எழுத்துக் குறிக்கும் பெயர்:-

தேசியஅடையாளஅட்டை இலக்கம்:-

நிரந்தரமுகவரி (ஆங்கிலத்தில்):-

தொலைபேசி இலக்கம்:- மின்னஞ்சல் முகவரி:-

க.பொ.த (உ.த)பரீட்சைப் பெறுபேறு 2013:-

சுட்டிலக்கம்: Z புள்ளி: பொதுச்சாதாரணபரீட்சைப்புள்ளி:

பாடம்	தரம்	மொழி மூலம்	மாவட்டம்
1.			
2.			
3.			

2. பெற்றோர்/பாதுகாவலர் பெயர்:
முகவரி: (ஆங்கிலத்தில்):-

சமர்ப்பிக்கப்படவேண்டியஆவணங்கள்:

1. பணம் செலுத்தியபற்றுச்சீட்டு ☐
2. உறுதிப்படுத்திய 2013க.பொ.த (உ.த)பரீட்சைப் பெறுபேற்றுச்சான்றிதழ் (Z புள்ளி/மாவட்டம் உள்ளடங்கலாக) ☐
3. பெயர் மாற்றம் செய்யின் அதனைஉறுதிப்படுத்தக்கூடியஆவணம் ☐

என்னால் தரப்பட்டமேற்படிவிபரங்கள்யாவும் சரியெனஉறுதிப்படுத்துகின்றேன்.

....

திகதி விண்ணப்பதாரியின் கையொப்பம்.

என்முன்னிலையில் கையொப்பமிட்டார்என்பதைஉறுதிப்படுத்துகின்றேன்.

திகதி பதவிமுத்திரை பாடசாலைஅதிபர் / சமாதானநீதவான் கையொப்பம்.

(C/3676)

புத்த பெருமானுக்கு நிந்தனை; முஸ்லிம் பிரமுகருக்கு பிணை

விதிகளை மீறினால் மீண்டும் சிறைவாசம்

புத்த பெருமானை அவமதித்ததாகக் குற்றம் சாட்டப்பட்ட தவ்ஹித் ஜமாத் அமைப்பின் செயலர் அப்துல் ரபிக்டீன் என்பவரை, கடும் நிபந்தனைகள் கொண்ட பிணையில் விடுதலை செய்யுமாறு கொழும்பு மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றம் உத்தரவிட்டது.

கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் ஆறாம் திகதி கொழும்பு மாளிகாவத்தைப் பகுதியில் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்து கொண்ட இவர், புத்தரை நிந்திக்கக்கூடிய சில கருத்துகளைத் தெரிவித்தார் என்று பிரதி பொலிஸ் மா அதிபர் அனுர சேனநாயக தெரிவித்தார்.

எதிர் தரப்பு சார்பில் ஆஜரான சட்டவாதி கருத்துகளை தெரிவித்த பொது சந்தேக நபரினால் வெளியிடப்பட்ட கருத்துகள் சம்பந்தமாக அவர் பல திருத்தங்களை ஊடகங்கள் முலம் வெளியிட்டுள்ளதாகத தெரிவித்தார்.

எதிர் காலத்தில் இவ்வாறான கருத்துகளை வெளியிடுவதை இவர் தவிர்த்துக் கொள்வதாகவும் சட்டவாதி நீதிமன்றத்துக்கு வாக்களித்தார்.

புத்த பகவானை அவமதிக்கும் நோக்கம் சந்தேக நபருக்கு இல்லை என்று தெரிவித்த சட்டவாதி அவரை பிணையில் விடுதலை செய்யுமாறு வேண்டுகோள் விடுத்தார்.

ஆயினும் இந்த வழக்கைத் தொடுத்த ஜாதிக ஹெல உறுமய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அதுரலியே ரதன தேரர் மற்று பொலிஸார் எதிர்ப்பு தெரிவிதனர்.

ஆயினும் சந்தேகநபரை பிணையின் கீழ் விடுதலை செய்த நீதிபதி மதங்களுக்கிடையே மோதல்கள் ஏற்படக்கூடிய கருத்துகளை வெளியிடுவதை தவிர்த்துக் கொள்ளுமாறும் உத்தர விட்டார்.

இவாறான கருத்துகளை வெளியிட்டால் பிணை இரத்துச் செய்யப்பட்டு அவர் விளக்க மறியலில் வைக்கப்படுவார் என்றும் நீதிபதி எச்சரித்தார்.இந்த தீர்ப்பு வழங்கப்பட்ட பின்பு செய்தியாளர்களிடம் பேசிய, அதுரலியே ரதன தேரர், நீதிமன்ற தீர்ப்பு சம்பந்தமாக எமக்கு எதுவும் கூற முடியாது. ஆயினும் சந்தேகநபர் பகிரங்கமாக மன்னிப்பு கோர வேண்டும். மகா நாயக்க தேரர்கள் முன்பு அவர் பகிரங்கமாக மன்னிப்புக் கோர வேண்டும் என்றார் .பிணை வழங்கப்பட பின்பு செய்தியாளர்களிடம் பேசிய தவுஹித் ஜமாத் அமைப்பின் செயலாளர் அப்துல் ரபிக்டின் புத்த பகவானுக்கு அவமதிப்பை ஏற்படுத்தும் நோக்கம் தனக்கு இல்லை என்று கூறினார்.

சட்டம் ஒழுங்கு பாதுகாக்கப்படவேண்டும்

ஐ.தே.கட்சி கோரிக்கை



நாட்டில் சட்ட ஒழுங்கு முறையாக பேணப்பட வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.கட்சியின் தலைமைத்துவ குழுவின் உறுப்பினர் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியல்ல இவ்வாறு குறிப்பிட்டார்.

கட்சியின் தலைமையகமான ஸ்ரீ கோத்தாவில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

உலகில் சர்வதேச தரம்வாய்ந்த 500 கம்பனிகள் இருக்கின்றன. இவற்றில் ஒன்று கூட எமது நாட்டில் முதலீடு செய்ய முன்வரவில்லை.

சிறந்தவர்கள் வரமறுக்கின்ற நிலையிலேயே, அரசாங்கம் கசிப்பு காரர்களையும் கசினோகாரர்களையும் கொண்டுவர முனைகிறது. அவர்கள் இலங்கையை சீரழிவுக்கு உள்ளாக்கிவிடு வார்கள், இதன் மூலம் அரசாங்கம் எதிர்பார்க்கும் முதலீடு கிடைக்கப்பெறும். எனினும் அது சிறந்த முதலீடு என்று நாங்கள் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என குறிப்பிட்டார்.

அணுசக்தி....

கார சபை மற்றும் வெளி விவகார அமைச்சு ஆகியவற்றின் பிரதிநிதிகளைக் கொண்ட இலங்கை அணிக்கு தொழில் நுட்ப, ஆராய்ச்சி அமைச்சின் செயலாளர் தாரா விஜேதிலக தலைமை வகித்தார்.

சிவில் அணுத் தொழில்நுட்ப ஒத்துழைப்புத் தொடர்பான ஒப்பந்தத்தின் நகல் ஒன்றைத் தயாரிப்பது குறித்து இரு தரப்பினரும் கலந்தாலோசனை செய்தனர் என இந்தியத் தூதரகம் குறிப்பிட்டுள்ளது.

இந்த வருட இறுதியில் இந்தியாவில் அடுத்த சுற்றுப் பேச்சு நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

திருமலையில்...

கல்லடி மற்றும் இலங்கைத் துறை ஆகிய கிராமங்களை உள்ளடக்கியதாக இந்தத் தேடுதல் இடம் பெற்றதாக பிரதேச தகவல்கள் மூலம் தெரியவருகின்றது.

அதிகாலை 4 மணி தொடக்கம் காலை 6 மணி வரை தங்கள் கிராமங்கள் சுற்றிவளைக்கப்பட்டு 15 வயதுக்கு மேற்பட்ட ஆண்களை அந்தப் பகுதியிலுள்ள வழிபாட்டு தலமொன்றில் கூடுமாறு பாதுகாப்புப் படையினரால் ஒலிபெருக்கி மூலம் அறிவிக்கப்பட்டதாக உள்ளூர் மக்கள் தெரிவிக்கின்றார்கள்.குறிப்பிட்ட இடத்தில் கூடிய பொது மக்களிடம் சந்தேகத்திற்கிடமான நபர்களின் நடமாட்டங்கள் தொடர்பில் விழிப்பாக இருப்பதோடு தகவல் தர வேண்டியதன் அவசியம் பற்றியும் வலியுறுத்திக் கூறப்பட்டதாகவும் அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

கிராமங்களை விட்டு எவரும் வெளியிடங்களுக்கு செல்வதற்கு அனுமதி மறுக்கப்பட்ட நிலையில் மேற்கொள்ளப்பட்ட இந் நடவடிக்கையினால் நண்பகல் வரை பிரதேசத்தின் வழமை நிலை பாதிக்கப்பட்டிருந்ததாக கூறப்படுகின்றது.

அதேவேளை இந்தப் பாதுகாப்பு நடவடிக்கை தொடர்பாக இராணுவத் தரப்பு வெளியிட்டுள்ள தகவலில் திங்கட்கிழமை மாலை 6.30 மணியளவில் லங்கா பட்டுனா (இலங்கைத்துறை முகத்துவாரம்) கடற்படை முகாமுக்கு அருகாமையில் ரி-56 ரக துப்பாக்கி மற்றும் அதற்கான ரவைகளும் பையொன்றில் போடப்பட்ட நிலையில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

அதற்கு முன்னதாக கடற்படை வீரர்கள் நடைப்பயிற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது, சந்தேகத்திற்கிடமான இருவரது நடமாட்டங்கள் அவதானிக்கப்பட்டு அவர்களை கடற்படை நெருங்க முற்பட்ட வேளை தம்வசம் வைத்திருந்த பையொன்றை வீசிவிட்டு தப்பி ஓடிவிட்டனர். அந்தப் பையிலே குறித்த ரி -56 ரக துப்பாக்கி மற்றும் ரவைகள் கண்டு பிடிக்கப்பட்டன. இதனையடுத்தே இந்தத் தேடுதல் நடவடிக்கை எனக் கூறப்பட்டுள்ளது.

போருக்கு முன்னர் ஈச்சிலம்பத்தை பிரதேசம் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்த பிரதேசமாகும். போருக்கு பின்னர் கிழக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்ட முதலாவது சுற்றிவளைப்பு தேடுதல் இது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

கறுப்பு...

ஜூலியா பிஷொப்பை, அந்நாட்டு நாடாளுமன்றில் அமைச்சர் பீரிஸ் சந்தித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் பாதுகாப்புப் பேரவையின் 1373ஆம் பிரகடனத்தின் அடிப்படையில் 16 புலம்பெயர் தமிழ் அமைப்புக்களையும், 424 தனிப்பட்ட நபர்களையும் தடை செய்துள்ளதாகத் தெரிவித்துள்ளார். இராணுவ, புலனாய்வு மற்றும் பிரகார நோக்கங்களுக்காக வெளி நாடுகளில் பாரியளவில் பணம் திரட்டப்பட்டு இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

விடுதலைப் புலிகளை தொடர்ந்தும் தடை செய்யப்பட்ட இயக்கங்களின் பட்டியலில் இணைத்திருப்பதற்காக நன்றி பாராட்டுவதாக அமைச்சர் தெரிவித்துள்ளார். ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட தீர்மானம் தொடர்பில் புரிந்து கொண்டு அதற்கு ஆதரவளிக்காமை வரவேற்கப்பட வேண்டியது என அவர் சுட்டிக் காட்டியுள்ளார். நாட்டின் அரசியல், பொருளாதார நிலைமைகள் குறித்தும் அமைச்சர் பிரிஸ், அவுஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சருக்கு விளக்கம் அளித்துள்ளார்.

பணியாளர் பகிஷ்கரிப்பு; துணை மருத்துவசேவை ஸ்தம்பிதம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்று மருந்தாளர்கள், ஆய்வு கூட உதவியாளர்கள், எக்ஸ்கதிர்படமெடுக்கும் உத்தியோகத்தர்களின் பணிப்பகிஷ்கரிப்புக்காரணமாக நோயாளர் சேவை பாதிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று வழமைபோல் நோயாளர்கள் வைத்தியசாலைக்கு வருகை தந்திருந்த போதும் வைத்தியர்கள் அவர்களைப்பார்வையிட்டதுடன் அவர்கள் துணை மருத்துவசேவைகளைப் பெறமுடியாத நிலை காணப்பட்டது இதனை அடுத்து நோயாளர்கள் தனியார் மருந்தகங்களை நாடியதுடன் சிலர் வீடுதிரும்பியதையும் அவதானிக்க முடிந்தது. (பா)

வீதி விபத்தில் பெண் காயம்

(யாழ்ப்பாணம்)

கைதடி கோப்பாய் வீதி இராணுவ ரக் வண்டி ஒன்று மோதியதன் காரணமாக வயோதிபப் பெண் ஒருவர் படுகாயங்களுக்கு இலக்காகிய நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கைதடி வடக்கைச்சேர்ந்த பண்டாரநாச்சி (வயது-73) என்ற வயோதிபப் பெண்ணே இவ்வாறு தலையில் படுகாயங்களுக்குள்ளாகிய நிலையில் யாழ். போதனாவைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவத்தில் குறித்த வயோதிபப்பெண் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் அங்கிருந்து யாழ். போதனாவைத்தியசாலைக்கு மாற்றப்பட்டதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (பா)

அந்த ரயில் விபத்தின் சூத்திரதாரி யார்?

கறுப்பு பெட்டி தகவல்கள் ஆய்வுக்கு

நவீன ரயில்களில் கறுப்புப் பெட்டி பொருத்தப்பட்டிருப்பதனால் குருநாகல் பொத்துஹெர பிரதேசத்தில் இடம் பெற்ற விபத்துச் சம்பவம் தொடர்பில் யார் குற்றவாளி என்பது விரைவில் தெரிய வரும் என போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கம தெரிவித்தார்.

குறித்த விபத்துச் சம்பவம் தொடர்பான குற்றவாளி யாராக இருப்பினும் தராதரம் பாராமல் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நேற்று போக்குவரத்து அமைச்சில் நடைபெற்ற ஊடக வியலாளர் மாநாட்டின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதேவேளை, பொத்துஹெர விபத்திற்கு ரயில் ஊழியர்களின் கவனயீனமே மூல காரணம். இச்சந்தர்ப்பத்தில் இச்சம்பவம் தொடர்பான விசாரணைகளிலும் ஏனைய விசாரணைகளிலும் கறுப்புப்பெட்டி பெருமளவில் உதவும் எனவும் அவர் தெரிவித்தார். இதேவேளை,இந்த ரயில் விபத்துக் காரணமாக ரயில்வே திணைக்களத்திற்கு 168 மில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். அத்துடன் சம்பவம் தொடர்பில் 5 ஊழியர்கள் பணியிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளனர் எனவும் அமைச்சர் குமார வெல்கம குறிப்பிட்டார்.

வல்லை...

இராணுவத்தினருடன் அங்கு சென்று கைக்குண்டை மீட்டதாகவும் பொலிஸார் கூறினர். மேற்படி பகுதி இராணுவ முகாமாக பயன்படுத்தப்பட்ட நிலையில், அண்மையில் விடுவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

டுவிட்டரில்..

தோட்டை சர்வதேச இளைஞர் மாநாடு நடைபெறும் இடத்திலிருந்து டுவிட்டர் மூலம் பதிலளிக்கவுள்ளதாக ஜனாதிபதி தனது டுவிட்டர் இணையத்தளத்தில் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி...

மானிப்பாய் பிரதேச சபைக்கும்.

காரைநகர் பிரதேச சபையில் கடமையாற்றிய உள்ளூராட்சி உதவியாளர் கனகதுரை கரவெட்டி பிரதேச சபைக்கும்.

கரவெட்டி பிரதேச சபையில் கடமையாற்றிய திருமதி அன்னலிங்கம் நல்லூர் பிரதேச சபைக்கும்,

மானிப்பாய் பிரதேச சபையில் கடமையாற்றிய திருமதி கேதீஸ்வரி காரைநகர் பிரதேச சபைக்குமான கடிதங்களை இன்று ஆளுநரிடம் இருந்து பெறவுள்ளனர். என்று ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் தெரிவித்தார்.

மேற்படி அலுவலர்களை உரிய நேரத்தில் ஆளுநர் அலுவலகத்திற்கு வருகை தருமாறு உள்ளூராட்சித் திணைக்களம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளது.

இதேவேளை கடந்த முன்று மாதங்களுக்கு முன்னர் பிரதேசசபை செயலாளர் நியமனத்திற்காக வடக்கு மாகாண ஆளுநர் அலுவலக நேர்முகப்பரீட்சையில் தோற்றிய அலுவலர்களுக்கு செயலாளர் நியமனம் ஆளுநரினாலும் வடமாகாண பிரதம செயலாளரினாலும் வழங்கப்படவில்லையென தெரிவிக்கப்படுகிறது.

இனிவரும் காலங்களில் பட்டதாரிகளை முற்றாக தவிர்த்து முகாமைத்துவ உதவியாளர் தரம் II தரம் I மற்றும் சுற்றுப்புற தர அதிகாரிகளை நியமிப்பதற்கு வடக்கு மாகாண பிரதம செயலாளர் அலுவலகமும் வடமாகாண பொதுச்சேவை அலுவலகமும் நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தப்பிரதேச சபைகள் செயலாளர் நியமனங்களைத் தொடர்ந்து தொடர் இழுபறி நிலையில் இருந்த சபைகள் பொதுமக்களுக்கான சிறப்பு சேவைகள் கிடைக்கவுள்ளதாக ஆளுநர் அலுவலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இரு பொலிஸ் அதிகாரிகள் கடத்தல்; ஒருவர் சுட்டுக்கொலை மற்றவர் காயம்

நேற்று அதிகாலை நடந்த கொடூரம்

(குருணாகல்)

இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் கடத்தப்பட்டுள்ளனர். இவ்வாறு கடத்தப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்களில் ஒருவர் சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளார். மற்றையவர் காயமடைந்துள்ளார்.

குருணாகல் தம்புள்ள வீதியில் போக்குவரத்து கண்காணிப்பு கடமையிலிருந்த போதே இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்களும் இவ்வாறு கடத்தப்பட்டுள்ளனர். நேற்று அதிகாலை 2.00 மணியளவில் இவ்வாறு பொலிஸ் உத்தியோகத்தர்கள் கடத்திச் செல்லப்பட்டுள்ளனர்.

குருணாகல் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றி வந்த சம்பத் என்பவரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

படகமுவ காட்டுப் பகுதியில் வைத்து பொலிஸ் உத்தியோகத்தர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

இதன்போது ஒரு பொலிஸார் கொல்லப்பட்டார். ஒருவர் காயமடைந்தார் என்று பொலிஸ் பேச்சாளர் தெரிவித்துள்ளார்

சம்பவம் தொடர்பில் விசாரணை நடாத்த ஆறு பொலிஸ் குழுக்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

விபத்தில் கர்ப்பிணி மரணம்; சூத்திரதாரிக்கு சர்வதேச பிடியாணை

(கொழும்பு)

கொழும்பில் உள்ள பிரபலமான தனியார் வைத்தியசாலை ஒன்றின் பாதுகாப்பு பணிப்பாளர் ஒருவரைக் கைதுசெய்வதற்கான சிவப்பு அறிவித்தலை சர்வதேச பொலிஸார் மூலம் பிறப்பிக்கப்பட்டுள்ளனர்.

புறக்கோட்டை, குணசிங்கபுர பகுதியில் 5 மாத கர்ப்பிணிப் பெண் ஒருவரை மோதி விட்டு இந்தச் சந்தேக நபர் சிங்கப்பூருக்கு தப்பிச்சென்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த ஏப்ரல் மாதம் 27 ஆம் திகதி இடம் பெற்ற இந்தச் சம்பவத்தில் குறித்த பெண் சம்பவ இடத்தில் மரணமடைந்திருந்தார்.

இந்த நிலையில், இரவு வேளை களியாட்ட விடுதியிலிருந்து சந்தேக நபர் திரும்பியிருந்ததுடன், இவர் மதுபோதையிலிருந்ததாகவும் ஆரம்பக்கட்ட விசாரணையிலிருந்து தெரிய வந்துள்ளது.

மேலும், வெள்ளை ஜீப் ஒன்று விபத்துக்குள்ளான சம்பவம் கண்காணிப்புக் கமெராவில் பதிவாகியிருந்தது.

பழைய மாணவர் சங்கக் கூட்டம்

(தெல்லிப்பழை)

தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியின் பழைய மாணவர் சங்க வருடாந்த பொதுக் கூட்டம் எதிர்வரும் 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கல்லூரி அதிபர் ம.மணிசேகரம் தலைமையில் கல்லூரியின் துரையப்பா பிள்ளை கேட்போர் கூடத்தில் முற்பகல் 9.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

தமிழகம் சென்ற அகதிகள் மீது வழக்கு

அகதிகளாக சென்றவர்களில் குழந்தைகளை தவிர எஞ்சிய 5 பேர் மீதும் கடவுச் சீட்டுச் சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதையடுத்து அகதிகள் தயாபரராஜன், உதயகலா, தவேந்திரன், கணேஷ் சுதாகர், ரமேக்கா ஆகியோரை பொலிஸார் இராமேஸ்வரம் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் இரவு ஆஜர்படுத்தினர்.

ஆஜர்படுத்தப்பட்ட 5 பேரையும் இம்மாதம் 19 ஆம் தேதி வரை சிறையில் அடைக்குமாறு நீதிபதி சரவணகுமார் உத்தரவிட்டார். இதனை தொடர்ந்து அகதிகள் அனைவரும் சென்னை புழல் சிறைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

கொழும்பு வருகிறார் கோபாலகிருஷ்ணகாந்தி

சுதந்திரப் போராட்ட வீரரும் இடதுசாரி இயக்கத்தின் முன்னோடியுமான பேர்னாட் சொய்ஸா நினைவுப் பேருரை எதிர்வரும் 9 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வு 9 ஆம் திகதி மாலை 4.30 மணிக்கு 24 ஹோட்டன் பிளேஸ் கொழும்பு 7 இல் அமைந்துள்ள லக்ஷ்மன் கதிர்காமர் சர்வதேச கற்கை நிறுவகத்தில் விஞ்ஞான விவகார சிரேஷ்ட அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸ வித்தாரன தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் இலங்கையின் முன்னாள் இந்திய உயர்ஸ்தானிகரான ஸ்ரீகோபால் கிரஷ்ணகாந்தி இந்தியாவுக்கும் இலங்கைக்கும் குறுகிய தூரம் என்ற தலைப்பில் நினைவுப் பேருரை ஆங்கில மொழியில் நிகழ்த்துகிறார்.

இந்தியாவின் நிர்வாக சேவையில் 1968 ஆம் ஆண்டில் இணைந்து கொண்ட இவர் 85 ஆம் ஆண்டுவரை தமிழ் நாட்டில் பல்வெறு பணிகளை ஆற்றியுள்ளார். தொடர்ந்து இந்திய துணை ஜனாதிபதியின் செயலாளராகவும் ஜனாதிபதியின் செயலாளராகவும் பணியாற்றிய இவர் இலண்டனில் உள்ள இந்தியத் தூதரகத்தில் உயர் பதவி வகித்தவர்.

மேற்கு வங்காளத்தின் ஆளுநராகவும் தென்னாபிரிக்காவிற்கான இந்தியத் தூதுவராகவும் நோர்வே இலங்கை ஆகிய நாடுகளின் தூதுவராகவும் பணியாற்றியவர்.

கோபாலகிருஷ்ண காந்தி மகாத்மாகாந்தியின் நான்காவது மகன் தேவதாஸ் காந்தியின் மகன். தமிழக அரசியல் தலைவர் சி.ராஜகோபால் ஆச்சாரியின் மகள் வழி பேரன். அமெரிக்காவில் பேராசிரியராக பணியாற்றிய ராஜ்மோகன் காந்தியின் சகோதரர். சென்னையில் இயங்கி வரும் கலாச்சேத்திராவின் தலைவராகப் பணியாற்றும கோபாலகிருஷ்ணகாந்தி இலங்கைத் தூதுவராக பணியாற்றிய காலத்திய இலங்கை வாழ் இந்திய வம்சாவியினரின் மேம்பாடு குறித்து சிறப்பாக பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

சுங்க அதிகாரிகளிடம் சிக்கியது ஹெரோயின்

(கொழும்பு)

பாகிஸ்தானின் கராச்சி நகரிலிருந்து இலங்கைக்கு கூரியர் மூலம் அனுப்பப்பட்ட பொதியொன்றை சுங்கத் திணைக்கள அதிகாரிகள் நேற்று சோதனையிட்ட போது 7 இலட்சம் பெறுமதியான 232 கிராம் ஹெரோயின் போதைப் பொருள் அதற்குள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சத்திரசிகிச்சைக்கு பயன்படுத்தப்படும் கருவி ஒன்றில் இந்த போதைப்பொருள் மறைத்து வைக்கப்பட்டிருந்ததாக சுங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

7 ஆவது ஐ.பி.எல்

மும்பை 187/5
சர்மா - 59
போலார்ட் - 43
கௌதம் - 30
பட்டேல் 1 விக்கெட்டுக்கள்.



பெங்களூர் றோயல் 168/8
கைல் - 38
கோலி - 35
பட்டேல் - 26
மலிங்க, ஹர்பஜசிங் தலா 2 விக்கெட்டுக்கள்,
பெங்களூர் றோயல் 19 ஓட்டங்களால் மும்பை வெற்றி

79 ஓட்டங்களினால் இலங்கைக்கு வெற்றி

அயர்லாந்து மற்றும் இலங்கை அணிகளுக்கு இடையிலான முதலாவது சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இலங்கை அணி 79 ஓட்டங்களினால் வெற்றி பெற்றுள்ளது.

போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 8 விக்கெட்டுக்களை இழந்து 219 ஓட்டங்களை பெற்றுக் கொண்டுள்ளது. இலங்கை அணி சார்பில் நுவண் குலசேகர ஆட்டமிழக்காது 42 ஓட்டங்களையும் சந்திமால் 39 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய அயர்லாந்து அணி 39.5 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 140 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக் கொண்டது.

யானை வர்த்தகத்தில் அரசியல்வாதிகள்

பொதுபலசேனா குமுறல்

(கொழும்பு)

அமைச்சர்களின் பாதுகாப்பில் யானை வியாபாரம் இடம்பெற்று வருவதாக பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலபொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

இந்த மோசடி உடன் நிறுத்தப்பட வேண்டும் எனவும் இல்லாவிடின் யானை வியாபாரத்துடன் தொடர்புடைய நபர்களின் பெயர் விபரங்கள் வெளியிடப்படும் என கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் தேரர் எச்சரிக்கை விடுத்தார்.

புத்த தர்மத்தை முன்னால் வைத்துக் கொண்டு இந்த மோசடி இடம்பெறுவதாக ஞானசார தேரர் தெரிவித்துள்ளார். அண்மையில் யானைகள் கொலை செய்யப்பட்டு கொண்டு செல்லப்பட்டுள்ளதாக அவர் சுட்டிகாட்டியுள்ளார்.

பொதுபல சேனா இனி தனியாக அல்லாது பொலிஸாருடன் இணைந்து சுற்றிவளைப்புக்குச் செல்லும் என ஞானசார தேரர் குறிப்பிட்டுள்ளார்.

காட்டில் இருக்கும் யானைகளின் எண்ணிக்கையை கணக்கிட வேண்டிய அதிகாரிகள் வீட்டில் இருக்கும் யானைகளின் எண்ணிக்கையை கணக்கிட முடியாதுள்ளமை கேலியானது என அவர் தெரிவித்துள்ளார்.

ஆபிரிக்காவுடன் வர்த்தக உறவு; கொழும்பில் இருதரப்பு பேச்சு

ஆபிரிக்காவிற்கும் இலங்கைக்கும் இடையிலான வர்த்தக கலந்துரையாடல் ஒன்று அமைச்சர் றிஷாட் பதியுதீன் தலமையில் நேற்று முன்தினம் கொழும்பில் முதல் தடவையாக இடம்பெற்றுள்ளது.

கொழும்பில் இடம்பெற்றுள்ள இக்கலந்துரையாடலில் இலங்கைக்கான லெசோத்தா நாட்டின் உயர் ஸ்தானிகர் பொதாரா சிகோனே கருத்து வெளியிடுகையில், நாங்கள் இலங்கை நாட்டின் தேயிலை ஏற்றுமதி கம்பனியுடன் எமது இரு தரப்பு வியாபார நடவடிக்கைகளை ஆரம்பிக்க முடியும் எனவும், அதனைத்தொடர்ந்து விவசாயம் சம்பந்தமான ஒத்துழைப்பினை மேம்படுத்த முடியும் எனவும் கூறியுள்ளார்.

இதற்கான அழைப்பினை தற்போதய வர்த்தக மற்றும் கைத்தொழில் அமைச்சர் றிஷாட் பதியுதீனுக்கு விடுத்துள்ளேன். எமது நாட்டிற்கு தேவையான உணவு வகைகள் தென்னாபிரிக்காவில் இருந்தே இறக்குமதி செய்யப்படுகின்றன. எனவே இலங்கையுடனான இந்த இருதரப்பு பேச்சு வார்த்தைகளை மேற்கொள்வதன் மூலம் வியாபார ஏற்றுமதி, இறக்குமதிகளை மேற்கொள்ள முடியும் என நம்புகிறேன் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கு பதிலளிக்கும் முகமாக அமைச்சர் றிஷாட் பதியுதீன் கருத்து வெளியிடுகையில், இலங்கையானது தெற்காசியாவில் அமைந்துள்ள ஒரு வளர்ந்து வரும் மூலவளம் மிக்க நாடாகும். லெசோத்தா நாடானது வளர்ந்து வரும் ஏற்றுமதி, இறக்குமதி நாடாகும். எனவே அவர்களுடன் ஏற்றுமதி, இறக்குமதிகளை மேற்கொள்வதன் மூலம் நம் நாடானது பெருமை கொள்வதுடன், எமது அமைச்சும் அவர்களை வரவேற்கிறது.

லெசோத்தா நாட்டினுடைய ஆடை உற்பத்தி நிறுவனத்தை எமது நாட்டிற்கு வரவேற்பதுடன், எமது நாட்டின் பங்கு விற்பனர்களாக மாறி எமது நாட்டை உயர் நிலைக்கு கொண்டு செல்ல அவர்களின் பங்களிப்பும் உதவும் என நம்புகிறோம். நானும் எமது அமைச்சும் அவர்களுக்கு பூரண ஆதரவினை வழங்குவோம் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் எம் நாட்டின் சிறந்த தரம் மிக்க தேயிலையை கொள்வனவு செய்யவும் அவர்களுக்கு ஆதரவு வழங்குவோம் எனவும் தெரிவித்துள்ளார். இப்பொழுது எமது நாடு பல்வேறு ஆபிரிக்க நாடுகளுக்கு அரிசியினை ஏற்றுமதி செய்கிறது. இவ்வாறானதொரு திறந்த விவசாய பொருளாதாரத்தை மேம்படுத்துவதில் பெருமையுடைகிறோம் எனவும் அமைச்சர் கூறியுள்ளார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 மே 07 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.